# பிரயோக உளவியல் II
# APPLIED PSYCHOLOGY II



JPL
C7449

ம் தனபாலன்
cation, Dip in Psychology.
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரயோக உளவியல் - II

# APPLIED PSYCHOLOGY - 11

166091

47

பாலசுப்பிரமணியம் தனபாலன்

BA, PGDE (Merit), M.Phil.in. Education, Dip in Psychology.

[illegible]

[illegible]

வெளியீடு

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயோக உளவியல் - II

# APPLIED PSYCHOLOGY - 11

KOHA JPL

166091

பாலசுப்பிரமணியம் தனபாலன்

BA, PGDE (Merit), M.Phil.in. Education, Dip in Psychology.

*உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)*

*யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.*

7441CC

வெளியீடு

கங்கை பிறின்டேர்ஸ்

781 கே. கே. எஸ் றோட் சிவலிங்கப்புளியடி

யாழ்ப்பாணம்.

பொது சன நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166091CC.

நூலின் தலைப்பு : பிரயோக உளவியல் II

ஆசிரியர் : பாலசுப்பிரமணியம் தனபாலன்
BA, PGDE (Merit), M.Phil.in. Education, Dip in Psychology.
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

முதற்பதிப்பு : ஒக்டோபர் 2005

பதிப்புரிமை: திருமதி . கர்ணி . தனபாலன்

தாள் அமைப்பு : 1/8

பக்கங்கள் : Viii + 106

158

பிரதிகள் : 2000

அச்சுப் பதிப்பு : கங்கை பிறிண்டேர்ஸ்
781 கே.கே.எஸ் றோட் சிவலிங்கப்புளியடி
யாழ்ப்பாணம்.

விலை : 200 ரூபா

Title : Applied Psychology

Author : Mr. Balasubramaniam Thanabalan
Vice President (Academic)
Jaffna National College of Education

First Edition : October 2005

Copy rights : Mrs. Karni Thanabalan

No of Copies : 2000

Printers and Publisher : Gangai Printers, 781, K.K.S Road Sivalingapuliyady Jaffna.

Price : Rs 200/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணமும் காணிக்கையும்

என்னை வளர்த்து ஆளாக்கி
கல்வியியலாளனாக மலரவைத்த
என் தந்தை ஓய்வு பெற்ற அதிபர்
**இராசகாரியர் பாலசுப்பிரமணியம்**
அவர்களுக்கு இந்நூலைச் சமர்ப்பித்து
காணிக்கையாக்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கலாநிதி . சபா. ஜெயராசா அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

மேலை நாடுகளின் பல்கலைக்கழகங்களிலே பட்டப்படிப்புக்குரிய பாடத் தெரிவுகளில் உளவியற் பாடம் தெரிவுபட்டியலில் முதலிடத்தைப் பெறத் தொடங்கியுள்ளது. மனித வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும், அனைத்துப் பரிமாணங்களிலும் உளவியல் ஊடுறுவத் தொடங்கியுள்ளமையின் வெளிப்பாடாக இந்தப் பாடத் தெரிவு வளர்ச்சி மேலெழுந்துள்ளது. உளவியலின் வளர்ச்சி எமது கல்விச் சூழலின் பல்வேறு தளங்களிலும் மலர்ச்சி கொள்வதன் விளைவுகளில் ஒன்றாக இந்நூலாக்கம் அமைந்துள்ளது.

உளவியலைக் கற்கமுனைவோர் முதலிலே பல்வேறு உளவியல் சிந்தனா கூடங்கள் பற்றிய அறிவை இணைத்து முன்னெடுக்க வேண்டியுள்ளது. பொதுவாக மூன்றாம் உலக நாடுகளின் உளவியற் கல்வியும், சீர்மிய நடவடிக்கைகளும் பெருமளவில் நடத்தை வாதம் தழுவிய முனைப்பைப் பெற்றுள்ளமையால் உளவியலின் ஏனைய சிந்தனா கூடங்கள் பற்றிய காட்சிகள் அறியப்படாமலும் விடப்படுகின்றன.

மேலும் உளவியற் கல்வியிலே காணப்படும் பிறிதொரு பின்னடைவு "போலி உளவியலின்" வளர்ச்சியால் ஏற்படும் எதிர் நிலைப்பாதிப்பாகும். தருக்க நிலையானதும், விஞ்ஞான பூர்வமானதும் கொண்ட ஒரு புலமை நெறி என்ற வரம்புகளை மீறி, கற்பனைகளையும், புனைவுகளையும் உள்ளடக்கிய தொகுதியாக உளவியலை மாற்றியமைப்பதால் எழும் அறிவுக் காட்சியே போலி உளவியலாகும். சீர்மியத்துறையிலே பொதுவாக இந்தப் போலி உளவியலின் ஊடுறுவல் மேலைநாடுகளிலும், மூன்றாம் உலக நாடுகளிலும் காணப்படுகின்றன. இவற்றை நீக்க இது போன்ற நூலாக்கங்கள் தேவையாகவுள்ளன.

உளவியல் துறைசார் விசைகளினால் உருவாக்கப்படும் அறைகூவல்களை எதிர்கொள்வதற்கும், புலமை நேர்மையுடன் உளவியலை வளர்ப்பதற்கும், பயனுறுதிமிக்க நூலாக்கங்கள் வேண்டப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தேவையை எமது சூழ் புலத்திலே நிறைவேற்றுவதில் அயராது உழைத்து வருபவர் இந் நூலாசிரியர் திரு. பா. தனபாலன். தாம் பெற்ற அறிவை, அனுபவங்களை மாணவர்களும், ஏனையவர்களும் நுகர்ந்து உயர்ந்த கல்விப் பயனைப் பெறுமாறு ஆக்கபூர்வமான எழுத்தாக்கத் தொண்டு புரியும் நூலாசிரியரின் சேவை பாராட்டத்தக்கன.

உளவியலின் இரு பரிமாணங்களாகிய கோட்பாட்டு உளவியலையும், பிரயோக உளவியலையும், முதன்மைப்படுத்தி இந்நூலாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோட்பாடுகளின் அடிப்படையிலே பிரயோக நிலைகளைச் செம்மைப்படுத்தவும், பிரயோகங்களில் இருந்து கோட்பாடுகளை நோக்கி நகரவும் வல்ல இடைவினைகளை முன்னெடுக்கக்கூடிய ஆக்கமாக இந்நூல் அமைந்துள்ளது.

உளவியற் கல்வி அனுபவமும், உளவிலலைப் பயிற்றுவிக்கும் அனுபவமும், பிரயோக நிலையில் மாணவர்களின் இடைவினைகளோடு சங்கமிக்கும் அனுபவமும் ஆற்றலும், ஆளுமையும் மிக்க நூலாசிரியரின் சிறந்த படைப்பாக இந்நூல் மிளிர்கின்றது. யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பாரம்பரியத்தில் ஆசிரிய வாண்மைச் செயற்பாடுகளிலே நூலாக்கங்களையும், நூல் வெளியீடுகளையும், நூற்பண்பாட்டையும் ஒன்றிணைத்தல் கல்விப் புலமை நிலையில் பாராட்டுதல்களுக்கு உரியதாகும்.

பேராசிரியர் சபா. ஜெயராசா
கல்வி உளவியற் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

உளவியல் துறையின் வரலாறு மனித ஆரம்பகால வரலாற்றிலிருந்து பல்வேறு பரிமாணங்களில் பின்னிப்பிணைந்து வளர்ந்துள்ளது. மானுடவியல், தத்துவம், வரலாறு, பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், அரசியல், கல்வி, விஞ்ஞானம், சமூகவியல், எதிர்காலவியல் என்ற துறைகளினூடாக மனித இயல்புகள் நடத்தைகள் ஆராயப்படுகின்றன. இத்துறைகள் தத்தம் அம்சங்களினூடாகவே மனித நடத்தை இயல்புகளை ஆராய்கின்றன. உளவியல் இத்துறைகள் சார்ந்து வளர்ந்ததுடன்; இத்துறைகளின் ஆய்வுகளைப் போல் அன்றி மனித நடத்தை இயல்புகளையும், அவாக்களையும் சிறப்பாக நடைமுறைப்படுத்த பிரயோக உளவியல் வழிகாட்டி நிற்கின்றது.

உளவியல் கற்கையினூடாக நாம் மனித நடத்தை இயல்புகளை அறிய முயல்கின்றோம். அவ்வாறெனின் உண்மையில் இந்த முயற்சி எம்மை நாமே விளங்கிக்கொள்ள, அறிந்து கொள்ளச் செய்யப்படும் ஒரு முயற்சியாகும். பிற மனிதர்களது நடத்தை இயல்புகள் எம் அனைவரையும் பாதிக்கின்றன. ஒவ்வொரு தனியாளும் தனது நடத்தைகளைச் சீர்திருத்தி அமைத்துக் கொண்டால் தனக்கும், பிறருக்கும் நன்மை செய்பவராகின்றார். இதற்குப் பிரயோக உளவியலறிவு பேருதவியளிக்கின்றது.

எனவேதான் இன்று உலகம் முழுவதிலும் முதற் துறைப்பாடமாக உளவியல் பாடத்துறை கற்பிக்கப்பட்டு பிரசித்தி பெற்று வருகின்றது. இந்நிலையில் எம்மண்ணிலும் உளவியல் சார்ந்த விருத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியுள்ளது. யுத்தத்தின் தாக்கங்கள் மாணவர்கள், ஆசிரியர்கள், சமூகத்தவர்களின் உள்ளங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. இவ் வருடம் யுனெஸ்கோ ஆய்வுகளின் படி ஒன்றரை லட்சம் மாணவர்கள் உள நலம் குன்றி இருப்பதாகவும், உலகிலேயே குற்றங்கள், சிறுவர்பாலியல் துஸ்பிரயோகம், குடிகாரர் தொகை தற்கொலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலேயே மூன்றாவது நாடாக இலங்கை உள்ளமையை வெளியிட்டுள்ளது. இவற்றிலிருந்து மீள உளவியல் பிரயோக அறிவு அவசியமாகும். இதற்கிணங்க பிரயோக உளவியல் **I** என்ற நூலை கடந்த வருடம் வெளியிட்டேன். அதன் தொடர்ச்சியாக பிரயோக உளவியல் **II** என்ற நூல் இப்போது வெளிவருகின்றது.

பல ஆண்டுகளைக் கல்வி உளவியல், கற்பித்து வந்த என்னை இது தொடர்பான நூலை எழுத ஆற்றுப்படுத்திய பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள், மேலும் ஊக்குவிப்பைத் தந்த பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், மற்றும் உளவியல் கற்பிக்கும் கல்வி-யியலாளர்கள், மாணவர்களின் வேண்டுதல்களுக்கு இணங்க இப்பிரயோக உளவியல் நூல் தொடரை எழுதிவருகின்றேன். இவ்வனைவருக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வெளியிட்ட கங்கை பிறிண்டேசினருக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பாலசுப்பிரமணியம் தனபாலன்**

**துவாரகை வீதி**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில், யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

பக்கம்


| | | |
|---|---|---|
| ✿ | அணிந்துரை | |
| ✿ | முகவுரை | |
| 01. | பிரயோக உளவியலின் புதிய செல் நெறிகள் | 01 |
| 02. | மனித வள விருத்தியில் ஆளுமை | 07 |
| 03. | ஆளுமை விருத்தி பற்றிய உளவியற் கோட்பாடு | 11 |
| 04. | சமநிலை ஆளுமையின் தேவை | 21 |
| 05. | மனித சாதனைகளுக்கான ஊக்கல் | 26 |
| 06. | உள ஆற்றல் திறனான நுண்மதி | 31 |
| 07. | பிரயோக உளவியலில் ஆக்கத்திறன் | 40 |
| 08. | மனித வாழ்க்கைக் கால விருத்தி | 47 |
| 09. | மனிதர்களில் நினைவு கூறலும் மறத்தலும் | 59 |
| 10. | வகுப்பறை முகாமைத்துவமும் உளவியலும் | 66 |
| 11. | புலக்காட்சியும் சாயலும் | 76 |
| 12. | எல்லா ஆசிரியர்களுக்கும் அவசியமான விசேட கல்வி | 84 |
| 13. | ஆற்றுப்படுத்தல் சீர்மியத்துக்கான நவீன உளவியல் பிரயோகங்கள் | 96 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயோக உளவியலின் புதிய செல் நெறிகள்

உலகளாவிய ரீதியில் விஞ்ஞான – தொழில் நுட்ப அபிவிருத்திகள் இன்று பிரமிக்கத்தக்க அளவில் ஏற்பட்டுள்ளன. இவ் அபிவிருத்திகளால் மனித வாழ்வு எளிதாக-வும், இலகுவாகவும் உள்ளது. பல நன்மை-கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் மனிதர்களு-டைய சொந்த வாழ்க்கையில்; துன்பங்களும், துயரங்களும், மன அமைதி இன்மைகளும், மனமுறிவுகளும், உளக்-கோளாறுகளும், மன அழுத்தங்களும், விரக்தியும் என்றும் இருந்திராத அளவு அதிகரித்துள்ளன.

இவற்றிலிருந்து விடுதலை பெறவும் மகிழ்ச்சியாக வாழவும் பிரயோக உளவியல் வழிகாட்டுகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் உளவியல் கல்வி முதன்மைப் பாட நெறியாக வளர்ந்து வருகின்றது. உளவியல் (Psychology) என்ற சொல், கிரேக்க மொழிச் சொற்களான சைக்கி (Psyche) என்ற உயிரை அல்லது காதல் தெய்வமான ஈரோசை உருவகப்படுத்துகின்றது. லோகஸ் (Logus) என்ற சொல் விஞ்ஞானம் அல்லது மேற்குறிப்பிட்ட கிரேக்க காதல் தெய்வத்தின் வண்ணத்துப் பூச்சியின் அழகிய இறக்கையை கருத்துரைக்கின்றது.

மகிழ்ச்சிகரமாக மனிதன் வாழ; அன்பு, பொறுமை, மனநலம், சுயமதிப்பு, ஒத்துழைப்பு, மனநிறைவு பெற பிரயோக உளவியல் செயன்முறை-கள் உதவுகின்றன. அன்-பும், காதலும், கருணை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் பொருந்திய விழுமிய வாழ்க்கை வாழவும், மனித வள அபிவிருத்தியை முதன்மைப்படுத்தவும், மன நலவியல் (Mental Hygine) துறையை மேலும் விரிவான பயன்பாடுடையதாக்கவும் பிரயோக உளவியல் உதவுகின்றது. மனித உறவுகளைப் புரிந்து கொள்ளவும், உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், பரிமாறவும், மனச்சுமைகளைக் குறைக்கவும், மனிதர்களிடையே தூய்மையான உறவுகளை ஏற்படுத்தவும் பிரயோக உளவியல் இயல்பாக்கங்களை ஏற்படுத்துகின்றது.

மனிதனின் புறச் செயல்கள், நடத்தைகளை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன்மூலம் அவை; எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும், சுற்றாடல் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே பிரயோக உளவியலாகும். இதன் நோக்கங்களாக; மனித நடத்தைகளை விபரித்தல், முன் கூட்டியே கணித்தல், கட்டுப்படுத்தல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், உள ஊக்குவிப்புக்களை ஏற்படுத்தல், ஆளுமைகளை விருத்தியாக்கல், ஆக்கத்திறன் - நுண்ணறிவு – ஆய்வுத்திறன், மற்றும் கற்றவைகளை விருத்தியாக்குதல், இவற்றினூடாக மகிழ்ச்சிகரமான உளநலம் மிக்க மனித வாழ்வை ஏற்படுத்தலாகவுள்ளது. இதற்கு நவீன பிரயோக உளவியல் செல் நெறிகள் மன நலவியலின் அடிப்படைகளைச் செயன் முறைப்படுத்துகின்றன.

மனநலம் என்பது மனக்கோளாறுகள் இல்லாமையுடன் தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியையும் பயனையும் விளைவிக்கும் வகையில் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பொருத்தப்பாட்டுடன் செயற்படுவதைக் குறிக்கின்றது. இங்கு பொருத்தப்பாட்டினைப் பெறுதல் என்பது எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய முடிவான செயல் அன்று. சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப ஒருவர் தொடர்ந்து இச்செயலில் ஈடுபட வேண்டும். இதன் அவசியத்தைப் பிரயோக உளவியல் எடுத்தியம்புகின்றது.

மனிதர்களிடையே மன நோய்கள், மனத்தாக்கங்கள், கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கவும், மன நலத்தைப்பேணி, மன நோய்களில் இருந்து விடுபடச் செய்வதற்கும் உதவும். பிரயோக அறிவியலாக மன நலவியல் உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க உள மருத்துவக் கழகம் (Americar Psychiatri Association) மன நலவியலைப் பின்வருமாறு வரையறுக்கின்றது. "மனநலவியல் என்பது மனக் கோளாறுகளை அவை ஏற்படும் முன்பே தடுத்தும், ஏற்பட்ட பின்பு தொடக்கத்திலேயே சிகிச்சை அளித்தும், மனக்கோளாறுகளுக்கு ஆட்பட்டவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வழிமுறைகளைப் பரப்புவதையும், மன நலத்தைப் பேணும் முறைகளையும் பயிற்சிகளையும் உள்ளடக்கியது ஆகும் என்கின்றது.

### மன நலம் பாதிக்கப்படுவதற்கான காரணங்கள்:

1. நவீன மனித வாழ்க்கை முறைமையில் தேவைகளும், பிரச்சினைகளும் பெருகியுள்ளமை.
2. குடும்ப உறவினர்களிடையே புரிந்துணர்வுகள், ஊடாட்டங்கள் அற்ற நிலை.
3. போட்டிகள், பூசல்கள், பொறாமைகள் அதிகரித்து அவற்றினால் ஏற்பட்ட தாக்கங்கள், கவலைகள்.
4. வாழ்க்கை பற்றிய அச்ச உணர்வுகள்.
5. காப்புணர்ச்சி எல்லோரிடத்திலும் குறைந்து காணப்படல்.
6. சமயம், குடும்பம் ஆகிய முக்கிய அலகுகளின் செல்வாக்குகள் குறைந்துள்ளமை.
7. யுத்தங்கள், இயற்கை அனர்த்தங்களின் தாக்கங்கள்.

நான் உயர்தரம் கல்வி பயிலும் மாணவன் வீட்டிலும், பாடசாலையிலும் எனக்கு அதிக கட்டுப்பாடுகள் போல் தெரிகிறது. ஆனால் சமூகத்தில் பெருமளவு சுதந்திரம் உள்ளது. எனது பிரச்சினைகள் தொடர்பாக எவரும் கரிசனை எடுப்பதாக இல்லை. படிப்பதற்கும் பயமாக உள்ளது. ஊரில் சமூகவிரோத செயற்பாடுகளைச் செய்கின்றேன். இரவில் நித்திரை வருவதில்லை. தற்போது என்னை உளவள நிபுணரிடம் எனது பெற்றோர் அனுப்பியுள்ளனர். எனக்கு மன நின்மதி கிடைக்குமா?

1. இவருக்கு நிம்மதியை வழங்க குடும்பத்தின் பங்களிப்பையும் பாடசாலையின் பங்களிப்பையும் தருக?
2. மன நலம் பற்றி பிரயோக உளவியலறிஞர் ஹேட்பீல்டு (Hadfield) தெரிவிப்பது என்ன? மனநலம் மிக்கவரின் பண்புகளைத் தருக?

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடைகள்:**

1. *குடும்பப்பங்களிப்பு:* தேவையற்ற கட்டுப்பாடுகளை நீக்குதல், அடிப்படை வசதிகளை அளித்தல், குடும்பப் பிணக்குகளைத் தீர்த்து பரிவுடன் அணுகுதல், அவரது தனியாள் வேற்றுமை, விருப்பு, வெறுப்புக்களை அறிந்து இயைபாக்கச் செயன்முறைகளை மேற்கொள்ளல்

   *பாடசாலை பங்களிப்பு:* மகிழ்சிகரமான கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தல், பயனுள்ள – கவர்ச்சிகரமான கற்பித்தல், ஆசிரியர் சிறந்த உறவைக் கட்டி எழுப்புதல், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் (Co –curricular activies) மூலம் சமநிலை ஆளுமையை விருத்தியாக்கல்.

2. *ஹட்பீல்டு :* "மனநலம் என்பது ஒருவனது ஆளுமையின் நிறைவான, இசைவான செயற்பாட்டைக் குறிக்கும். இது ஒருவன் தனக்கும், சமூகத்திற்கும் நிறைவைத் தருகின்ற செயல்முறையாக இருக்கும்.

   *மனநலம் மிக்கவரின் பண்புகள் :* அமைதியும், மகிழ்ச்சியுமான வாழ்க்கை, வெளி – உள் போராட்டங்களின் விளைவுகளால் பாதிக்கப்படாமை, தனது வல்லமைகள், குறைபாடுகளை உணர்ந்து செயலாற்றல், பிறருடன் ஒத்துழைத்து நட்புறவாகி காப்புணர்வு பெறல், வாழ்க்கை நோக்கங்களுக்கேற்ற செயலாற்றுகை, சமநிலை ஆளுமைத் தன்மை, உடல் - உள்ளம் - சமூகம் - ஆன்மீகம் என்பவற்றுடனான உன்னத மேம்பாடுடையவராக இருத்தல்.

## *பொருத்தப்பாடின்மை – நெறிபிறழ்வு :*

சமகால வாழ்வியலில் குடும்பம், பாடசாலை, சமூகக் காரணிகளின் தாக்கங்களால் பாதிப்படைந்தவர்களின் நடத்தைகள் பொருத்தப்பாடற்றவையாக (Maladjustment) மற்றும் நெறி பிறழ் நடத்தையாகி (Delinquency) விடுகின்றன. மன முறிவுகளும், மனப் போராட்டங்களும் இதற்கு வலுச் சேர்க்கின்றன. தனி மனிதர்களிடம் பல தேவைகள் (Needs) காணப்படுகின்றன. இவை நடத்தை-களுக்குப் பின்னால் இருந்து இயக்கும் ஊக்கிகளாகும். தேவைகளை நிறைவு செய்யும் இலக்கை நோக்கி முயற்சிக்கின்ற போது தொடர்ச்சியான தடைகள் - இடையூறுகள் தோன்றுகின்ற போது மன முறிவுகளும் மனப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களும் ஏற்படுகின்றன. இதன் விளைவுகளே பொருத்தப்பாடின்மையும், நெறிபுறழ்வுகளாகவும் ஏற்படு-கின்றன.




மனிதன் தனது வாழ்க்கையின் இலக்கை அடையச் செய்கின்ற துலங்கல்களை அடையவிடாமல் தடுத்து நிறுத்தும் காரணிகளால் மனப்போராட்டங்களும் நெறிபிறழ்களும் ஏற்படுகின்றன.

*நெறிபிறழ்வு பொருத்தப்பாடின்மை, நடத்தை, பற்றிய எண்ணக்கருப்படம்*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறிபிறழ்வுகள் பெரும்பாலும் முரண்பட்ட மன எழுச்சிகளால் ஏற்படும் மனப் போராட்டங்களின் தீவிர விளைவுகளாகும். உலகம் முழுவதுமே இதைத் தீர்ப்பதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரயோக உளவியல் பல தீர்வு நடைமுறைகளை சமுதாய நல உளவியல் என்ற எண்ணக்கருச் செயன் முறைகளினூடாக மேற்கொண்டு வருகின்றது.

***சமுதாய நல உளவியல் :***

பிரயோக உளவியலில் மிக அண்மையில் நிகழ்ந்துள்ள புரட்சிகரமான வளர்ச்சிகளில் ஒன்றாக சமுதாய நல உளவியல் அமைந்துள்ளது. மனிதருடைய நடத்தைகள் பிரச்சினைகளையும், சமுதாயம்சார், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான உள்ளார்ந்த ஆற்றல் பெற்றுள்ள இடமாகச் சமுதாயம் கருதப்படுகின்றது. சமுதாய நல உளவியல் மனிதப்பிரச்சினைகளுக்கு ஏற்றதோர் புதிய அணுகுமுறையாக விளங்குகின்றது.

மனிதப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குச் சமுதாயச் சூழ்நிலையின் ஆற்றல்களை பயன்படுத்துதல் என்ற வகையில் மனநலப்பணியாளர்கள், ஆசிரியர்கள்; உள – நெறிபிறழ்வுப் பிரச்சினைகள் அவர்களைத் தேடி வருவதற்குக் காத்திருப்பதைவிட, தாமே அவற்றைத் தேடிச்சென்று தீர்க்க வேண்டும் என்பதை சமுதாய நல உளவியல் இயம்புகின்றது.

சமூகம், பாடசாலை, குடும்பங்களில் வாழ்கின்றவர்கள்; மெய்ப்பாட்டு நெருக்கடி, மன முறிவு, பொருளாதார மனமுறிவு, ஏழ்மை, குடும்பத்தினர் ஒருவரின் இழப்பு, பிளவுபட்ட குடும்பம், திருமண முறிவு, பாடசாலையை விட்டு இடைவிலகல், பாலியல் பிரச்சினைகள், குடிபோதைப்பொருள் பாவனைகள், வன்முறைகள், யுத்தம் இயற்கை அழிவுத் தாக்கங்களுக்கு உட்பட்டவர்களுக்கு உளவியல் ரீதியான ஆதரவை வழங்கி தீர்வுகளைக் காணவும் சமுதாய நல உளவியல் வழி செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வள விருத்தியில் ஆளுமை

பிரயோக உளவியல் இன்று மனித வள விருத்தித்துறையாகவே அபிவிருத்தியடைந்துள்ளது. இதற்கு ஆழமானதும் - விரிவானதுமான பொருள் கொண்ட ஆளுமை (Personality) பெரும் பங்காற்றுகின்றது. Personality என்ற சொல் லத்தீன் மொழியிலுள்ள 'பர்ஸொனா' என்ற சொல்லில் இருந்து பிறந்தது. நாடக மேடையில் பழைய காலத்தில் நடிப்பவர்கள் தாங்கள் ஏற்றிருக்கும் பாத்திரத்தின் இயல்புகளுக்குத் தக்கபடி அணிந்திருந்த முகமூடியை 'பர்ஸனாலிடி' என்ற லத்தீன் சொல் குறிக்கின்றது. முன்னைய காலத்தில் ஒருவனது பண்புகளைக் குறிக்கும் வெளித்தோற்றமே ஆளுமை எனப்பட்டது. ஆளுமையானது ஒருவனது தனித்தன்மை வாய்ந்த அமைப்பு (Unique Pattern) என்கிறார் உளவியலறிஞர் கில் போர்ட்.

பிரயோக உளவியலில் ஆளுமை என்பது; ஒரு உயிரியல் உயிரிக்கும் (Biological Organism), அதன் சமூக மற்றும் பிற உலகுக்கும் இடையே நடக்கும் ஊடாட்டத்தின் விளைவாக உருவாக்கிய தனித்தன்மையாக இருக்கலாம். உட்வொர்த் என்ற அறிஞர்; ஒரு மனிதன் கருவுற்றதிலிருந்து தன் பாரம்பரியத்தினாலும், சூழ்நிலை-யினாலும் பெற்றுள்ள உள்ளார்ந்த மனப்போக்குக்கள், உளத்துடிப்புக்கள், செய்முறைகள் உடல் வேட்கைகள், இயல்பூக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பே ஆளுமை என்கின்றார். குழந்தை தாயின் கருப்பையில் கருக்கட்டி படிப்படியாக வளர்ச்சியடையும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களுமே ஆளுமை விருத்திக்கான அடிப்டைகளாகவுள்ளன. தாயின் போசாக்குணவு உளநலம், பாதுகாப்பு என்பனவும் குழந்தையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துவதை உயிரியல் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனது பாடசாலை மிகச் சிறந்த முறையில் வளர்ந்து வருகின்றது. பாடசாலை அதிபர் என்ற வகையில் பாடசாலை முகாமைத்துவம் தொடர்பாக நான் விரும்பியதை ஆசிரியர்கள் பணியாளர்கள், மாணவர்களைக் கொண்டு, அவர்களது விருப்புடன் செய்து முடிக்கின்றேன். ஒவ்வொருவரின் வளர்ச்சிக்காகவும், ஆளுமை விருத்திக்காகவும் பாடசாலையில் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுககின்றேன். ஒரு அதிபரின் கூற்று.

1. ஆளுமையின் சிறப்பியல்புகளை (Characteristics of Personality) வரிசைப்படுத்துக?
2. ஆளுமை பற்றி ஆல்போர் (G.W. Allport) என்ற பிரயோக உளவியலறிஞர் தெரிவித்த வரைவிலக்கணத்தைத் தருக?
3. ஆளுமையைத் தீர்மானிக்கும் காரணிகளை எழுதுக?
4. ஆளுமையை அளவிடும் முறைகளை வகைப்படுத்திக் காட்டுக?
5. ஆளுமை பற்றி சிரில் போட், N.S – மன், ஆர்னஸ்ட கில்பாட் ஆகியோர் தெரிவித்த வரைவிலக்கணங்களைத் தருக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை

**விடைகள் :**

1. ***ஆளுமையின் சிறப்பியல்புகள்:*** தனித்தன்மை வாய்ந்தது, தீர்க்கமான வெற்றிகரமான முகாமைத்துவப் பண்பாகவுள்ளது. சூழ்நிலைக்குத் தக்கபடியாக சரியான முடிவுகளை எடுக்க வழிகாட்டுவது சமூகச் சூழ் நிலைகளினால் ஆளுமை உருவாக்கப்படுகின்றது. சமூகத்தில் ஒருவன் எவ்வாறு நடந்து கொள்கின்றான். சமூகத்திலுள்ள பிறர் அவரது நடத்தையைப்பற்றி என்ன எண்ணுகின்றனர் என்பதைப் பொறுத்தும் ஆளுமை அமைகின்றது. ஆளுமை மரபு - சூழ்நிலை ஆகிய இரண்டின் விளைவுகளாகவுள்ளது.

2. ***ஆல் போர்ட்டின் ஆளுமை வரைவிலக்கணம்*** – இது ஒவ்வொரு மனிதரிடமும் குறிப்பிட்ட ஒருவகையில் அவனது உடல் மனப்பண்புகள் சேர்ந்து ஒழுங்கமைந்திருக்கும், இவ் ஒழுங்கமைப்பின் இயல்பு மனிதனுக்கு மனிதன் சிறிதேனும் மாறுபட்டிருக்கும். தனிமனிதன் ஒருவன் தன் சூழ்நிலையில் எவ்வாறு செயற்படுகின்றான் என்பது இவ்வொழுங்கமைப்பின் தன்மையைப் பொறுத்ததாகும். இத்தகைய உடல் - மனப் பண்புகளின் தனிப்பட்ட ஒழுங்கமைப்பு ஒருவனது ஆளுமையாகும். இது சூழலுக்குப் பொருத்தமான விதத்தில் உண்டாகும் தனிச்சிறப்புடன் கூடிய சீராக்கம் அல்லது சீராக்கத்தைத் தீர்மானிக்கும் தனிப்பட்ட ஒருவரிடையே இருக்கும் உளவியல் முறைகளின் செறிவான ஒழுங்கமைப்பாகும்.

3. மனிதன் உடல், உள்ளம் சார்ந்த ஒரு சமூக உயிரியாவான் ஆகையால் அவனுடைய ஆளுமையைத் தீர்மானிப்பதில் உயிரியல், சமூக, உளவியல் காரணிகள் பெரும் செவ்வாக்குடன் திகழ்கின்றன. இவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

**ஆளுமைக் காரணிகள்**

| உயிரியல் காரணிகள் | சமூகக் காரணிகள் | உளவியல் காரணிகள் |
|---|---|---|
| Biological Factors | Social Factors | Psychological Factors |
| உடல் சார்ந்த பண்புகள் | குடும்பம், வீடு, | நுண்ணறிவு. ஊக்கல் |
| நாளமில்லாச் சுரப்பிகள் | பாடசாலை, | மனவெழுச்சி, மனப்பான்மை |
| நரம்புத் தொகுதி | மொழி | கவர்ச்சி, / அக்கறை / பற்று |
| | பண்பாடு, மதம் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆளுமையை அளவிடும் முறைகள்:

ஆளுமையை அளவிடும் முறைகள்

- **அகவய முறைகள் (Subjective methods)**
  1. சுயசரிதைமுறை (Autobiography)
  2. சுயமதிப்பீடு (Selfrating)
  3. மறுமொழி கூறுபவை – வினாநிரல் (Questionnaire)

  மனப்பான்மை (Attitude Scale) அளவுகோல்

  ஆளுமைப்பட்டியல்கள் (Inventories)

  பேட்டி (Inerview)

  நாட்டச் சோதனைகள் (Aptitude test)

  கவர்ச்சிப் பட்டியல்கள் (Interest Inventories)

- **புறவயமுறைகள் (Objective methods)**

  உடற்கூறு, நடத்தைக்கூறு என்பவற்றை
  1. உற்று நோக்கல் (Observation)
  2. சரிபார்க்கும் பட்டியல் (Check list)
  3. தர அளவு கோல் (Rating Scale)
  4. செயற் சோதனைகளும், நிலைமை சோதனைகளும் (Performance and situational tests)

- புறத் தோற்று நுண்முறைகள் (Projective Techniques
  - புலக்காட்சி அணுகுமுறை (Perceptive technique)
  - பொருளறிவோடு இணைந்த சேவை (Apperceptive technique)
  - உருவாக்கும் சோதனைகள் (Productive Techniques)

    உ+ம் மை தட சோதனை, படம் வரைதல், பொருள் உருவாக்கல்.

5. ***ஆளுமைபற்றிய வரைவிலக்கணங்கள்:***

**சில்போட்:** ஆளுமை என்பது ஏதோ ஒரு சமுதாய சந்தர்ப்ப சூழ்நிலையில் ஒருவர் துலங்கும் போது அவர் வெளிப்படுத்தும் உடல், உளச் செயற்பாடுகளின் ஒழுங்கமைப்பாகும்.

**N.L. மன்:** ஆளுமை என்பது தனிப்பட்டவர்களிடம் காணப்படும் அமைப்புக்களினதும் நடத்தைக் கோட்பாடுகளினதும், விருப்பு. மனப்பாங்கு, ஆற்றல்கள், திறன்கள், உளச்சார்புகள் என்பவற்றின் மிகச்சக்தியுள்ள பண்புகளின் ஒன்றிணைப்பாகும்.

**ஆர்னல்ட் சில்காட்:** சூழலுக்கான தனிப்பட்டவரின் சீராக்கத்தை அல்லது பொருத்தப்பாட்டைத் தீர்மானிக்கும் நடத்தைப் போக்குகளினதும், சிந்தனை முறைகளினதும் இணைப்பே ஆளுமையாகும்.

# ஆளுமை விருத்தி பற்றிய உளவியற் கோட்பாடு

## 1. உளப்பகுப்பாய்வுக் கோட்பாடு:

நனவிலி மன (Uncoscious) செயற்பாடுகளின் செல்வாக்கினை மையமாக வைத்தே ஆளுமை விருத்தியடைகின்றது என உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டாளர்கள் கருத்துரைக்கின்றனர். நனவிலி மனதில் அடங்கியுள்ள பண்படா ஊக்கிகள், மனவெழுச்சிகள் போன்றவை ஒருவனது சிந்தனையையும், செயல்களையும், இவற்றின் அடிப்படையில் உருவாகும் அவனது ஆளுமையைத் தீர்மானிக்கின்றன. இக் கோட்பாட்டை உருவாக்கிய பிராய்ட்; ஆளுமை அமைப்பு தனித்தியங்கும் செயல்களையும், அதே சமயத்தில் ஒன்றோடு ஒன்று இடைவினையாற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதித்துக் கொள்ளும் தன்மை பெற்ற மகிழ்ச்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட இட் (Id), (நனவிலி மனம்) யதார்த்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஈகோ (Ego) (நனவு நிலைமனம்) உயர் அறநெறிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட சுப்ப ஈகோ (Super Ego) (மேனிலைமனம்) ஆகிய அமைப்புக்கள் ஆளுமை விருத்திக்கான ஆதாரங்களை இயம்புவதாக தெரிவிக்கின்றார். (இவை தொடர்பான முழு விளக்கம் பிரயோக உளவியல் I நூலின் 35, 36, 37, 38, 43, 44 பக்கங்களில் காணப்படுகின்றது) பாலியல் ரீதியான நேரடி – மறைமுக உந்தல்களே ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துவதாகவும் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

இட், ஈகோ, சுப்ப ஈகோ ஆகியவை இணைந்து செயலாற்றி-னால்தான் ஆளுமைச் சமநிலை ஒருவனிடத்-தில் தோன்றும். இதை இசைவான ஆளுமை வளர்ச்சி என்பர். இவை ஒன்றுடன் ஒன்று முரண்-பட்டால் ஆளுமைச் சமநிலை சீர்குலைந்து ஆளுமை வளர்ச்சியில் சிக்கல்கள் ஏற்படும். இச்சிக்கல்களை ஒருவன் எவ்வாறு சமாளிக்கின்றான் என்பதைப் பொறுத்து அவனது ஆளுமையின் தன்மைகள் மாறுபடலாம் எனவும் பிராய்ட் தெரிவிக்கின்றார்.

## கார்ள் யுங்கின் (Caral Jung) கொள்கை:

இவர் உளப்பகுப்புக் கோட்பாட்டினூடாக சிக்மன் பிராய்டின் கருத்தியலில் இருந்து சிறு வேறுபட்ட விடயங்களைத் தெரிவிக்கின்றார். பிராய்ட் ஆளுமை வளர்ச்சிக்கு காரணமாக இளம் பருவ அனுபவங்களைக் குறிப்பிடட், யுங் உள இயக்கக்கூறுகள் சமநிலையடைய உதவும் தற்போதைய (Present) அனுபவங்களுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் கொடுக்கின்றார். மனித மனத்தின் நான்கு செயல்களான சிந்தித்தல் (Thinking) உணர்தல் (Sensing), உணர்ச்சி கொள்ளுதல் (Feling), உள்ளுணர்வு (Intution) ஆகியவை எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைப் பொறுத்து மனித ஆளுமை வளர்ச்சியடைகின்றது. இதன்படி ஆளுமையின் இரண்டு வகைகளை மனிதர்களுக்குப் பொருத்துகின்றார்.

அதில் ஒன்று அகமுகிவகையினர் (Introver) மற்றொன்று புறமுகிவகையினர் (Extrovert) இவற்றுள் அகமுகியினர் சமூகத்தின்பால் ஈடுபாடற்ற, கூச்ச சுபாவமுள்ள சமூகத்திலிருந்து விலகியிருக்க விருப்பம் கொண்டவர்கள், விரைவில் துக்கத்தில் ஆழ்ந்துவிடுவர். புறமுகியினர் சமூகமயமானவர்கள், பேச்சில் திறமையுள்ள, கொதிப்படையாத, ஏனையவருடன் இயைபாகி நட்புறவு நாடுபவர்கள். விரைவில் துக்கத்திற்கு ஆட்படாதவர்கள்.

கார்ள்யுங்கின் கொள்கையை ஆளுமை விருத்தி அடிப்படையில் மேலும் பரிசோதனை ரீதியாக முன்னெடுத்துச் சென்றவர் H.J. அய்ஸ்ன்க் ஆவார். இவரது ஆரம்ப பரிசோதனை Eyseak Personlity Inventory எனப்பட்டது. இதன் தொடர்ச்சியாக Questioniar) என்ற முன்னேற்ற பரிசோதனையை மேற்கொண்டு ஆளுமையை மூன்று வகைகளில் எடுத்தியம்பினார்.

1. புறமுகி – அகமுகி
2. நரம்புக் கோளாறு
3. உளக் கோளாறு

KOHA JPL
166091




7449 CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்புக்கோளாறு கொண்டவர்கள் அகமுகி வகையினருடன் நெருங்கியவர்கள் விரைவில் உணர்ச்சிவசப்படுபவர்கள். புறமுகியின் சமூகமயமானவர்கள் சமநிலை ஆளுமை கொண்டவர்கள். உளக்கோளாறு என்ற தோற்றம் தொடர்பான ஆய்வில் அய்ஸ்னக் அண்மைக் காலத்திலேயே ஈடுபட்டார். சீரற்ற – சிதைந்த – ஆளுமையின் தோற்றமாகவே இதனைக் கண்டார். கூடுதலான உளக்கோளாறுகளைக் கொண்டவர்களான இவர்கள் ஏனையவர்களுடன் குறைவாகப் பழகுவதுடன் தமது உறவினர்களுடன் பேதம் காட்டுவர். ஏனையவர்களை மடையராக்கி மகிழ்ச்சியடைய எத்தனிப்பர். இவ்வகையில் மேற்குறித்த தோற்றப்பாடுகள் உடலியல் - சூழல் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப ஆளுமையில் தாக்கங்களை ஏற்படுத்துவதாக H.J. அய்ஸ்னக் தெரிவிக்கின்றார்.

## *கால் ரொஜசின்* (Carl Rogers) *இன் கொள்கை:*

### *(புலக்காட்சி நிகழ்வுக் கொள்கை)*

ஒவ்வொரு தனியாளின் ஆளுமையிலும் செல்வாக்குப் பெறும் "தான்" என்ற எண்ணக்கருவின் முக்கியத்துவத்தை எடுத்து விளக்கி; அமெரிக்காவில் 1940களில் மிகச் சிறந்த புலக்காட்சி நிகழ்வுக் கொள்கை உளவியலாளரான ரோஜஸ், சிக்மன் பிராட்டின் உளப் பகுப்பாய்வுக் கொள்கையைக் கடுமையாக விமர்சிக்கின்றார். ஒருவனது ஆளுமையானது நடைமுறை வாழ்க்கையோடு ஏற்படுகின்றதே ஒளிய ஆழ்மனம் - புற உலகிலிருந்து அல்ல. நனவு நிலைச் சம்பவங்களுக்குத் தவறான விளக்கங்கள் கொடுப்பதனாலேயே ஆளுமை தொடர்பான பிரச்சினைகள் எழுகின்றன.

உதாரணமாக ஒரு மாணவனுக்கு உதவி செய்ய விரும்பும் ஆசிரியரை பிழையாகக் கருதும் மாணவன், ஆசிரியர் தன் மீது குற்றம் காண்பதாக எண்ணி உதவியை நாடாமல் உள்ளான். இது ஒரு பிழையான புலக்காட்சி நிகழ்வாகும். இதனைப் பாடசாலை மட்டத்திலேயே தீர்வு கண்டு கொள்ளலாம். புலக்காட்சி நிகழ்வுகளுக்கு பிழையான விளக்கங்களைக் கொடுக்கும் போது; உண்மை நிகழ்வுக்கும் புலக்காட்சி நிகழ்வுக்கும் முரண்பாடுகள் தோன்றி பிரச்சினைகள் எழுந்து ஆளுமையைப் பாதிக்கின்றது. புலக்காட்சி உலகிற்கும் உண்மை உலகிக்கும் ஒரு சமநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைப்படுகிறது. இது போன்ற இன்னொரு சமநிலை ஒருவன் தான் கொண்டிருக்கும் எண்ணத்திற்கும் - இலட்சியத்திற்குமிடையே காணப்பட வேண்டும். இல்லையெனில் ஆளுமை தொடர்பான பிரச்சினைகள் ஏற்படும் என ரோஜஸ் இயம்புகின்றார்.

ஆளுமைச் சிதைவுடைய உள நோயாளர்கள் உளவள மருத்துவரான கால் ரோஜசை துணை நாடி வருபவர்களின் சிகிச்சை மூலம்; அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு போதிய ஆற்றல் தங்களுக்கே உண்டு என்பதை உறுதிப்படுத்தி ஆள் மைய உளவளர்ச்சி சிகிச்சை முறையை (Person Centred Therapy) அறிமுகம் செய்தார். ஆளுமைச் சிதைவினால் பாதிக்கப்பட்ட உள நோயாளருடன் நற்புறவை ஏற்படுத்தி அவரது நிலையை அவரையே ஏற்றுக் கொள்ளச் செய்து நேர்மையோடு தன்னை வெளிப்படுத்தலும், அவருடைய உணர்வுகளுக்குள் புகுந்து அவரைப் புரிந்து செயலாற்றுவதன் மூலம் அவரது ஆளுமையைக் கட்டி எழுப்பலாம் என்பதை தனது கொள்கைப் பிரயோகம் மூலம் கால் ரோஜஸ் எடுத்துக் காட்டினார். இதில் ஒருவன் "தான்" என்பதில் காணப்படும் நான்கு பண்புகளைக் குறிப்பிடுகின்றார். இது அவனது ஆளுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

1. ஒருவன் நிரந்தரமாக தன்னைப்பற்றிய ஒரு எண்ணக் கருத்தை வளர்ப்பதற்கு அத்திகப்பிரயத்தனம் எடுக்கின்றான்.
2. இவ் எண்ணக்கருவுக் கேற்ற நடத்தைகளை மேற்கொள்ள விழைகின்றான்.
3. "தான்" என்ற எண்ணக்கரு வளர்ச்சிக்கு அவனது அனுபவங்கள் உதவுகின்றன.
4. கற்றல், முதிர்ச்சி என்பதற்கேற்ப தான் என்ற எண்ணக்கருவில் மாற்றங்க்ள ஏற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவன் ஒருவனுக்குக் கல்வியில் அக்கறை இல்லாவிட்டால், அவன் கல்விக்காகச் சிரமப்படுவது ஒரு தேவையற்ற முயற்சியாக அமைகின்றது. அவனுக்குத் தன்னைப்பற்றிய ஒரு தெளிவான எண்ணக்கரு உருவாக-வில்லை. அவ்வாறு உருவாகி இருந்தால் அவன் கல்வியில் அக்கறை காட்டுவான். இவ்வடிப்படையில் "தான்" என்னும் எண்ணக்கரு ஒருவனது ஆளுமையைத் தீர்மானிப்பதில் முக்கியமான ஒன்றாக உள்ளது. மாணவர்களிடம் தன்னைப்-பற்றிய கருத்துக்ளை வளர்க்க ஆசிரியர் முயற்சித்தால் சிறந்த ஆளுமையுடைய மாணவர்களை உருவாக்கலாம். இதற்கு கால் ரோஜஸ் பின்வருவனவற்றைக் குறிப்பிடு-கின்றார்.

❋ வகுப்பறையின் எல்லாச் செயற்பாடுகளுக்கும் சந்தர்ப்-பங்களை எல்லா மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

❋ மாணவர்களது எல்லா உணர்வுகளையும் வெளிக்காட்டும் சுதந்திரமான சூழலாக வகுப்பறை இருக்க வேண்டும்.

❋ மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் கணிப்பையும் கௌர-வத்தையும் வழங்க வேண்டும்.

❋ வகுப்பறையில் ஒழுகுவதற்கு தெளிவான சட்டதிட்டங்கள், வரையறைகள் இருக்க வேண்டும்.

❋ பெரும்பாலான அல்லது எல்லா மாணவர்களும் வெற்றி பெறக்கூடிய செயலாற்றுகைகளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மாணவர்களும் மனிதர்களும் தம்மைப் பற்றி எவ்வாறு நினைக்கின்றார்கள் என்பதில் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய தத்துவம் அவர்களது வெற்றியும் தோல்வியுமாகும். இவற்றினடிப்படையில் அவர்களது ஆளுமையைக் கட்டி-யெழுப்ப முடியும் என்பதற்கான செயன்முறை கால்ரோஜஸ் தனது கோட்பாட்டினூடு எடுத்து விளக்கியதுடன் தன்னிடம் உள நோய் பரிகாரத்துக்கு வந்த நோயாளர்களுக்கு வெற்றிகரமாக சிகிச்சை அளித்து அவர்களுடைய ஆளுமையை விருத்தியாக்கியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் என்னுடைய வேலையைச் செய்கின்றேன் நீ உன்னுடைய வேலையைச் செய் நான் இவ்வுலகில் வாழ்வது உனது இலட்சியங்களுக்கு ஏற்ப ஒழுகுவற்-கன்று அது போல நீயும் வாழ்வது என்னுடைய இலட்சிங்களுக்கன்று. நீயும் நீயேதான், நானும் நானே-தான். ஏதோ ஒரு காரணத்தால் இருவருடைய இலட்சியங்களுக்கும் இடையே சமநிலை காணப்படு-கின்றது."

1. பேர்ளின் என்ற பிரயோக உளவியலறிஞரின் மேற்படி கூற்றின் படி கார் ரோஜஸ்சின் புலக்காட்சி நிகழ்வுக் கொள்கை தொடர்பான ஆளுமைத் தத்துவங்களை வரிசைப்படுத்துக?
3. ஆளுமையை அளவிடுதல் தொடர்பான ரோர்ஷக்-கின்மை தடச் சோதனை (Rorshach Ink Blot Test) பற்றி விளக்குக?

**விடைகள்:** 1. தன்னையே தானுணர்ந்து ஏற்றுக்-கொள்ளுதல் செய்முறைக்கு அவனது கடந்த கால – எதிர்கால நிகழ்வுகளிலும் பார்க்க நிகழ்கால நிகழ்ச்சி-களுக்கு முக்கியத்துவம் அளித்தல்.

2. இவற்றைச் செய்ய வேண்டும் எனக் கற்பனையில், எண்ணுவதிலும் பார்க்க நினைத்ததைச் செய்ய முயற்-சித்தல்.
3. மனதில் உள்ளதை வெளிப்படுத்தல், மனித உறவு-களுக்கும் மனிதத்துவத்துக்கும் மதிப்பளித்தல்.
4. சுகத்தை அனுபவிக்கவும், வேதனையைத் தீர்க்கவும் அறிவைப் பயன்படுத்தல்.
5. மற்றவர் கருத்தை பகுத்தாராய்ந்து குறை கூறாமல் தனது கருத்தை வெளியிடல்.
6. தனது சிந்தனை – சொல் - செயல் ஆகியவற்றுக்குத் தானே பொறுப்புக் கூறல். தன்னையறிந்து அதன்படி ஒழுகுதல்.
7. இல்லாத பொருட்களைப் பற்றிச் சிந்திப்பதைவிட இருப்பவற்றுடன் செயற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### (2) ரோர்ஷாக் மைதச் சோதனை:

ஆளுமையை அளவிடுவதற்கு சுவிட்ஸலாந்து நாட்டு உள மருத்துவரான ஹெர்மன் ரோர்ஷாக் என்பவரால் 1921ல் தயாரிக்கப்பட்டது இச்சோதனை 10 அட்டைகளைக் கொண்டது. இதில் மைத்தடம் **(ink Blot)** அல்லது பொருளற்ற சமச்சீரான அமைப்பினைக் கொண்டு உருவங்கள் **(Meaningless) Bilaterally Symmertrical From)** காணப்படும்



இவற்றுள் கறுப்பு நிற மைதடங்கள் ஐந்தும் கறுப்பும் சிவப்பும் கலந்தவை இரண்டும், பல்வேறு வர்ணங்கள் மூன்றும் உள்ளன.

ரோர்ஷாக்மைத்தடச் சோதனையில் பயன்படுத்தப்படும் ஒருவகை மைதட அட்டை இங்கே காண்பிக்கப்படுகின்றது.



ஆளுமைச் சோதனைக்கு உட்படுபவருக்கு மைதட அட்டைகள் ஒவ்வொன்றாகக் காட்டப்படும். அல்லது திரையில் விழுத்திக் காட்டப்படும் குறித்த நபர் அதில் தான் காணும் எல்லாவற்றையும் விபரமாகக் கூற வேண்டும். ஒரு மைதடம் பற்றிய விபரம் கூறி முடிந்த பின் அடுத்த மைதடம் காட்டப்படும். இவ்வாறு எல்லா மைதடங்களும் காட்டப்பட்ட பின் ஆளுமையை சோதிப்போரிடம் சோதனையாளர் வினாக்களைக் கேட்பர். இவ் வினாக்கள் சோதனை முடிவை நம்பகமாக்க உதவும். விமர்சனப்பாங்கான விடைகளை சோதனையாளர் ஆராய்வார் இவை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ***மைதடங்களில் காணப்படும் பொருட்களான:*** மனிதர்கள், உயிரற்ற பொருட்கள், விலங்குகள், செடி கொடி. மனிதரால் தயாரிக்கப்பட்ட பொருட்கள், உடற்கூறுகள் என 30 பிரிவுகளாக் குறியீடுகளாகப்பட்டுள்ளன.

2. ***மைதடத்தின் பகுதிகள் / இட அமைவுகள்*** **(Location)**

முழுப்பகுதி, வழக்கமான துலங்கல், விரிவான துலங்கல், புதிய விளக்கம், மிகச்சிறிய விபரணங்கள், ஓரப்பகுதிவிளக்கம், நிலப்பகுதிவிளக்கம், அபூர்வவிபரங்கள்.

3. ***விடையின் தன்மையை நிர்ணயித்த காரணிகள்:*** உருவம் (Form), வண்ணம் (Colour), இயக்கம் (Movement)

இவ்வாறான மைதடச் சோதனையில் அளிக்கப்படும் விடைகளுக்குப் பொருள் காண்பதில் சில அடிப்படைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அவை; மனவெழுச்சி-களை புறப்பொருள் சார்ந்ததாக வெளிப்படுத்த நிறங்கள் பயன்படுகின்றன. வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் மனப்போக்கு என்பவை மைதடித்தின் அமைப்பு - இயக்-கத்துடன் ஒன்றுவர் என்ற பலவித நுட்பம் சார் நிபுணத்துவ திறன்கள் பிரயோகிக்கப்படும். இவ்வாறான சோதனையை சிறப்புப்பயிற்சி பெற்றவர்களே மேற்கொள்ளலாம். இவ் ஆளுமைச் சோதனையை 7 வயதிற்குக் குறைந்தவர்களுக்குக் கொடுக்க இயலாது.

## *இருத்தலியல் கொள்கை* (Logo Therapy)

இக்கொள்கையின் மூல கர்த்தாவான பிராங்கன் என்ற பிரயோக உளவியலாளர் சூழ்நிலையை வெற்றி கொள்ளும் ஆளுமை மனிதனிடம் உள்ள உயர்ந்த குணம் என்றார். அந்த ஆளுமைக் குணத்தை மேம்படுத்தும் திறன், தனது செயற்பாட்டினைத் தீர்மானிக்கும் சுதந்திரம் மனிதனுக்கு உண்டு என்றார்.

இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் கொடூரமான ஜேர்மனிய கிட்லரின் நாஜி சிறைச்சாலையின் மரண வாழ்வின் மத்தியில் பெற்ற அனுபவத்தை இருத்தவியல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கையாக வெளியிட்டார். மனிதன் கொடூரமான துயரங்களின் நடுவே சேர்ந்து அழிந்து போகாது, மனோதிடத்தைப் பெறும் ஒரு புதிய அனுபவத்திற்கு வழி காட்டினார். இக் கொள்கைப்படி தனி மனிதன் மூன்று வகையான உலகில் வாழ்கின்றான்.

1. உயிரியல் உலகம்
2. உளவியல் உலகம்
3. தனியாள் விளக்க உலகம்

இவற்றினூடாகத் தன்னைத் தானே ஒருவன் அறிந்து கொள்வதற்காக இம்மூன்று உலகங்களையும் ஒன்றிணைத்-தலும் அதற்குக் கைகொடுத்தலுமே அவனது ஆளுமை வளர்ச்சிக்கு வழிகாட்டுதலாக அமைகின்றது. மனிதன் நிலையானவன் அல்லன். இதை மனிதனும் அறிவான். துன்பம் மனித வாழ்வின் நெறிநிலை இதனையே நினைத்து வேதனையும், பயமும் அடைவதிலும் பார்க்க தன்னிலையை உணர்ந்து செயற்பட வேண்டும் என இருத்தவியல் கூறுகின்றது.

தனது வாழ்க்கையின் நோக்கம், தனது தேவைகள் தான் செய்வது என்ன என்பவற்றைத் தெரியாமல் இருப்பதே மனிதனின் துன்பத்துக்குக் காரணமாகின்றன. இதை அறியா-தவர்கள் தமது வாழ்கை பயனற்றது எனக்கூறுகின்றார்கள். துன்பத்திற்கும் மன வேதனைக்கும் உட்பட்டவர்களுக்கு வாழ்க்கை பற்றிய விளக்கத்தை அளிக்க வேண்டும் எனப் பிராங்கன் கூறுகின்றார். இதுவே இருத்தவியல் கொள்கையின் அடிப்படையாகும். இதன்படி ஒருவன் தான் என்ன காரணத்துக்காக வாழ்கின்றான் என அவனே உணரும்படி செய்யும் முறைமையாகவுள்ளது. துன்பத்திற்கும், மன-வேதனை – விரக்தி உளக்கோளாறுகளுக்கு உட்பட்டவர்-களுக்கு அவர்களுடைய வாழ்வின் அர்த்தத்தை பல்வேறு நுட்பங்களினூடு விளக்கு ஆளுமையை விருத்தியாக்குவதே இக் கொள்கையாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலை ஆளுமையின் தேவை

ஒவ்வொரு மனிதர்களும் மகிழ்ச்சியான ஆரோக்கியமான வாழ்வை வாழ சமநிலை ஆளுமைப் பண்புகள் உதவுகின்றன. உடல் - உளம் - சமூக – மனவெளிச்சி அம்சங்களிலே சமநிலையுடன் வாழ்பவர்கள் சம நிலை ஆளுமையுடையவர்களாக் கொள்ளப்படுகின்றனர். பொருத்தமான ஆரோக்கியமான உடலமைப்பும், நல்ல பேச்சுமுறை, அசைவில் அழகு, உடற் செயற்பாடுகளும், நோய்கள் அற்ற நிலையும் உடற் சமநிலையை இயம்புகின்றன.

உளவியல் ரீதியாகக் சமநிலையுடையவர், கடுந்துயரங்களுக்கு ஆளாகாமல் அதைத்தாங்கும் சக்தியுடையவராக, நரம்புப்பிணி, நரம்புத்தளர்ச்சி, உளநோய்களுக்கு ஆளாகாதவராக, ஏனையவர்களுக்கு வழிகாட்டுபவராக இருப்பார். சமூகவியல் ரீதியான சமநிலையுடையவர்; சமூகத்தால் விரும்பப்படுபவராக, சமூகத்துக்காகக் குரல் கொடுத்து சேவையாற்றுபவராக, இலகுவில் சந்தேகம் கொள்ளாதவராக இலகுவில் கோபத்துக்கு ஆளாகாதவராகக் காணப்படுவார்.




மேற்குறிப்பிட்டபடி சமநிலை ஆளுமையுடையவர் சமூகத்திலுள்ள எல்லோருடனும் பொருத்தமா தொடர்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொண்டு சமூகத்துக்கு பயனுடையவராக வாழ்வர். இவர்களுடைய கருத்துக்களுக்கு மக்கள் உட்படுவர். இவர்களின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வர். சமநிலை ஆளுமையுடையவர்கள் நாட்டின் நற்பிரசைகளாக வாழ்வர்.

## சமநிலை ஆளுமையை சிதைக்கும் உளக் காரணிகள்:

தனிமனிதர்கள் ஏனையவர்களுடைய விருப்பு வெறுப்புக்களைக் கருத்திற் கொள்ளாமல், தவறான வழியி செயற்பட்டு உளப்பிரச்சினைகளால் சமூகத்திலிருந்து விலகிச் செல்கின்றவர்களுக்கு சமூகத்திறன்கள் குன்றி ஆளுமைக் குறைபாடுகள் தோன்றுகின்றன. இதனை பிரயோக உளவியலாளர்கள் சமூகப்பீதி நிலை எனக்கூறுவர். இந்நிலையில் அக புற காரணிகளின் தீவிர தொழிற்பாடுகளினால் உளப்பிணி அல்லது உளக் கோளாறினால் பீடிக்க இடமுண்டு. இவர்கள் நியூரோஸிஸ் (Neurosis) எனப்படும் நரம்புக் கோளாறினால் துன்பப்படுவர்.

மனிதர்களின் சமநிலை ஆளுமையை சிதைக்கும் உளநோய்களை இரு வகையாகப் பிரிக்கலாம் என்று நரம்புக்கோளாறு, மற்றையாது உளக்கோளாறு (Psychosis) உளநோயாளர் நூறு பேரை ஆராய்ந்தால் ஒரு சதவீதத்தின் சைக்கோசிஸ் என்ற உளக் கோளாறுகளாலும், அறுபது சதவீதத்தினர் நரம்புக் கோளாறுகளாலும் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பர்.

நரம்புக் கோளாறுடையவர்கள் உளத்துயரங்களுக்கும், உளப்போராட்டங்களுக்கும். ஆட்பட்டிருப்பர். குற்றநரம்புக் கோளாறு நோய்கள் துன்பநிலை நரம்பு நோய், பீதிநிலை நரம்புநோய். வீறுகோனோய் (Hysteric Neurosis),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Obsessive Compulsive neurosis, Neurasthenic neurosis, Hypochondriacal Neurosis, எனப் பல வகையாக நோக்கப்படுகின்றன. இவ்வாறான நோய்குட்பட்ட-வர்களுடைய சமநிலை ஆளுமை சிதைந்து காணப்படு-கின்றது. சாதாரண மனிதர்களைவிட அசாதரண நடத்தை-களை மேற்கொள்வர்.

துன்பநிலை நரம்பு நோயாளர் ஒழுங்கான இயக்க-மற்றவராக, நித்திரை இல்லாதவராக, தனிமையை விரும்புபவராக இருப்பார். வீறுகோணோய்க்கு உட்பட்டவர். காரணமின்றி மூர்ச்சையடைதல், சரியாகப் பேச, பார்க்க, எழுத முடியாமை, சில உடற்பகுதிகள் இயக்கமற்றுப் போதல். இவர்களைச் சாதாரண வைத்தியரால் குணப்படுத்த முடியாது. விசேட நிபுணரே தேவை. மற்றும் பீதி நிலை நரம்புப் பிணியால் பாதிக்கப்பட்டவர்கள் மனிதர், விலங்குகள், ஒளி, இருள், சத்தம் ஆகியவற்றிற்குப் பயப்பிடுவர். இவ்வாறானவர்களின் சிதைந்த சமநிலை ஆளுமையை மீட்க பலவகையான சிகிச்சை முறைகள் தற்போது சிறந்த முறையில் பிரயோகிக்கப்பபடுகின்றன.

உளப்பகுப்பு, புலக்காட்சி நிகழ்வு. இருத்தவியல், கெஸ்டோல் உளவியல், நடத்தைவாதம், பகுத்தறிவு வாதம், மானுடவியல் சார் நவீன மருத்துவ சிகிச்சைக் கொள்கைகளின் நடைமுறைப் பிரயோகங்கள் சமநிலை ஆளமைச் சிதைவைத் தீர்க்கப் பயன்படும் காரணிகளாகவும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரம்பியல் நோய்களைவிட உளக்கோளாறு நோய்கள் மிகப்பாரதூரமானவை சமநிலை ஆளுமையை முழுமையாக சிதைத்துவிடுகின்றன. இது இளம் பருவத்திலிருந்து விருத்தியடையும் ஒன்றாகவோ அல்லது முதிர்ச்சி நிலையில் தோன்றுவதாகவே இருக்கலாம். தேவையற்ற குழப்பங்கள், பொருத்தமற்ற முரணான நடத்தைகள் தொந்தரவு கொடுத்தல், ஆக்கிரமிப்புக் குணம் நோய்க்கான அறிகுறிகளாகவுள்ளன. இவ்வாறான நோய்களில் இருந்து சிகிச்சை பெறவும், நோயே வராமலிருக்க முன்கூட்டிய நடவடிக்கைகள் பலவும் இன்றைய காலத்தில் சிறப்பாகப் பிரயோகிக்கப்படுகின்றன மற்றும் ஆலோசனை வழிகாட்டல் செயன்முறைகள், உளவளத்துணை செயலாற்றுகைகள் பலபரிமாணங்களில் விருத்தியடைந்துள்ளன.

மேலும் உளநோய் நிவர்த்தி மருத்துவத்துறை; உள-நோய்கள், நரம்பு நோய்கள், குற்றம் சார்ந்த நடத்தைகள், போதைப் பொருள் பாவனை, இளமைப்பருவக்குற்றங்கள், கொலைகள், திருமணம் சார் உளப்பிரச்சினை முரண்பாடுகள் எனப் பலவகையான பிரச்சினைகளுக்குச் சிறந்த முறையில் பரிகாரங்களைக் கண்டு வருவதுடன் அதிநவீன மூளை, நரம்பியல் தாக்கங்களைக் கண்டறியும் கணனிக் கருவி-களையும் பயன்படுத்தக் கூடியதாகவுமுள்ளது. உளநோய் நிவாரண மருத்துவ மனைகள், இளம் குற்றவாளி நீதி-மன்றங்கள், சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலையங்கள், சிறைச்சாலைகள், சமுதாய நலமையங்கள் மிக உயிர்ப்புடன் மனிதர்களின் சிதைந்த சமநிலை ஆளுமையைக் கட்டி-யெழுப்பு உயர்ந்த செயற் திட்டங்களையும் நடைமுறைப்-படுத்தி வருகின்றன.

ராஜன் வயலின் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் உடையவன். 9ம் தர மாணவனான அவன் எப்போதும் தனிமையில் இருக்கின்-றான். வகுப்பறையில் அமைதியாக இருக்-கமாட்டான். காரணம் இன்றி முர்ச்சை-யடைகின்றான். வைத்தியரிடம் சிகிச்சைக்-குச் சென்ற போது அவன் வீறு கோணோய்க்கு உட்பட்டுள்ளமை தெரிய வந்தது. இது அவனது சமநிலை ஆளு-மையில் குறைபாட்டை ஏற்படுத்திவிட்டது. தற்போது அவனால் வயலினை வாசிக்க முடிவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வினா*** 1. சமநிலை ஆளுமைக் குறைபாடு என்றால் என்ன?

2. சமநிலை ஆளமைக் குறைபாட்டை ஏற்படுத்தும் குடும்பக் காரணிகள் நான்கையும், பாடசாலைக் காரணிகள் நான்கையும், சமூகக் காரணிகள் நான்கையும் எழுதுக?

***விடைகள் :***

1. சமநிலை ஆளுமைப் பண்புகளில் ஒன்றோ அல்லது பலவோ சிதைவடைதல், அல்லது குறைதல், சமநிலை ஆளுமைக் குறைபாடு எனப்படுகின்றது. சமூகத்தால் விரும்பத்தகாத தீய பழக்கங்களுக்கு உட்பட்டு, அவற்றிலிருந்து நீண்ட காலம் மீளமுடியாதவராக இருந்தாலும், நரம்பியல், உள நோய்க்கு உட்பட்டிருந்தாலும் அவரைச் சம நிலை ஆளுமை குறைபாடுடையவர் எனலாம்.

2. ***அ. குடும்பக்காரணிகள்:*** பிள்ளைப்பருவத்தில் தாயின் தந்தையின் அரவணைப்பு கிடைக்காதிருத்தல், தாய் - தந்தை பிரிவுகள், சண்டைகளின் தாக்கங்கள், பிள்ளையின் உடலியல் - உளவியல் தேவைகள் பூர்த்தியாகாமை, புறக்கணிப்பு அல்லது மிக அதிக பாதுகாப்பு, செல்லம், ஏமாற்றம் - உடன்பாடற்ற இடைவினைத் தொடர்பாடல், மன இறுக்கம், பாலியல் பிறழ்வுகள், பொருத்தமற்ற குடும்ப எதிர்பார்க்கைகள் என்பன சமநிலை ஆளுமையைக் குறைபாட்டை ஏற்படுத்தும் குடும்பக் காரணிகளாகவுள்ளன.

***ஆ. பாடசாலைக் காரணிகள் :*** ஆரம்பக்கல்வி ஆசிரியரின் பரிவான உயிர்ப்பான கற்றல் ஆதரவின்மை, ஆசிரியர் மாணவர்களுக்கு எவ்வித கணிப்பும் வளங்காத நிலை, மாணவர் திறன்கள் தேர்ச்சிகளுக்கு மதிப்பு வழங்காமை, கடுமையான பொருத்தமற்ற தண்டனைகள், புறக்கணிப்புக்கள், மகிழ்ச்சிகரமற்ற வெறுக்கத்தக்க கற்றல் சூழ்நிலைகள், பொருத்தமற்ற சமவயதுக்குழுச் செயற்பாடுகள் என்பனவாகவுள்ளன.

***இ. சமூகக் காரணிகளை நீங்களே எழுதுங்கள்:***

..............................................................................

..............................................................................

..............................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித சாதனைகளுக்கான ஊக்கல்

மனித வாழ்க்கையில் எல்லா மனித நடத்தைகளும் இலக்கினை உடையவை. இலக்கினை விரைவாக அடைய, இலக்கை நோக்கிச் செல்ல ஊக்கல் உதவுகின்றது. **Motivation** என்ற ஆங்கிலச் சொல் ஊக்கல் என்ற பொருளைத் தருகின்றது. இது Moveers என்ற லத்தீன் சொல்லில் இருந்து பிறந்தது. இதன் பொருள் முன்னேறிச் செல்லுதல். அதற்கு உற்சாகம் வழங்குதல் என்பதாக உள்ளது.

எந்த ஒரு செயற்பாடுகளிலும் ஊக்கம் அதிகம் காணப்பட்டால், அதைச் செய்வதில் அதிக ஆர்வமும் அதை உடனடியாகச் செயது முடிக்க வேண்டும் என்ற உந்தலும் ஏற்பட்டு கவனம் முழுவதும் அச் செயலுக்குச் செல்கின்றது. இதன் விளைவாக அச்செயல் திறமையாகவும், சிக்கனமாகவும் செய்து முடிக்கப்படுகின்றது. இது சாதனையாகவும் ஏற்பட்டுவிடுகின்றது. ஒருவனை ஒரு செயலில் ஈடுபடுமாறு உந்தும் சக்தியே ஊக்கல் ஆகும். கெல்லி (Kelley) என்ற பிரயோக உளவியலறிஞர் "ஏதோ ஒரு வகை ஊக்கி மனிதனின் எல்லாக் கற்றல் நிலைகளிலும் இருத்தல் இன்றியமையாத காரணியாகும்" என்கின்றார்.

கல்வியில் கெட்டிக்கார மாணவியாக இருந்த வாணி கடந்த மூன்று மாதங்களாக கல்வியில் எதுவித அக்கறையும் விருப்பமும் இன்றி காணப்பட்டார். ஆசிரியை அவள் பற்றி விசாரித்த போது கற்பதற்கு ஊக்கத்தையும் ஆக்கத்தையும் ஏற்படுத்திய அவளது தாய் நோய்ப் பாதிப்புக்கு உள்ளாகி இருப்பதை அறிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஆண்டர்சன், மக்கேனல், கேட்ஸ் ஆகிய அறிஞர்கள் ஊக்கல் பற்றி தெரிவித்த கருத்துக்களை எழுதுக?
2. ஊக்கத்தின் இயல்புகளை வரிசைப்படுத்துக?
3. ஊக்கி வகைகள் நான்கையும் எழுதி இலக்கு தொடர்பான ஊக்கல் பற்றிய பரிசோதனைக்கு ஒரு உதாரணம் தருக?
4. அடைவூக்கி பற்றி விளக்குக?

**விடைகள்**

1. ***அண்டர்சன்*** – "ஊக்குவித்தலால் கற்றல் மிகச் சிறப்பாக நடைபெறும்.
***மக்கேவை*** – கற்பதற்கான உயிரிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
***கேட்ஸ்*** – "கற்றலுக்கும் வாழ்க்கைக்கும் ஊக்கம் தவிர்க்க முடியாதது.

2. I. ஊக்குவித்தல் கற்றல் செயன்முறைகளுக்குச் சக்தியை அளிக்கின்றது.

II. சாத்தியமான வெற்றிகரமான நடத்தை முறைகளுக்கு வழிகாட்டுகின்றது.

III. ஊக்கல் இலக்கினை விரைவாக அடைய நெறிப்படுத்துகின்றது.

IV. கற்பதிலும், வாழ்க்கையிலும் ஆர்வத்தையும், சாதனைகளையும் ஏற்படுத்துகின்றது.

V. ஆர்வத்தைத் தூண்டுகின்றது. கற்றவைச் செம்மைப்படுத்துகின்றது. அக்கறையை ஏற்படுத்துகின்றது.

3. ***ஊக்கிகளின் வகைகள் :***

I. உடல் தேவைகளுடன் இணைந்த ஊக்கிகள் (Physiological motives) மனிதன் உயிர்வாழத் தேவையாக முதல் நிலை ஊக்கிகளான பசி, தாகம், சுவாசம், உறக்கம், நித்திரை, ஓய்வு, பாலுணர்வு என்பன இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. உளவியல் ஊக்கிகளை இடைவினை ஊக்கிகள் எனவும் கூறுவர் "காப்புணர்ச்சி தேவை இதை குடும்பம், சம வயதுக்குழுவினரின் ஏற்பு – பாராட்டு என்பவற்றின் தேவைகள் இதிலடங்குகின்றது.



III. சமூகத் தேவைகளால் எழும் ஊக்கிகள் - இவை தனித் தன்மைவாய்ந்த ஆளுமையினால் தோன்றுபவை. தற்கருத்து, (Self – concept), இலக்கு (goal), விழுமியங்கள் (Values), கவர்ச்சிகள் (Interests) என்பவை தொடர்பான ஊக்கிகள் இதிலடங்கும்.

இலக்கு எல்லா விலங்குகளின் நடத்தைகளிலும் ஊக்கியாகத் தொழிற்படுகின்றது. டால்மன் என்ற பிரயோக உளவியலறிஞர் ஒவ்வொரு விலங்கின் நடத்தையும் இலக்கை மையமாகக் கொண்டது என்கின்றார். இது தொடர்பாக சிக்கலரை பரிசோதனையை எலிகள் மூலமாக மார்தி, வாஷ்லி ஆகிய உளவியலாளர்கள் மேற்கொண்டனர். உணவைப் பெறுதல் தொடர்பான பல சிக்கலான பாதையாக இருப்பினும் தமது உணவு இலக்கை எலிகள் சரியாக அடைந்தன. இதுவே ஒரு ஊக்கியாகியுள்ளது. பல்வேறு தடைகளின் ஊடும் எலி இலக்கை அடைந்தது.

4) *அடைவு ஊக்கி* **(Achievement motive)**

ஒவ்வொரு மனிதரும் எல்லாச் செயல்களிலும் சிறப்பு மிக்க உயர் சாதனையை அடைய முற்படுதல் (Striving for excellence) இவ்வூக்கியின் இயல்பாக அமைகின்றது. இதற்கு ஆதாரமாக தன்மதிப்பு (Self - esteem) அமைகின்றது. இவ் அடைவூக்கி சமுதாயத்தில் போட்டி மனப்பான்மையினூடாக எழுகின்றது.

ஹார்வார்ட் பல்கலைக்கழக பேராசிரியர் டேவிட் மெக்விலெண்டு அவர்களின் ஆய்வின்படி ஒரு சமுதாயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவு ஊக்கியின் செயற்பாடு உயர் அளவில் காணப்பட்டால், பலதுறைகள் விருத்தியடைந்து மக்கள் வாழ்க்கை உயரும். இவ் அடைவூக்கத்தை மேம்படுத்தும் வழிமுறைகளாகப் பின்வருவன அமைகின்றன.

1. உயர் சாதனையில் ஈடுபாட்டை ஏற்படுத்தல்
2. செய்யும் எந்தப்பணியிலும் சுய ஈடுபாடு கொள்ளச் செய்தல்.
3. கடினமான செயல்களில் துணிந்து செயலாற்றும் நடத்தையை ஏற்படுத்தல்.
4. சுய சார்புடன் சாதனை படைத்தல் திறன் பெறல்
5. சிறந்த அடைவுகளுக்குப் பாராட்டும் பரிசும் வழங்குதல்.
6. தோல்விகளைக் கண்டு அச்சமடையும் மனப்பான்மையைக் களைதல்.

## ஊக்கல் பற்றிய கொள்கைகள் :

1. *மக்டூகவின் இயல்பூக்கக் கொள்கை* **(Instint Theory of McDougall)**

மனிதர்கள் பிறக்கும் போதே இயல்பாகப் பெறுகின்ற ஊக்கல் இயல்பூக்கம் எனப்படுகின்றது. இது பின்வருமாறு செயற்படுகிறது.

அ. ஒரு நிகழ்ச்சி – காட்சியை ஒருவன் பெற்றவுடன் அதில் கவனம் செலுத்துகின்றான்.
ஆ. அது அவனிடம் மகிழ்வு அல்லது வெறுப்பை ஏற்படுத்துகின்றது.
இ. இவ் இயல்பூக்க உணர்வின் அடிப்படையில் அவன் செயன்முறைக்கு உள்ளாகின்றான்.

இச் செயன்முறை தனியாட்களுக்கு ஏற்ப வேறுபடுகின்றது. வாழ்வின் பல்வேறு கட்டங்களிலும் இது வெளிப்படுவதாக மக்டூகல் குறிப்பிடுகின்றார். ஒவ்வொரு இயல்பூக்கத்திற்கும் மனவெழுச்சிகள் உண்டு அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒதுங்கல் ஊக்கம் - அச்சம்
- போரூக்கம் - கோபம்
- குழுவூக்கம் - சமூகப் பாதுகாப்பு
- பணிவூக்கம் - தாழ்வுணர்வு
- பாலூக்கம் - காதல்
- மகவூக்கம் - அன்பு

இவ்வூக்கங்கள் பதினான்கு உள்ளதாகவும் ஒவ்வொன்றும் ஏற்படுத்தும் மனவெழுச்சிகளால் விளையும் அனுபவங்கள் முறையான அமைப்பைப் பெற்று பற்றுக்களாக (Sentiments) மாறுகின்றன எனவும் மகடூகல் தெரிவிக்கின்றார்.

ஊக்கலை சிக்மன் பிராய்ட் தனது உளப்பகுப்புக் கோட்பாடு மூலம் பாலியல் ஊக்கம் (காம ஆசை), போர் ஊக்கல் (மரண ஆசை) என்பவவை தொடர்பாக விளக்குகின்றார். மாஸ்வோ தனது படிநிலைத் தோவைக் கோட்பாடு (Maslow's Theory of Hirarchial needs) மூலம் ஊக்கலைத் தேவைகளுடன் இணைத்து விளக்குகின்றார். கேர்ட் லெவின் களக் கொள்கை மூலம் இறந்த காலத்தைவிட நிகழ்காலமே செல்வாக்குப் பெறுகின்றது என்ற வகையில் சூழல் நடத்தைகளினூடு ஊக்கலை விளக்குகின்றார். ஹல் நடத்தைக் கொள்கை மூலம் எல்லா நடத்தைகளுக்கும் ஊக்கல் தேவையில்லை ஆனால் கற்றலுக்கு ஊக்கல் அவசியம் என்கின்றார்.

**அக புற ஊக்கிகள்:**

ஊக்கிகளை அக புற ஊக்கிகள் எனவும் பாகுபடுத்தலாம். அக ஊக்கிகள் நடத்தையை விரும்பும் இலக்காக அமைகின்றன. விளையாட்டுச் செயல்களில் குழந்தை முழு ஈடுபாட்டுடன், ஆர்வத்துடன் ஈடுபடல் உள்ளிலிருந்து எழும் ஊக்கி என்ற நிலையில் அக ஊக்கியாகக் கொள்ளப்படுகின்றது. பரிசுகள், தண்டனைகள், வெற்றி – தோல்விகள், ஒத்துழைப்பு – போட்டி என்பன புற ஊக்கிகளாகக் கொள்ளப்படுகின்றன. சிறப்பான கற்றலுக்குக் குழந்தைகளின் அக ஊக்கிகளைப் பயன்படுத்துவது மிகச் சிறந்தது. விளையாட்டு, கண்டறிதல், செயற்திட்டங்கள், கைப்பணி மையச் செயற்பாடுகள் அக ஊக்கிகளாகவுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள ஆற்றல் திறனான நுண்மதி

நல்ல உளநலனும், ஆற்றலும் உள்ள ஒருவர் அதிக நுண்ணறிவு திறன் பெற்றவராகக் காணப்படுகின்றார். இவர் சரியான நேரத்தில் சரியான முடிவுகளை எடுக்கின்றார். இந் நுண்ணறிவு (Intelligence) அறிவின் சக்தியாக உள்ளது. உளச் சார்பு, விவேகம், உள ஆற்றல், உளத்திறன், நுண்ணறிவு எனப்பலவாறு அழைக்கப்படும் இத்துறையின் செயன்முறைகள், சமூகத்துடன் இயைந்து சென்று சவால்களுக்கு முகம் கொடுத்து, நிலமைகளை விளங்கி வினைத்திறன்களை உச்ச அளவாக்கல் என்பதாகவுள்ளது. மனிதர்களின் குவி சிந்தனையின் கூறாகவும், இது உள்ளது.

## சில வரைவிலக்கணங்கள்

I. ***அல்பிரட் பீனோ:*** (1878) புரிந்து கொள்ளுதல், நியாயம் காணல், புதுமைபுனைதல், தொடங்கிய செயலைத் தொடர்ந்து செய்தல், நடத்தைக் குறைபாடுகளைத் தானே உணர்தல், தீர்மானம் மேற்கொள்ளல் என்பவற்றின் ஒட்டு மொத்தப் பெறுமானமே நுண்மதியாகும்.

II. ***ஜீன்பியாஜே :*** (1940) உயிரியலையும், சூழலையும் இணைக்கும் அறிவமைப்பாக நுண்மதியுள்ளது அது சூழலுடன் கொள்ளும் இடைத் தாக்கத்தின் விளைவாகமுள்ளது.

III. ***ஷெஷ்லர் :*** (1976) – தனியாள் ஒருவர் தன்னைச் சூழவுள்ள உலகினை விளங்கிக் கொள்ளவும் சவால்களை எதிர் நோக்கவும் கொண்டுள்ள ஆர்வமே நுண்மதியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. *ஸ்டொடார்ட் :* (1978) கடினமான (difficult), சிக்கலான (Complex), புதுமையான (Novel), சமூகப்பயனுள்ள Social Valuable உயர் நிலைப்பட்ட செயல்களில் (Abstract) தொடங்கி மனவெழுச்சிக் குறுக்கீடுகளுக் கிடையிலும் அவைகளைத் தொடர்ந்து நிகழ்த்த (Persistence) ஒருவனுக்கு உதவும் ஆற்றல்.

நுண்ணறிவானது சூழலுக்குத் தகுந்ததாக நடத்தை-களைப் பொருத்தப்பாடுடைய தாக்கல், கற்கும் திறன், கருத்தியல் சிந்தனைத்திறன் என்ற வகையில் நோக்கப்-படுகின்றது. தேஸ்டன் என்ற அறிஞர் பின்வரும் 7 காரணிகளினூடாக நுண்மதியாற்றலை இனம் கண்டார். இடம் சார்ந்த புலக்காட்சி, புலக்காட்சித்திறன், சொற்றிறன், எண்ணாற்றல், நினைவாற்றல், சொல்வேகம், காரணங்-காணல் என்பனவாகும்.

## கில்பேட்டின் நுண்ணறிவுக் கட்டமைப்பு (Guilford's Structure of Intellect)

அமெரிக்க கலிபோர்னிய பல்கலைக்கழக உளவியல் ஆய்வுகூடத்தில் மனித உளச் செயல்களைப் பகுப்பாய்வு செய்து 1966ம் ஆண்டு கீழ்வரும் நுண்ணறிவுக் கட்டமைப்பை கில்பேட்டின் உருவாக்கினார். இவ்வமைப்பு மனிதமனம் முப்பரிமாணங்களில் செயற்படுகின்றது என்றும், அவ்வாறு செயல்படும் நிலைகளுக்கு ஏற்ப வெவ்வேறான உளத்-திறன்கள் வெளிப்படுகின்றன என்றும் தெரிவிக்கின்றார். ஒவ்வொரு உளத்திறனிலும் ஒரு குறிப்பிட்ட உளச்செயல் (Process), ஓர்பொருள்(content) செயற்பாட்டு விளைவு (Product) ஒன்றை ஏற்படுத்துவதை நிரூபித்துக் காட்டு-கின்றார்.

I. *பொருள்* - இதனுள் உருவம்(Figural) குறியீடு (Sombolic) சொல்பொருள் (Semantic) நடத்தை (Behavioural) என்பன அடங்கும்

II. *செயல்* - அறிதல் (Cognition) நினைவு கூர்தல் (Memory) குவிசிந்தனை (Convergent thinking), விரிசிந்தனை (Divergent thinking) மதிப்பீடு (Evaluation) அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. ***விளைவுகள்*** - அலகுகள் (Units), வகைகள் (Classes) தொடர்புகள் (relations) ஒருங்கிணைப்புக்கள் (Systems) மாற்றியமைப்புக்கள் (Transformation) அனுமானங்கள் (Implications) என்பன அடங்குகின்றன.

இவ்வகையில் மொத்தம் 4x5x6 = 120 நுண்ணறிவுக் கூறுகளை கில்போட் சுட்டிக் காட்டி நுண்ணறிவை முழுமையாக மதிப்பிட வழிகாட்டுகின்றார். இவரது ஆய்வுகள் ஆசிரியர்கள் மாணவர்களின் திறனறிந்து கணிப்பிடவும், உயர்கல்வி, தொழில் வழிகாட்டலுக்கு பெரிதும் உதவுகின்றன.




***நுண்ணறிவுக் கூறுகளின் விளக்கம்***

1. **செயல்கள்**

   i) ***அறிதல் :*** கொடுத்த விவரங்களிலிருந்து கேட்கப்பட்டதை உடனடியாகக் கண்டுபிடித்தல் - பொருள் உணர்தல் ஆகியவை.

   ii) ***நினைவு கூர்தல் :*** கற்ற செய்திகளை நினைவில் இருத்தித் தேவைப்படும் போது வெளிக் கொணர்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) *குவிசிந்தனை* : கொடுக்கப்பட்டுள்ள விவரங்களி-லிருந்து பொதுவாக எதிர்பார்க்கப்படும் சிறந்த விளைவு அல்லது பயன் என்பதை கண்டறிதல்.

iv) *விரிசிந்தனை* : கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் புதுமையான கோணத்தில் உற்று நோக்கி அல்லது மாற்று முறைகளில் சிந்திக்கப் புதிய பயன்பாடுகள், புதிய அணுகுமுறைகளைத் தோற்றுவித்தல்.

v) *மதிப்பிடுதல்* : கொடுக்கப்பட்டுள்ள விவரம் எந்த அளவு பொருத்தமானது, சரியானது, போதுமானது, விரும்பத்தக்கது என்ற முடிவுக்கு வருதல்.

## II. *பொருள்*

i. *உருவம் சார்ந்த* : கையாளப்படும் விவரம் அல்லது செய்தி உருவங்கள், படங்கள் போன்ற பருப்பொருள்களாகவும் அவைகளின் உருவம், அளவு, வண்ணம், ஆகியவைகளையும் தெரிவிப்பதாகவும் அமைந்திருத்தல். எது பின்னணியாக அமையும், எது உருவமாக அமையும் என்ற கோட்பாட்டும் இதில் உள்ளடங்கும். இங்கு பல்வேறு புலன் உணர்வு இடம் பெறக்கூடும்.

ii. *குறியீடு சார்ந்த* : இதில் எழுத்துக்கள், எண்கள், மரபுவழி உபயோகிக்கப்படும் குறியீடுகள், இசைக் குறியீடுகள், சொற்கள், போன்றவை அடங்கும்.

iii. *சொல்பொருள் சார்ந்த* : பொதுவாக உபயோகிக்-கப்படும் சொற்களுக்கான பொருளைப் பெறுதல்; படங்கள் உணர்த்தும் செய்திகள் போன்றவை இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. *நடத்தை சார்ந்த* : மனித இடைவினைகளை வெளிப்படுத்தும் நோக்கத்தில் அமைந்த நம்முடைய அல்லது பிறரது மனப்பான்மைகள், விருப்பங்கள், சிந்தனை, புலன்காட்சி, மனஉணர்வுநிலை போன்ற கூறுகளை உள்ளடக்கிய சொல் சாரா(Non – verbal) விவரங்களே இங்கு கையாளப்படும்.

III. ***வினைவுகள்***

i. ***அலகுகள் :*** தனித்த விவரங்களை ஒன்றிணைத்து பொருள் காணுதல் (அதாவது முழுமைக்காட்சிக் கோட்பாட்டு வழியில் செயல்படுதல்)

ii. ***வகைகள் :*** பொருட்களை அவைகளினிடையே காணப்படும் பொதுப்பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துதல்.

iii. ***தொடர்புகள் :*** கொடுக்கப்பட்ட மாறிகளுக்கிடை-யேயான தொடர்பை யூகித்தறிதல்.

iv. ***ஒருங்கமைப்புகள் :*** கொடுத்த விவரங்களை அல்லது செய்திகளை ஒருங்கிணைத்து ஒரு அமைப்பு அல்லது வடிவத்தை ஏற்படுத்துதல்.

v. ***மாற்றியமைப்புகள் :*** கொடுத்த விவரங்களை அல்லது செய்திகளை வேறுவகையில் வரையறுத்தல், மாற்றியமைத்தல்.

vi. ***அனுமானங்கள் :*** கொடுத்த விவரங்களிலிருந்து நாம் எதிர்பார்க்கக் கூடியவை, தோன்றக் கூடிய விளைவுகள், பெறக் கூடிய கணிப்புகள் ஆகிய-வைகள் இதில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுண்ணறிவை அளவிடுதல் :-

## (Measurement of Intelligence)



இன்றைய விஞ்ஞான உலகில் கணணியின் உதவியுடன் நுண்மதியை அளவிட பல முறையியல்கள் உள்ளன. இவை அனைத்தும் நுண்மதிச் சோதனைகளின் தந்தை என அழைக்கப்படும் அல்பிரட் பீனே அவர்களால் 1904ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உருவாக்கப்பட்ட நுண்ணறிவை அளத்தல் தொடர்பான பீனே நுண்ணறிவு அளவுச்சட்டமே (30வினா கொண்ட பரீட்சை) அடிப்படையாகவுள்ளது. தொடர்ந்து பீனேயுடன் ஸ்ரான்போட் என்ற அறிஞரும் இணைந்து இதனைச் சீர்திருத்தி இது மேலும் பல சீராக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டது. உளத்திறன்கள் வயது அடிப்படையில் விருத்தியாதல் தொடர்பான ஆய்வுகள் மேலும் இத்துறையை அபிவிருத்தி செய்தன.

இங்கு உளவயது என்பது தனியாள் ஒருவருடைய ஆற்றல் மட்டமாகும். இது ஒரு சராசரி மனிதனால் தெரிவிக்கப்பட்ட ஆற்றலை அடையும் வயதைக் குறிக்கும் இதற்குப் பல்வேறு வகையான பரீடசை முறைகள் உண்டு இப்பரீட்சை மூலம் ஒருவருடைய உள வயதைக் கணிக்கலாம்.

## நுண்ணறிவு ஈவு (Intelligence Quotient)

வில்லியம் ஸ்ரேன் என்ற ஜேர்மனிய உளவியலாளர் இவ் எண்ணக்கரு விருத்தி தொடர்பாக முக்கிய பங்கு வகித்தார்.

$$\text{நுண்ணறிவு ஈவு} = \frac{\text{உள வயது}}{\text{கால வயது}} \times 100 \text{ ஆகும்}$$

இங்கு 100ஆல் பெருக்குவது ஈவு பின்னமாக இராமல் முழு எண்ணாக இருப்பதற்கு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நு.ஈவு (Intelligence Quotient)
0
20
30
40
50
60
70
80
90
100
110
120
130
140
150
160
170
180
முட்டாள்கள் (Idiots)
மூடர்கள் (Imbeciles)
பேதையர் (Morons)
நுண்ணறிவு ஊனமுற்றோர் (%)
(Mentally Retarded)
நுண்ணறிவில் கீழ் வரம்பிலுள்ளோர் (5%)
(Borderline)
பிற்படுத்தப்பட்டோர் (14%)
(Back ward)
சாதாரண நுண்ணறிவு பெற்றோர் (60%)
(Average)
திறனுடையோர் (14%)(Superier)
மிக்க திறனுடையோர் (5%)
(Very Superior)
மேதைகள் (1%)
(Genius)
நுண்ணறிவுப் பரவல்

## உலகளாவிய
## ரீதியில் நுண்ணறிவு ஈவு பரம்பல்

1) 140 *மேற்பட்டோர்* - உயர் தொழில் தகமையுடையோர் சிவில் சேவையாளர்கள் விஞ்ஞானிகள்.

2) 130 *மேற்பட்டோர்* - பொறியியலாளர், மருத்துவர், பேராசிரியர், சட்டத்தரணிகள், கணக்காளர்கள்

3) 120 *மேற்பட்டோர்* - பாடசாலை ஆசிரியர், முகாமையாளர்கள்,

120 *மேற்பட்டோர்* - சுருக்கெழுத்தாளர், மருத்துவ தாதிகள்

4) 110 *மேற்பட்டோர்* - தொலைபேசி இயக்குனர், எழுதுவினைஞர், விற்பனையாளர், மின்னிணைப்பாளர்.

5) 100+ *மேற்பட்டோர்* - இயந்திர இயக்குநர், வியாபாரிகள், உலோகவேலை, ஒட்டுவேலை, வர்ணம்பூசுபவர்.

6) 100 *மேற்பட்டோர்* - தச்சு வேலைகள், சாரதிகள், சமையல்காரர்

7) 90 *மேற்பட்டோர்* - தோட்டப பராமரிப்பாளர், சுரங்கத் தொழிலாளர், தொழிலாளர்கள்.

இது பொதுநியதிகள் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவாகவுள்ளதே தவிர இதில் வேறுபாடுகள் உண்டு. தற்போது நுண்ணறிவுச் சோதனைகள் சொல்சார், சொல்சாரா, வினையாற்றல் என்ற வகையில் உள்ளன. எமது நாட்டில் கடந்த 5 தசாப்தங்களாக பல்வேறுமட்ட நுண்ணறிவுச் சோதனைகள் பல தொழில் துறைகளுக்கு நடாத்தப்படுகின்றன. இலங்கைத் தேசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சங்கம் (NESC) நுண்மதிச் சோதனைகளை முதலில் அறிமுகம் செய்தது. 1956ல் L.L.W வேதநாயகம் சொல்சாரா நுண்-ணறிவுச் சோதனையை முதன்முதல் உருவாக்கினார் 1964ல் S.K. மெத்தானந்த மொழி கணித நுண்ணறிவுச் சோதனையை உருவாக்கினார். தற்போது பலவகை நுண்ணறிவுச் சோதனைகள் இலங்கையில் பின்பற்றப்படுகின்றன.

## NESC நுண்ணறிவுச் சோதனை உருப்படிகள் சில

*உரு அளவுச்சட்டம்* - I இதில் 35 உருப்படிகள் உள்ளன. ஞாபகம், நியாயம் காணல், தீர்மானம் எடுத்தல், விளக்கம் என்பவற்றைச் சோதிக்கின்றது.

உ+ ம் : (5) வசந்தி, சிம்ரனிலும் நிறமானவள், ஆனால் ஜோதிகாவிலும் கறுப்பானவள் இவர்களுள் மிகவும் நிறமானவள் யார்?

உ+ ம் (9) ஒரு நகரத்தில் பாடசாலைக்குக் கிழக்கே கோவில் உள்ளது. கோவிலுக்கு எத்திசையில் பாடசாலை உள்ளது.

## பீனே அளவுச் சட்டம் வயது – 2

1. மூன்று துளைவடிவப் பலகை – ஒரு ஐந்து அங்குல வடிவப் பலகையில் துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. ஒரு பிள்ளைக்கு இந்த 3 வெட்டுத் துண்டுகளும் ஒரு சதுரம், ஒரு வட்டம், ஒரு முக்கோணம் என்பன காட்டப்படுகின்றன. அந்தப்பிள்ளை வடிவப்பலகையில் அவற்றைப் பொருத்தும்படி கேட்டல்.

2. கடதாசிப் பொம்மை ஒன்றில் உடலின் பல்வேறு பாகங்களை அடையாளம் காணும்படி கேட்டல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயோக உளவியலில் ஆக்கத்திறன்

புதியனவற்றை உருவாக்கும் உள்ளார்ந்த சக்தியாக ஆக்கத்திறன் உள்ளது. பிரயோக உளவியற்கூறுகளில் இன்று ஆக்கத்திறன் முதன்மை நிலையிலுள்ளது. ஒவ்வொரு மனிதர்களும் ஆக்கத்திறனுள்ளவர்களாகத் திகழ்கின்றார்கள். அத்திறனாலேயே மனிதத்துவ வாழ்வு புதியதாக, மகிழ்ச்சியுடையதாக, சுவையுடையதாகக் காணப்படுகின்றது.

மனிதர்களுடைய விரிசிந்தனைகளுடன் (Divergent think king) தொடர்புடைய ஆக்கத்திறன் (Creativity) ஒரு புதிய பொருளை உருவாக்க, புதிய வழிமுறைகளைக் காண ஒரு கவிதையை, நாடகத்தை, நாவலை எழுத விஞ்ஞானக் கோட்பாட்டை உருவாக்க, புதிய இயந்திரத்தைப் படைக்கும் மனிதத்துவ ஆற்றலாக மிளிர்கின்றது. வீஸ்னர் என்ற பிரயோக உளவியலறிஞர் "மனித அனுபவங்களின் நுண்ணறிவு துறையினூடு புதுமை, புதுப்பெறுமானம் கானும் பங்களிப்புக்களின் விளைவே ஆக்கத்திறன் என்கின்றார். கில்போட் என்ற பிரயோக உளவியலறிஞர் ஆக்கத்திறனின் பண்புகளை 24லாக பிரித்து அவற்றுள் முக்கியமானவற்றை பின்வருமாறு வரிசைப்படுத்துகின்றார்.

1. பிரச்சினை பற்றிய நுண்ணுணர்வு (Sensitivity)
2. தடையின்றி துரிதமாகச் சிந்தித்தல் (Ideational Fluency)
3. சிந்தனையில் நெகிழ்ச்சி (Flexibility)
4. தனித்தன்மை (Originality)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166091
தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
பொது சன நூலகம்

5. அகக்காட்சித் தாவல் (Intutive leap)
6. விடா முயற்சி (Persistance)
7. புதிய தொடர்புகளைக் காண விளைதல் - (Seeking new relationship)

ஆக்கத்திறன் தொடர்பான படிநிலைகளை கிரகாம்வாலிஸ் பின்வருமாறு தெரிவிக்கின்றார். ஆயத்தம் (Preparation), உள்வளர்ச்சி (Incubation) உள்ளொளி தோன்றல் (Illumination), சரிபார்த்தல் (Verification) இப்படிநிலை வளர்ச்சியினூடாக மனிதர்களில் ஆக்கத்திறன் விருத்தியடைகின்றது.



"ஆக்கத்திறனானது அடையாளம் காணக்கூடிய இலக்கொன்றை அடைவதற்கு உதவும் வகையில் புதியதும், அரியதுமான படைப்பை உருவாக்கும் ஒரு செயற்பாடு" – மக்கின் - 1992

1. இக்கூற்றினடிப்படையில் ஜக்சன் - மெறிக் ஆகியோர் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் நியதிகள் நான்கைக் குறிப்பிட்டுள்ளனர் அவற்றைத் தருக?
2. வேர்னர் என்ற பிரயோக உளவியலாளர் தெரிவித்த ஆக்கத்திறன் மட்டங்களைத் தருக?
3. ஆக்கத்திறனை ஊக்குவிக்கும் வகுப்பறைச் செயற்பாடுகளை வரிசைப்படுத்துக?
4. விரி சிந்தனை என்றால் என்ன?

***விடைகள்***

1. i. புதுமை – ஆக்கப்படுவது புதிதாக தனித்தன்மை வாய்ந்ததாக இருந்தல்.
   ii. பொருத்தமான தன்மை – தேவைகளுக்கும், விடுப்புக்களுக்கும் பொருந்தும் தன்மை.
   iii. மாற்றிப்பயன்படுத்தல் - ஒரு விடயத்தை – பொருளைக் கையாளும் போது அணுகுமுறையில் தீவிர இடப்பெயர்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv. சுருக்குதல் - விடயங்களை விரிவு – விளக்கமாகக் கூறாமல் சுருக்கமாகக் கூறுதல்.

2. வேர்னரின் ஆக்கத்திறன் மட்டங்கள்

i. கருத்து வெளிப்பாடு – சுதந்திரமாகக் கருத்து வெளியிடல்

ii. கலைப்பொருள் உற்பத்தில் - ஒரு புதிய நுட்பத்தைப் பயன்படுத்தி பொருள் ஒன்றை செய்தல்.

iii. புதுக்கண்டுபிடிப்பு – தனது செயலாற்றுகை – தேவையை ஒட்டி புதியதைக் கண்டுபிடித்தல் (Inventive)

iv. புதுமைச் சேர்க்கை – நடைமுறையிலிருந்து புதிதாகச் செய்தல். (Innovative)

v. விதி வெளிப்பாடு – செயன் முறைகளில் இருந்து புதிய விதியைக் கண்டுபிடித்தல்.

3. மாணவர்களின் புதுமையான கருத்துக்களை, சிந்தனைகளை, விமர்சனங்களைக் கேட்டு மதிப்பளித்தல். வினாக்களைக் கேட்க ஊக்குவித்தல். சுய கற்றல், செயற்திட்ட வேலைகள், செயன் நிலை ஆய்வுகளில் ஈடுபடுத்தல், நூல்களை வாசிப்பதற்கும், புதிய பரிசோதனைகளை, புதிய ஆக்கங்களைச் செய்யத் தூண்டல், விஞ்ஞான ரீதியான சிந்தனைகளை வளர்த்தல், ஓவியம், சங்கீதம், நடனம், நாடகம், இலக்கியப்படைப்புக்களைத் தோற்றுவிக்க ஊக்கமளித்தல், நெகிழ்ச்சியான வகுப்பறை - இணைபாடவிதானச் செயற்பாடுகள். கண்டறிமுறை ஆராட்சி, பரிசோதனை, கள வேலைகளில் ஈடுபடுத்தல்.

4. விரிசிந்தனையானது தூண்டல்களுக்கு சாத்தியமான பல்வேறு துலங்கல்களை தோற்றுவிக்கின்றது. புதிய கோணத்தில் சிந்தித்தல் ஒரு பிரச்சினையை பல்வேறு வழிகளில் கையாளுதல், பரந்த அளவில் பல்பரிமாணங்களில் புதுமைகளை - கண்டுபிடிப்புக்களை செயன்முறைகளைச் சிந்தித்து உருவாக்கல் என்பதாகவுள்ளது. உ+ம் கற்பனைக்கட்டுரை எழுதல், புதிய கோட்பாடுகளை உருவாக்கல், ஆழமான புதிய கருத்தோற்றங்களை அழகியல் கலைகளை அரங்கேற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கத்திறன் உள்ளவர்களின் பண்புகள்

❋ உற்றுநோக்குதல், செயலில் முழுமையான ஈடுபாடு, ஆர்வமிகுதி.
❋ எழுதுதல், படித்தல், ஓவியம் வரைதல், துறைசார் நிபுணத்துவ செயற்பாடுகள்.
❋ பிறர் கூறுவதை உடனடியாக ஏற்காமை, ஒரு கருத்தைப் பல கோணங்களில் ஆராய்தல், எளிதில் கவனத்தை சிதரடிக்காமை.
❋ தன் புதிய கருத்துக்களை எடுத்துக்கூறுவதில் ஆர்வம், ஆக்கச் செயற்பாடுகளில் தொடர்ந்து சலிப்பின்றி ஈடுபடல்.
❋ புரட்சிகரமான கருத்துக்களை அச்சமும் - கூச்சமும் இன்றி சுதந்திரத்துடன் எடுத்துக்கூறல்.
❋ பிரச்சினைகளுக்கு ஒரு விடையுடன் நின்றுவிடாமல் மாற்று விடைகளைக் கண்டு பிடித்தல்.
❋ தனிமையை விரும்புதல், தடையில்லாத சிந்தனை உயர் அறிவாற்றலில் ஆர்வம், மேன்மையான காரணிகளைக் காணும் ஆற்றல்.
❋ பரந்த அறிவும் - ஆர்வமும் - புதிய பொழுது போக்குகள், சேகரிப்பாளராக இருத்தல். தன்னைப்பற்றிய உயர்வான மதிப்பு.
❋ துரித அசாதாரண சக்தி, ஞாபகத்திறன், விரைவாகவும் இலகுவாகவும் கற்கும் ஆர்வம்.

இப் பண்புகள், உள இயக்க ஆற்றல்களின் வெளிப்பாடாகத் துலங்குகின்றன. பாடாசலை மாணவர்களின் ஆற்றல்களுக்கு உயிரூட்டவல்ல ஆக்கத்திற-னுக்கான சூழலைப் பாடசாலை-கள் வழங்க வேண்டும். பொருள் ஒன்றின் அழகு மாண-வனைக் கவருகின்றது. மகிழ்ச்-சியடைகின்றான். அதனூடாக அவன் பெறும் நயப்பு எழுச்சி ஆட்சியினூடாகப் பிறக்கின்றது. தான் நயத்ததை வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆவல் அவனிடத்தில் தோன்றுகின்றது. இத்தகைய உந்தலினால் தூண்டப்பட அவன் புதிய ஆக்கம் ஒன்றைச் சிருஸ்டிக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ்வாறான கருத்தியல்கள் கலை ஆர்வம், பின்பற்றிய ஆக்கம், நிர்மான ஆக்கம், விஞ்ஞான ஆக்கம் என்பவையாகப் பிறக்கின்றன. இவை உள ஆற்றலின் பிரதி விம்பங்களாகவே உள்ளன.

## அழகியல் கலைகளும் ஆக்கத்திறனும்

இன்றைய நவீன பிரயோக உளவியற் செல்நெறியில் மாணவர்களதும், ஆசிரியர்களதும், மனிதர்களதும் ஆக்கத்திறன்களையும், ஆளுமைகளையும் விருத்தியாக்குபவையாக அழகியற் கலைகளை உள்ளதை உளவியலாளர்கள் எடுத்தியம்புகின்றனா.

சாதாரண மனிதன் அழகான பொருட்களை விரும்புகின்றான். ஆக்கத்திறனுள்ள மனிதன் அழகை விரும்புகின்றவன் என கிரேக்க தத்துவ ஞானி பிளேட்டோ தெரிவிக்கின்றார். அழகியலுணர்வு (Esthetle Sence)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கத்திறன்களையும், மனிதப் பண்புகளையும் ஆளுமை-யையும் வளர்ப்பதாக ரவீந்திரனார் தாகூர் தெரிவிக்கின்றார். அழகியல் கலைகள் இரசித்தல் இன்பத்தையும் ஆக்கத்திறன்-களையும் தோற்றுவிக்கின்றன. யாதேனும் நிகழ்வுப் புலன்-களை வருடுவதால் ஒருவனுள் ஏற்படும் மானசீகமான திருப்தியும் இன்பமும், ஆக்கத்திறனும் இரசித்தலாகப் பரிணமிக்கின்றது.

இன்பத்தைத் தோற்றுவித்தலின் ஆரம்பம் புலனுணர்-வாகும். ஐம்புலன் உணர்வுகளினூடாகச் சுவைகள் தோன்று-கின்றன. புலன்களை வெளிப்படுத்தும் உணர்வுகளினூடாக மனம் அழகியலனுபவங்களையும் ஆக்கத்திறன்களையும் பெறுகின்றது. இத்தகைய அனுபவங்களைப் பெற ஆர்வ-முள்ளவர்களுக்கு காதில் கேட்கும் பாடல், கவிதை, கண்முன் தெரியும் ஓவியம். நடனம், நாடகம், திரைப்படம் என்பன புலன்களைத்தூண்டி அழகியலுணர்வை - இரசிப்பை ஆக்கத்திறனை வெளிப்படுத்துக்கின்றன.

அழகியல் இரசனையால் ஏற்படும் சுவை பேரின்-பத்திற்கு ஈடாகக் கருதப்படுகின்றது. இவ்வாறே ஒரு ஆக்கத்தை வெளியிடுபவனுடைய உணர்வும். இவ் உணர்-வுக்குக் காரணம் சுவையும் மகிழ்ச்சியும் ஒன்றானவையல்ல. உயர்ந்த சுவையானது ஆசைகளில் இருந்து விடுபட்ட ஒன்றாகவுள்ளதாகும்.

இரசனை அனுபவமும் ஆக்கத்-திறனும் மனித வாழ்க்கையை – உளவிருத்தியைப் பிரகாசிக்-கச் செய்வன. நல்லெண்ணங்-களால் உடலும் உள்ளமும் புத்துயிர் பெறுதலே இதற்குக் காரணம். சுழலும் சக்கரம் போல் என்றும் ஒரே மாதிரியான வாழ்க்கையை அனுபவிக்கும் மனிதன் அழகியல் - புத்தாக்க இரசனை அனுபவம் மூலமாகத்-தான் ஆறுதலும் மகிழ்ச்சியும் பெறுகின்றான். ஆக்கத்திறனும் - அழகியலும் வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கத்திறன் சோதனைகள்

பல்வேறு வகையினருக்குப் பல வகையான ஆக்கத்திறன் சோதனைகள் கணனித்துறை வரை விரிவடைந்துள்ளன. ஆக்கத்திறன் பற்றிய மின சோட்டா சோதனைகள், பாசியின், சர்மா ஆகியோரும் உருவாக்கியுள்ளனார். உதாரணமாக

1. இயல்பான பயன்களுக்கு அப்பால் புதிய பயன்களை வினவுதல், சூரிய ஒளி திடப் பொருளாக இருந்தால்?

2. நடக்க இயலாத நிகழ்ச்சிகளை 5 நிமிடங்களில் பட்டியலிடுக.

3. கதையை ஆரம்பித்து முடிக்கக்கூறுதல் அதற்குப் பெயர் சூட்டச் சொல்லுதல்.

4. முடிவுறாத உருவங்களை வரைந்து அவற்றை முடிக்கக்கூறுதல்.

5. காகித வெட்டுருக்களைக் கொண்டு புதிய ஆக்கங்களை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கைக் கால விருத்தி

மனிதன் கருவுற்று பிறந்து வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடர்ச்சியாகப் பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றான். பல வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்களினூடாக வளர்ச்சியடைகின்றான். இவ் வாழ்க்கைக் கால விருத்தி பற்றி பிரயோக உளவியலறிஞர் ஹவிக்கேர்ஸ்ட் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"பிள்ளைகள் தொடர்பான ஆய்வுகள் மிக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. அவர்களின் குமரப்பருவம் தொடர்பான ஆய்வு ஆர்வம் முன்னையதைவிட அண்மைக் காலத்திலும். முதியோர் மீது புலப்படுத்தும் ஆர்வம் மிக அண்மைக்காலத்திலும் விருத்தியடைந்துள்ளன. இவை தொடர்பான ஆய்வுகள் மனித நடத்தைச் சீராக்கங்களுக்குப் பெரும் உதவியளிக்கின்றன. "என்கின்றார்.

### *வாழ்க்கைகள் கால விருத்தியானது.*

1. புலன் உணர்ச்சிகளைத் தொகுத்தறிதலில் ஏற்படும் முன்னேற்றம்.
2. நடத்தையின் இயல்புகளிலும் வகையிலும் ஏற்படும் முன்னேற்றம்.
3. செயற்படும் முறைகள் உயர் நிலைப்பருவத்தால் எழும் முன்னேற்றம்.
4. இறந்த கால அனுபவங்களை மனதில் கொண்டு எதிர்காலத்திற்குத் திட்டமிடுவதால் தோன்றும் முன்னேற்றம்.
5. நடத்தையில் சுய கட்டுப்பாடு இடம் பெறும் அளவில் முன்னேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற காரணிகளின் ஒன்றோடு ஒன்று தொடர்பான இணைந்த அறிகுறிகளை வாழ்க்கைக் காலவிருத்தியனுவகு-முறை எடுத்தியம்புகின்றது. இங்கு விருத்தி என்பதை உளவியவறிஞர் வண்டர்ஸன் டென் பின்வருமாறு தெரிவிக்-கின்றார். "விருத்தி என்பது எண்ணக்கரு உருவாக்கம் தொடக்கம் வாழ்க்கைக் காலம் முழுவதும் தொடரும் இயக்கக் கோலம் அல்லது மாற்றக் கோலமாகும்" என்கின்றார். விருத்தியானது உயிரியல், அறிவுத்துறை, சமூக உணர்ச்-சித்துறை ஆகியவை சார்பான ஒன்றோடு ஒன்று பின்னிப்-பிணைந்த சிக்கலான செயற்கிரமமாகவுள்ளது.

உயிரியல் சார் செயற்கிரமங்களில் தனிமனினுடைய உடலியல்புகள் தொடர்பான மாற்றங்கள், உடல் உறுப்பு-களின் விருத்தி, இயங்கும் திறன்கள், மாற்றங்கள், பூப்புக்காலத்தில் நிகழும் சுரப்புகளினால் ஏற்படும் மாற்றங்கள், முதுமையில் நிகழும் மாற்றங்கள் என்பவை அடங்குகின்றன. அறிவுத்துறையில் சிந்தனை, மொழிவிருத்தி நுண்மதி, எண்ணக்கருவாக்கம். என்விருத்தி தொடர்பாகவும், சமூக உணர்ச்சிச் செயல்களாக ஏனையவர்களுடனான தொடர்பு, உணர்ச்சிமாற்றங்கள், ஆளுமை மாற்றங்கள் என்பன அடங்குகின்றன.

*வாழ்க்கைக்கால விருத்திப் பருவங்கள்*

1. **கருநிலைப்பருவம்** - மனித உயிரி கருவுற்றதிலிருந்து பிறப்பு வரையான காலம் மிக வரைவான வளர்ச்சிக்காலமாகவுள்ளது.

2. **சிசு நிலைப்பருவம்** - பிறப்பிலிருந்து 18 – 24 மாதங்கள் வரையான காலம், சீரான உடலசைவு சிந்தனை, மொழி, ஏனையோருடனான தொடர்பாடல் விருத்திகள் நிகழும்.

3. **தொடங்கு நிலைப்பருவம்** - சிசு நிலைப்பருவ முடிவிலிருந்து ஐந்து வயது வரையான காலப்பகுதி. மூளைவளர்ச்சி நிறைவடைகிறது. தன்னிசைவு, சுயகவனிப்பு, அறிவுறுத்-தல்களைக் கடைப்பிடித்தல், சக சிறார்களுடனான உறவாடல், விளையாட்டுக்களில் ஈடுபாடு, புதுமைகளைக் காண விளைதல் என்பன நிகழ்கின்றன. சிறுவர் பாடசாலைப்பருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. **இடைநிலை Or கடைநிலைப்பிள்ளைப்பருவம் -**
ஆறு வயது தொடக்கம் 11 வயதான காலமாகும். ஆரம்பப் பாடசாலைப் பருவம், வாசிப்பு, எழுத்து எண் தொடர்பான தேர்ச்சி பெறல். பரந்த உலகம் - பண்பாடு பற்றிய விளக்கங்கள், சுயகட்டுப்பாட்டுத்திறன் விருத்தி, குடும்பத்திலிருந்து பாடசாலைச் செயன்முறைகளில் அதிகம் பங்காற்றல்.

5. **கட்டிளமைப் பருவம் :** சுமார் 11 வயதிலிருந்து 18 – 22 வயது வரையான காலம் இதனைச்சிலர் இரண்டாம் பிறப்பு எனவும் சிக்கலான அமைதியற்ற பருவம் எனவும் கூறுவர். உயரம், நிறை, உடல் வளர்ச்சியில் விரைவான மாறுதல்கள், சுதந்திரப் போக்கு, சுய அடையாளம் பேணல், இலட்சியங்கள் தொடர்பான சுய எண்ணங்கள், பாலியலூக்க இயல்புகள் காணப்படும்.

6. **முதிர்பருவ முதற்கட்டம் :** இருபது வயதிலிருந்து முப்பது – முப்பத்தைந்து வயது வரையான காலமாகும். சொந்த விடயங்களில் தீர்மானம் எடுத்தல், பொருளாதார – தொழில்விருத்தி, கணவன், மனைவி தெரிவு, குடும்ப அலகின் உருவாக்கம், பிள்ளை வளர்ச்சி அனுபவங்கள் பெறல்.

7. **முதிர்பருவ இடைக்கட்டம் :** முப்பத்தைந்து வயதில் தொடங்கி அறுபது வயதுவரை நீடிக்கும் காலப்பகுதியாகும். சொந்த – சமூக வழ்வில் ஒருவர் புலப்படுத்தும் ஈடுபாடு, பொறுப்புணர்ச்சி என்பன விரிவடையும், அடுத்த தலைமுறையினருக்கு தகைமையையும், அனுபவங்களையும், முதிர்ச்சியையும் வழங்கும் காலம். வாழ்க்கைத் தொழிலைப் பேணிய மன நிறைவடைதல்.

5. **முதிர்பருவ பிற்கட்டம் :** அறுபதுகளில் தொடங்கி இறக்கும் விரையான காலப்பகுதியாகும். உடல் நல தளர்ச்சிகளுக்கு ஏற்ற பொருத்தப்பர்டு காணல். ஓய்வுக்கால வாழ்வு, வாழ்வுபற்றிய மீள் பரிசிலனை, பேரப்பிள்ளைகளைப் பராமரித்தல், சமூக நடிபங்கு தொடர்பான பொருத்தப்பாடு, ஆன்மீகத்தில் அதிக நாட்டம் என்பன நிகழ்கின்றன. இன்றைய நவீன பிரயோக உளவியலில் முதிர்பருவம் தொடர்பான ஆய்வுகளின் அக்கறை உலகளாவிய ரீதியில் பெருகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது வாழ்விலேயே மறக்க முடியாத பருவம் பாடசாலையில் முதல் முதல் கற்கச் சென்றது. தொடர்ந்து கட்டிளமைப் பருவத்தில் எனது காதல்......... அந்த நினைவுகள் மிக மகிழ்ச்சியானவை" – ஒரு வயதான பாட்டியின் கூற்று.

1. வாழ்வதற்குரிய மிகச்சிறந்த பருவம் எது?
2. எப்பருவத்தில் மிக மகிழ்ச்சியாக இருக்க முடியும்?
3. போல் பரல்ட்ஸ் (1987) என்ற பிரயோக உளவியலாளர் மனித விருத்தி மாற்றம் பற்றி என்ன கூறுகின்றார்.
4. கட்டிளமைப்பருவம் முதிர்பருவ பிற்காலம் தொடர்பான விளக்கம் ஒன்றைத்தருக.

***விடைகள்:***

1. பொதுவாழ்க்கையில் ஒவ்வொரு வயதுக்குழுவும் தமக்கேயுரிய இன்பங்களையும், சிரமங்களையும் அனுபவிக்கின்றார்கள். உயர்வுகளையும், தாழ்வுகளையும் எதிர்நோக்குகின்றார்கள். தனியாட்கள் குமரப்பருவத்திலே பல உணர்வுகளால் பீடிக்கப்பட சந்தர்ப்பங்கள் அதிகமாகவுள்ளன. பொதுவாக விருத்தியானது வாழ்நாள் முழுவதும் நிகழ்வது. எந்த அகவைப்பருவமும் மனித விருத்தியில் ஆதிக்கம் செலுத்துவதில்லை. எனவே வாழ்வில் ஒவ்வொரு நிலையிலும் வெற்றிகரம் இழப்பீடுகளும் உள்ளன. எல்லாப்பருவங்களுமே வாழ்வதற்குரிய சிறந்த பருவங்களேயாகும். இத்தத்துவத்தை மனிதன் உணரும் போதுமகிழ்ச்சி அவதைத்தேடி வரும்.

2. மனித வாழ்க்கைக்காலம் முழுவதும் நிகழும் மானிட விருத்தியின் புதிர்களை விடுவித்து உண்மைகளை அம்பலப்படுத்துவதற்துவதற்காக பிரயோக உளவியலாளர்கள், சமூகவியலாளர்கள், நரம்பியலாளர்கள், ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். மனித உயிரிகள் தாம் வாழும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப மகிழ்ச்சியாக இருக்கின்றன. இம் மகிழ்ச்சி குறித்த இந்தப்பருவத்தில் தான் உண்டு என்பது தவறானதாகும். தனிநபர் மாறும் உலகிலே மாறும் உயிரியாக விளங்குகின்றார். குறித்த சந்தர்ப்பத்திக்கு ஏற்ப பொருத்தப்பாடு காணல் அவரது மகிழ்ச்சிக்கும் வெற்றிக்கும் பலனளிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. "மனித விருத்தி மாற்றம் என்பது இளமையில் நிகழ்வது போலவே முதிர் பருவத்திலும் நிகழ்கின்றது என வாழ்க்கைக்கால விருத்தி அணுகுமுறை ஆய்வுகள் தெளிவாக்குகின்றன. மானிட விருத்தி என்பது வாழ்நாள் முழுவதும் நிகழ்வது, பல்பரிமாணம் உள்ளது. பல் நெறிகளில் சொல்வது. நெகிழும் பண்புடையது. வரலாற்று ரீதியான சிறப்புடையது. பல் பயில்வு சார்ந்தது, சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப நிகழ்வதாகும்."

**4. கட்டிளமைப் பருவம் :**

கட்டிளமைப் பருவத்தில் ஆண்களும், பெண்களும் தங்கள் உடல் வளர்ச்சியின் உச்சத்தை அடைகின்றார்கள். உடலியல் மாற்றங்கள் விரைவாக நடைபெற்று பால் முதிர்ச்சி ஏற்படுகின்றது. தமக்கென ஒரு தனித்தன்மையை (Identity) ஏற்படுத்திக் கொள்கின்றனர். தம் எதிர்காலம் பற்றிய முடிவுகளை எடுக்கத் தொடங்குவதுடன் எதிர்பாலாரிடையே கவர்ச்சியை அளிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுபவர், பிரயோக உளவியலறிஞர் ஸ்டான்லி ஹெல் இப்பருவத்தை சிக்கலான அமைதியற்ற பருவம் (Period of storm and stress) எனக் குறிப்பிடுகின்றார். இவர்களுக்கு சரியான வழிகாட்டல்களை குடும்பமும், பாடசாலையும், சமூகமும், ஊடகங்களும் அளிக்காத சந்தர்ப்பங்களிலேயே புறழ்வுகள் ஏற்படுகின்றன.

"பெண்களுக்குக் கூண்டுகளும், ஆண்களும் சிறகுகளும் கிடைக்கும் பருவம்" என எம்மூர்கவிஞன் இப்பருவம் பற்றிப் பாடினான். இன்றைய எமது நாட்டு கட்டிளமைப்பருவத்தினர் தம்மைப்பற்றிய விஞ்ஞான பூர்வ விளக்கமற்று, புரிந்துணர்வு பாலியல் கல்வி தொடர்பான விளக்கமற்று பல பாதிப்புக்களை எதிர் நோக்குகின்றனர். இவ்விடயங்களில் மறைக்கப்பட வேண்டியவை எதுவுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பருவத்தினருக்கு உண்மைக்குப் புறம்பான, தம் தேவைகளை நிறைவேற்ற பலர் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்ட சந்தர்ப்பங்களை வழங்குவர். நீல திரைப்படங்கள், மஞ்சல் பத்திரிகைகள், போன்றவற்றின் தவறான கருத்துக்களால் இப்பருவத்தில் குழப்பமடைவர். இவற்றைத் தடுக்க கட்டிளமைப்பருவத்திருக்கும், பாடசாலை மாணவர்-களுக்கும் பாலியல் கல்வி (Sex education) வழங்கப்பட வேண்டும்.

குமரப்பருவத்தினரின் சிறப்பியல்புகளாக விரைவான உடல்வளர்ச்சி, தன்னுணர்வு, பாலூக்கம், சுயசார்பு இலட்சிய போக்கும் யதார்த்தமும், தொழில் தேர்வும் சுயசார்பும் என்பவையாகவுள்ளன.

இன்றைய விரைவாக சமூக மாற்றங்களால் நாகரீகத்தால் கட்டிளமைப்பருவத்தினர். மோசமான பாதிப்புக்களுக்கு ஆளாகியுள்ளனர். இது அவர்களின் எதிர்கால வாழ்வையே பாலாக்கிவிடுகின்றது. இலங்கையில் தரம் 11, 12 களில் கருவுறும் பாடசாலை மாணவிகளின் வீதம் மிக வேகமாக அதிகரித்து வருகின்றது.

சிறுவர் பாலியல் துஸ்பிரயோகத்திலும் உலகிலே இலங்கைக்கு மூன்றாமிடம் என்ற வகையில் பாலியல் சார் அறிவை - விழிப்பை இளைஞர்களிடையே ஏற்படுத்த வேண்டியுள்ளது.

"எனது மார்பகம் சிரியதாக உள்ளதே, எனக்கு மீசை முளைக்கவில்லையே, எனது கண்கள் வடிவில்லையே, எனது உயரம் போதாதே, ஏன் முகத்தில் பருக்கள் தோன்றுகின்றன. எனது சில உறுப்புக்கள் ஏன் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளன? எதிர்பாலாரிடையே பழக – பேச – தொட அன்பைப் பரிமாற ஆசையாக உள்ளதே?" என்றவாறான உணர்வுகள் உங்களுக்கும் ஏற்பட்டிருக்கும்மல்லா? இவ் உணர்வுகள் ஏற்படுவது இயல்பே இதற்கு கட்டிளமைப்பருவத்தில் உடலில் ஓமோன்களின் சுரப்புக்கள் காரணங்களாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கபச்சுரப்பி – பாலியல் ஓமோன்களின் தொழிற்பாடு




பொது சன நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆண் பாலியல் ஓமோன்கள் - தெஸ் தொஸ்தரோன்

இவ்வாறான செயற்பாடுகளினால் பாலுணர்வு தலை தூக்குகின்றது. இவ்வேளை ஆரோக்கியமான பாலியலறிவு வழங்கப்படுகின்ற போதும், திறன்களை வேறு விருத்தி நடவடிக்கைகளில் திசை திருப்புகின்ற போது இவர்களுடைய ஆளுமை விருத்தியடைகின்றது தம்மை அடையாளம் காணவும் சுய மதிப்பீடு செய்யவும் உதவுகின்றது.

கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகளை நிறைவு செய்தல், அவர்களது பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளுதல், முறையான பாலியல் கல்வி பெற வைத்தல், பாலுணர்வு தாக்கங்கள் - மனவெழுச்சிகள், நடத்தைகளைத் தீர்க்க வழிகாட்டல், அவர்களது எண்ணங்களுக்கு மதிப்பளித்து முதிர்பருவத்தையும் கட்டிளமைப் பருவத்தையும் இணைக்கும் எண்ணக்கருச் செயற் திட்டங்களை விருத்தியாக்குவதன் மூலம் இவர்களை நற்பிரசைகளாக்கலாம். இவ்வாறாக ஒவ்வொரு விருத்திப் பருவங்களில் உள்ளவர்களுக்கும் பல்வேறு வழிகாட்டல் முறையியல்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கைகால விருத்தியில் முதிர்பருவ பிற்கட்டமைப்பு

இன்று உலகளாவிய ரீதியில் வயோதிபர்களுடைய சனத்தொகை சுகாதார அபிவிருத்திகளால் பெருமளவு அதிகரித்து வருகின்றது. இவர்களுடைய உணர்வுகள், உளத்தேவைகள், அமைதியான நல்வாழ்வு தொடர்பாகப் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன.

இவர்களைப் பிள்ளைகள் மனம் கோணாமல் பராமரித்தல் பெரும் பிரச்சினையாகியுள்ளது. முதியோர் இல்லங்கள் பெருகி வருகின்றன. இவை ஆக்க பூர்வமான மனித விழுமியங்களைச் சிதைக்கின்றன. எனவே இது தொடர்பான உளவியல் விழிப்புணர்வுகளும் - ஆய்வுகளும் பெருகியுள்ளன. தமது வாழ்க்கைக் கால இறுதியில் மனத்துன்பங்களுடனும், வேதனையுடனும் இருக்கும் இவர்களுக்கான உள விளையாட்டுக்கள், அதிகூடிய சலுகைகள், பராமரிப்புக்கள் வெளிநாடுகளில் பின்பற்றப்படுகின்றன.

இவ்வாறாக மனிதனின் வாழ்க்கைக் கால விருத்திப்பருவ உளவியல் ஆய்வுகள் இன்று பல்கிப் பெருகியுள்ளன. இவை தொடர்பான அடிப்படைகளை சிக்மன்பிராய்டின் உளப்பகுப்புக் கொள்கை, ஜீன் பியாஜேன் அறிவு வளர்ச்சிக் கொள்கை என்பன விரிவான விளக்கங்களைத் தந்துள்ளன. இது பற்றி பிரயோக உளவியல் I நூலின் காணலாம். இங்கு எரிக்சன் (1902 – 1994) அவர்களின் கொள்கை தரப்படுகின்றது.

### எரிக் எரிக்சனின் கொள்கை:

இவர் மனித விருத்தியின் உள சமூகக் கட்டங்களைப் பின்வருமாறு தருகின்றார்.

166091



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம்- I

## நம்பிக்கை எதிர் அவநம்பிக்கை

இது முதலாவது உள சமூக வளர்ச்சிக்கட்டம், ஒருவயதான இப்பிள்ளைக்கு பெற்றோர் தேவைகளை நிறைவேற்றி பாதுகாப்பான சூழலை வழங்க வேண்டும். அப்போது பிள்ளை உலகின் மீது நம்பிக்கை வைக்கும். இந்த நம்பிக்கையே இவ்வுலகு இனிய நலன்கள் உடையது. இன்பமான மகிழ்ச்சியும் தரும் வாழ்விடமான எதிர்ப்பிற்குத் துணை புரிகின்றது. இக் காலத்தில் அவ நம்பிக்கையான நிகழ்வுகள் நடந்தால் பிள்ளை பாதிப்படையும்.

## கட்டம் II

## தன்னாட்சி எதிர் வெட்கமும் சந்தேகமும்

ஒன்று தொடக்கம் மூன்று வயது வரையான வயதுடைய இப்பிள்ளைகள் தமது நடத்தைகள் தமக்கே உரியன பிறருக்குரியன அல்ல என்பதை அறியத் தொடங்கு-கின்றன. தமது சுதந்திரம் - தன்னாட்சியுரிமையை வலியுறுத்த முற்படுகின்றன. தம் ஆசைகளை நிறைவேற்ற விரும்புகின்றன. இக்கட்டத்தில் அதிக கட்டுப்பாடுகள் விதித்தால், தண்டனை-யைக் கடுமையாக விதித்தால் தம்மீது சந்தேகமும், வெட்கத்-தையும் உணர்வார்கள். இது பாதகமான நிலைமைகளை ஏற்படுத்தும்.

## கட்டம் – III

## செயற்துணிவு எதிர் குற்ற உணர்வு

முன்பள்ளிக் காலமான (3 – 5வயது) இதில் குடும்பத்-திலிருந்து விரிந்த சமூக உலகினை எதிர் நோக்குகின்றார்கள். இதற்கு முன்னைய பருவத்தைவிட அதிக சவால்களை இப் பருவத்தில் எதிர்நோக்குகின்றார்கள். இச்சவால்களைத் திறனுடன் அடக்கும் தேர்ச்சியும் - செயலூக்கமும் இவர்-களுக்கு வழங்கப்பட வேண்டும். தமது உடல், நடத்தை, பொம்மைகள், செல்லப்பிராணிகள் ஆகியன தொடர்பாகப் பொறுப்புக்கள் வழங்கப்படல் சாலச் சிறந்தது. இதன் மூலம் செயற்துணிவு ஏற்படுகின்றது. இதனை வழங்காத சூழலில் எதிர் குற்ற உணர்வை இவர்கள் பெற்று உளைச்சல் அடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டம் iv

## தாராண்மை எதிர் தாழ்வுச் சிக்கல்

இடைநிலைக் கல்வி ஆரம்பக் கட்டமாகுதல் பிள்ளைகள் தமது அறிவை விருத்தியாக்கி தம் சக்தியை நெறிப்படுத்துகின்றனர். ஆசிரியர்களின் வழிகாட்டல் இதில் கூடுதல் முக்கியம் பெறுகின்றது. சரியான நெறிப்படுத்தலையும் பிள்ளைகள் சார்பாக மேற்கொள்ள வேண்டும்.

மறைமுக செயலூக்கத்திற்குப் பதிலாக நேர்மயமான செயலூக்கத்தை வழங்கும் பெற்றோரும், ஆசிரியரும் பிள்ளை மனநிறைவடைய குறைபாடுகளை இயம்புவர் எனின் தாழ்வுச்சிக்கல்கள் ஏற்பட்டு பிள்ளையின் உளநலம் பாதிப்படையலாம்.

## கட்டம் V

## அடையாளத் துவக்கம் எதிர் அடையாளக் குழப்பம்

இக் கட்டம் கட்டிளமைப்பருவத்திற்கு உரித்தானதாகும். இப்பருவத்தினரின் நல்ல அடையாளத் துலங்கலுக்கு, தீர்மானங்களை மேற்கொள்ள, பொறுப்புக்களை ஏற்க, உயர் கல்வி, தொழில் தெரிவு என்பவற்றிற்குச் சரியான வழிகளைப் பெற்றார் ஆசிரியர், சமூகம் வழங்கும் போது இவர்கள் தனித்துவமான தம் அடையாளத் துலங்கலை வெளிப்படுத்துவர். இதில் தேக்கநிலை காணப்படின், திணிப்புக்களை ஏற்படுத்தின். அவர்கள் பிரச்சினைகளைச் சீராகப் பரிசீலிக்காவிட்டால் தனித்தன்மையான அடையாளம் புலப்படாத குழப்பம் ஏற்படும். இது பிறழ்வு நடத்தைகள், வன்முறை, பாலியல் துஸ்பிரயோகம், போதைப்பொருள், பாவனை என்பவற்றில் ஈடுபடுபவர். எனவே மிகக் கவனமாகக் கையாள வேண்டிய பருவமாகவுள்ளது.

## கட்டம் – VI

## உறவு தொடர் நெருக்கம் – உறவு இல்லா தனிமை

தனிநபர் குடும்பப் பிணைப்பை ஏற்படுத்த உறவுப் பிணைப்புக்களை ஏற்படுத்தும் செயன்முறையாகவுள்ளது. உறவு நெருக்கம் என்பது ஒருவர் தன்னை உணர்தலும் மற்றொருவரிடம் தன்னைத்தானே இழத்தலும் என எரிக்சன் தெரிவிக்கின்றார். பிறரோடு ஆரோக்கியமான நட்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவையும், தன் குடும்பத்துணையிடம் மிக நெருங்கிய உறவையும் உருவாக்கல் இப்பருவத்தில் அவசியம் இல்லையேல் உறவு இல்லாத மோசமான நிலை ஏற்படும்.

## கட்டம் VII

## பிறப்பிக்கும் நிலை எதிர் தேக்க நிலை

குடும்ப நிலையில் புதிய சந்ததியைத் தோற்றுவித்தல், அவர்களுக்கான சரியான வழிகாட்டல்களை, சேவைகளைச் செய்தல். பல்வேறு சேவைகளை அடுத்த சந்ததிக்குச் செய்யும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல், இல்லை எனில் ஒரு தேக்க நிலை ஏற்படும். இது மனச் சோர்வு, உளப்பாதிப்பு, மன அழுத்தம் என்பவை ஏற்பட ஏதுவாகும். வெறுப்புணர்வும் வாழ்வின் அர்த்தம் நிறைவேறாத இழப்புணர்வும் கிளர்ந்து எழும்.

## கட்டம் – VIII

## முழுமை எதிர் சோர்வு

இது மனித வாழ்க்கையின் இறுதிக்கட்டமாகும். தனது வாழ்க்கைப் பருவத்தின் மீள் பார்வையாக இப்பருவம் அமைகின்றது. தனது பருவத்தில் செய்த சாதனைகள். வெற்றிகள் முழுமையான திருப்தியை வழங்கும். இல்லையெனில் சோர்வு நிலை ஏற்படும். முன்னைய பெரும்பாலான பருவங்களில் எதிர்மறை மனப்பாங்குடன் செயற்பட்ட நிலைகள் வேதனைகளையும் சோர்வுகளையும் வழங்குகின்றது.

எரிக்சனின் இக்கட்டங்கள் தொடர்பாகப் பல விமர்சனங்கள் உள்ள போதும் மனித வாழ்க்கைக் கால அபிவிருத்திக் கொள்ளை நோக்கில் பல பாடப் பதிவுகளை இக் கொள்கை இயம்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதர்களில் நினைவு கூறலும் - மறத்தலும்

மனித உளச் செயலாற்றுகையில் நினைவு கூறுதலும் - மறத்தலும்(Remembering and forgetting) மிக முக்கிய-மானவையாக உள்ளன. பழைய அனுபவங்களைத் தகவல்-களை விடயங்களைச் சேமித்து வைத்து, எதிர்கால நடத்-தையில் அவற்றை ஏதோ ஒரு வகையில் பயன்படுத்தும் தேர்ச்சியை நினைவு கூறல் எனலாம். இங்கு உள்வியலாளர்கள் தற்போது நினைவிருத்தல் (Memory) என்பதை விட நினைவு கூர்தல் (remembering) என்ற சொல்லையே பெரிதும் பயன்படுத்துகின்றனர். இதுவே துடிப்பான உளச் செயலாக உளவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். நினைவு கூர்தல் பின்வரும் மூன்று படிம நிலைகளில் நிகழ்கின்றது.

i. கற்றல் அல்லது நினைவிருத்தலுக்கானவற்றை மனப்-பாடம் செய்தல் (Memorizing)

ii. இருத்தி வைத்தல் அல்லது சேமித்து வைத்தல் (Retention)

iii. வெளிப்படுத்தல் அல்லது நினைவில் தேக்கி வைத்தவையோடு தொடர்பு கொள்ளுதல் (retrieval)

மேலும் நினைவின் வகைகள் மூன்றாகவுள்ளன.

அ. புலனறிவு நினைவு (Sensory memory)

ஆ. குறுகிய கால நினைவு (Short term memory)

இ. நீண்டகால நினைவு (Long term memory)

இவற்றினூடாக நினைவாற்றல், நினைவுச் சுவடு-களில் (Engram) பதியப்படுகின்றது. இந் நினைவாற்றல் நிலைகள் பின்வருமாறு தொழிற்படுகின்றன.




7449CC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகையில் ஓரிரு நொடிகள் மட்டும் நீடிக்கும் புலன்களால் உணரக் கூடிய தூண்டல்களின் தாக்கத்தை (ஒலிகள், மனம், காட்சிகள்) நினைவில் வைத்திருத்தல் புலனறிவு நினைவாகும். மிக அண்மையில் நடந்த நிகழ்ச்சிகள் சிறிது காலம் (20 நொடிகளில் இருந்து 60 நொடிவரை) நினைவில் வைத்திருத்தலை குறுகியகால ஞாபகம் என்பர். இதை தற்கால நினைவு எனவும் கூறுவர். பெருக்கல் வாய்ப்பாடு. திருக்குறள், கவிதை, சில முக்கிய நிகழ்வுகள். மறக்காமலிருத்தல் நீண்டகால நினைவு அல்லது நிலையான நினைவு என்பர்.

## நினைவு கூர்தல் பரிசோதனைகள்

ஜேர்மனிய நாட்டின் எப்பிங்ஹாஸ் (Ebbinghous) என்ற உளவியலறிஞர் நினைவுச் சோதனைகள் தொடர்பான பரிசோதனைகளை மேற்கொண்டார். இவரது நினைவு பரிசோதனை முறைகளாக;

i. கற்றல் முறை (Learning method)

ii. சேமிப்பு முறை (Saving method)

iii. நினைவைத்தூண்டும் முறை (Prompting method)

என்பன முக்கியமானவை. கற்க வேண்டிய பொருளைத் தவறின்றி ஓரிரு தடவை ஒப்புவிக்கத் தேவைப்படும் காலம் மற்றும் பயிற்சியின் எண்ணிக்கை ஆகியவற்றை கற்றல்முறை ஆராய்கிறது. சேமிப்பு முறை ஒரு பொருளை முதன் முறையாகக் கற்றலுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பின் அதனை மீண்டும் கற்றலுக்குமிடையே உள்ள காலம், பயிற்சிகளின் எண்ணிக்கை என்பவற்றின் வேறுபாடுகளை ஆராய்கின்றது. நினைவுத்தூண்டல் முறையில் ஒருவன் கற்போன் கற்பவற்றை மீட்டல், அதில் தவறுகள் சரி செய்யப்படும் வரை தூண்டல் என்பதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அதிக நூல்கள் வாசிக்கின்றேன். பத்திரிகைகளைப் படிக்கின்றேன். ஆனால் அவை எல்லாம் எனது மூளையில் முறைமைப்படுத்தி இருப்பதாகத் தெரியவில்லை"
- ஓரிரு ஆசிரியரின் கூற்று –

i. தகவல்கள் - செய்திகளை முறைமைப்படுத்தல் தொடர்பான ஞாபக நிலைகளை விளக்குக?

ii. மனதில் இருத்தி வைத்தலைப் பாதிக்கும் காரணிகள் எவை?

iii. சிறந்த நினைவின் இயல்புகளை வரிசைப்படுத்துக?

iv. நினைவு வீச்சு என்றால் என்ன?

## விடைகள்:-

01) மனிதர் படிக்கும் செய்திகள், தகவல்கள் எல்லாம் வடிகட்டப்பட்டு உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டியவை குறுகிய கால நினைவுப் பகுதிக்கு அனுப்பப்படுகின்றன. இவைகளின் தேவைகளுக்கு ஏற்ப மறக்கப்படுவது அல்லது தகவல்கள் மேலும் முறைமைப்படுத்தப்பட்டு பல்வேறு வகையாகப்பிரிக்கப்பட்டு, குறியீடுகளாக சுருக்கப்பட்டு நீண்டகால நினைவுக்கு மாற்றப்படுகின்றன. தேவையான போது பயன்படுத்தப்படுகின்றன. பல வகைக்காரணங்களால் சில – பல மறக்கப்படுகின்றன. இவ் வகையில் செய்திகளை, தகவல்களை முறைமைப்படுத்தப்படுத்தும் படிமம் (Information Processing model) பின்வருமாறு நினைவு கூறுதல் தொடர்பாக ஒழுங்கமைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகளை முறைப்படுத்தும் படிமம்
# (Information Processing Model)




02) மனதில் இருத்தி வைத்தலைப் பாதிக்கும் காரணி-களாக; ஞாபகப் பொருளின் பயன்பாடு, தேவை, அதில் ஈடுபாடும், ஆர்வம் காட்டப்படுதல், எந்தச் சூழ் நிலையில் அது மனதில் இருத்தி வைக்கப்படுகின்றது. திரும்பத்திரும்ப அதன் தேவை – ஞாபகப்படுத்தல், உள்ளார்ந்த உளவியல் காரணிகள், நினைவில் பாதுகாக்கப்பட்ட கால அளவு, மற்றும் களைப்பு, மனப்பான்மை, கவனக்குவிப்பு, பதட்டம், ஊக்கம் என்பவையும் இதற்கான காரணிகளாகவுள்ளன.

03) **சிறந்த நினைவின் இயல்புகள்-** (Signs of Good memory) விரைவு (Rapidity) – பழைய அனுபவங்-களை விரைவாக நினைவு கூறுதல், துல்லியம் (Accuracy) – மிகச் சரியாக நினைவு கூரல், காலஅளவு (Length of Time), எளிதாக வெளிக்-கொணர்தல் (Promptness), பொருத்தமான பயன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தக்கூடிய தன்மை (Servicesblenss) என்பன-வாகவுள்ளன.

04) **நினைவு வீச்சு (Memory Span)**

ஒரு முறை பார்த்தபின், பார்த்த பொருட்களில் எத்தனை பொருட்களைத் தவறின்றி ஒருவரால் நினைவுபடுத்திக் கூற முடியுமே அப் பொருட்களின் எண்ணிக்கை அவரது நினைவு வீச்சாகும். இதை அளக்க நினைவு உருளை (Memor drum) என்ற இப்படத்திலுள்ள கருவி பயன்படுகின்றது.

05) 


நினைவு வீச்சு உடனடி நினைவைப் (Immediate memory) பரிசோதிக்கின்றது "674905238" என்ற தொகுதியை ஒருவரது எதிரில் ஒருமுறைகாட்டிய பின்பு, அத்தொகுதியை நினைவிலிருந்து எழுதச் சொன்னால், அவரது நினைவு வீச்சு எவ்வளவு என்பது தெளிவாகும். இவ் எண் தொகுதியில் முதல் ஆறு அல்லது ஏழு எண்களையே முதிர்ச்சியடைந்த ஒருவரால் சாதாரணமாக நினைவில் வைத்திருக்க முடியும்.

## மறதி (Forget)

மனிதர்கள் பல்வேறு காரணங்களால் பல விடயங்களை மறந்து விடுகின்றனர். நம் நினைவில் தங்காதவற்றை மறதி என்கிறோம். விடயங்களை மீட்டுரை – வெளிக் கொண்டுவர ஏற்படும் தடைகள் மறதிக்கான காரணங்களாகின்றன. இது தொடர்பான ஆய்வுகள் கோட்பாடுகளாக உள்ளன. குறித்த விடயம் தொடர்பான ஈடுபாடு ஆர்வம் ஊக்கல் இன்மை காரணமாகவே மறதி ஏற்படுகின்றது. ஞாபகத்திலுள்ளவை சிதைதல் குறுக்கீடுகளாலும் மறதி ஏற்படுகின்றது. இவ்வகையில் பின்வருமாறு மறத்தல் கோட்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) பயன்படுத்தப்படாததன் விளைவாக நினைவுகள் அழிதல் கோட்பாடு (Decay through disuse)

2) குறுக்கீட்டுக் கோட்பாடு (Theory of Interference) இது முன்னோக்குத்தடை (Proactive Inhibition) என ஒரு வகையாக; அதாவது ஏற்கனவே கற்ற ஒரு பாடம் தற்போது புதிதாகக் கற்ற பாடத்தை நினைவு கூரத்-தடையாயிருத்தல், மற்றையது பின்னோக்கத்தடை (Retro – active Inhibition) - இது முந்திய நிகழ்வு பிந்திய நிகழ்வை மறக்கச் செய்கின்றது.

3) படிம மாற்றக் கோட்பாடு (Trace charge theory)
பார்ட்லர் (Bartlett) என்ற பிரயோக உளவியலறிஞர் 10பேரைத் தெரிவு செய்து முதலாம் அவரிடம் ஒரு பூனையின் படம் காட்டப்பட்டது. சில நொடிகள் பார்த்தும் தன் நினைவில் இருந்ததை அவர் வரைந்தார். இரண்டாமவர் அதை சில நொடிகள் பார்த்த பின்பு தன் நினைவில் இருந்ததை வரைந்தார். இவ்வாறே கடைசி நபர் வரைந்த படம் முதலில் காண்பித்த படத்துடன் ஒப்பிட்டபோது சிறிதும் தொடர்பில்லாத ஒரு ஆந்தையின் உருவமாக அது இருந்தது. இதே கோட்பாடு அடிப்படையிலேயே வதந்திகள் பரப்பப்படு-கின்றன. இங்கு படிமம் மாற்றப்படுகிறது. இதுவும் மறத்தலுக்குக் காரணமாகிறது.

4) வெளிக் கொணர்தலில் ஏற்படும் தடங்கல்
(Retrieval failure Thery)
அச்சம், பதட்டம், தன்னுணர்வு மிகுந்து காணப்படல், மேடைப்பயம், பரீட்சைப்பயம் என்பவற்றால் குறித்த விடயங்கள் உடனடியாக நினைவுக்கு வராதமையே இங்கு குறிப்பிடப்படுகிறது. குறித்த சந்தர்ப்பத்திற்குப் பிறகு அது ஞாபகத்து வரும்.

5) ஊக்கத்தின் அடிப்படையில் அமைந்த மறதி –
(Motivated forgetitng)
நாம் எவற்றைமறக்க விரும்புகிறோமோ அவற்றையே மறக்கின்றோம். என சிக்மன் பிராய்ட் கூறுகிறார். மனதை வருத்திய நிகழ்வுகள் ஆழ்மனதுள் அமுக்கப்-படுகிறது (Repression) இதையே ஊக்கத்தினடிப்-படையில் அமைந்த மறதி இயம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மறத்தல் வளைகோடு:-




கற்பவை மறக்கப்படுகின்றன. பெருநர் – பயனற்ற கற்றலாலும் இது விரைவாக நிகழ்கின்றது.

## மறதியிலிருந்து நினைவை மேம்படுத்தும் நுட்பங்கள்

01. தேவையான முக்கிய விடயங்களை, கற்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் ஊக்கத்துடன் கற்றல் - ஈடுபடல்
02. பொருளை உணர்ந்து கற்றல் - மகிழ்ச்சியாக – செயற்பாடுடன் கற்றல்
03. ஓரளவு சில விடயங்களை மனப்பாடம் செய்தல்
04. இடைவெளி விட்டு சிறுகச் சிறுகக் கற்றல், திரும்பத் திரும்பக் கற்றல்
05. ஏனையவற்றுடன் தொடர்புபடுத்திக் கற்றல், சம்பவங்களை நினைவில் இருத்தல்.
06. பல் புலன் வழி கற்றல் (Multi Sesory learning)
07. இடை இடையே கணிப்பிட்டு – மதிப்பிட்டுக்கற்றல்
08. முன் - பின் நோக்கிய அகத்தடைகள் ஏற்படாது கற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வகுப்பறை முகாமைத்துவமும் உளவியலும்

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை அந்நாட்டின் நிகழ்காலப் பாடசாலை வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறையானது நித்தம் பல்வேறு மாணவர் நடத்தைகள் நிறைந்து காணப்படும். ஓர் இடமாகும். இவற்றில் உளவியல் சார்ந்த காரணிகள் முக்கியம் பெறுகின்றன. ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில் உயிரோட்டமாகப் பங்கேற்கும் மாணவர்களும் உளர். சிலர் அத்தருணத்தில் பொருத்தமற்ற ஒலிகளை எழுப்பி சண்டையிட்டு, கற்றல் செயன்முறைகளுக்குத் தடைகளை ஏற்படுத்துவர்.

இத்தடைகளுக்குப் பின்னணி உளவியற் காரணிகள் பல காணப்படலாம். பதட்டம் அசாதாரண காரணமாக வெளிப்படும் வன்முறைகள், கட்புலசெவிப்புல இழப்புக்கள், உடல்உள குறைபாடுகள் விசேட தேவையுடைய நிலைகள், வறுமை, ஆசிரியர் தொடர்பான காரணிகளும் வகுப்பறை முகாமைத்துவத்தில் வினைத்திறன்களைக் குறைக்கின்றன.

வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். இது பாட ஏற்பாடுகளைத் திட்டமிடல், நடைமுறைகளையும் வளங்களையும் ஒழுங்கு செய்தல். மாணவர் தனியார் வேறுபாடுகளுக்கேற்ப வழிகாட்டுதல், ஏற்படும் பிரச்சினைகளை எதிர்பார்த்து தயாராக இருத்தல் என்பவை வகுப்பறை முகாமைத்து-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தின் முக்கிய அம்சங்களாக உள்ளதாக கல்வி உளவியலறிஞர் லெம்லேட் (1988) தெரிவிக்கின்றார்.

## வகுப்பறை முகாமைத்துவ அம்சங்கள்

1. நேரம் தவறாமை - இது பல கல்விப் பிரச்சினைகளை அகற்றும்.
2. நன்கு திட்டமிடப்பட்ட ஆயத்த நிலை (பாடக்குறிப்பு, தர உள்ளீடுகள், உபகரப்பிரயோகங்கள்)
3. மாணவர்களை விரைவாக கற்றல் வேலைகளில் ஈடுபடுதல், பொருத்தமான கற்பித்தல் - கற்றல் முறையியல், உடனடியாக மாணவர் கவனத்தை ஈர்த்தல்.
4. குரலைச்சிறப்பாகப் பயன்படுத்துதல், வகுப்பறைச் செயற்பாடுகளில் உன்னிப்பாக கவனம், விடயங்களைச் சரியாகப்பகுத்தாராய்தல்.
5. நெருக்கடி நிலைகள் பிரச்சினைகள் ஏற்படுகின்ற போது தெளிவாக, உண்மையாக, யதார்த்தமாகச் செயற்படல்.
6. மாணவர்களை ஒப்பீடு செய்தலைத் தவிர்த்தல். வகுப்பறைக் கவின்நிலையை கவர்ச்சிகரமாக வைத்திருத்தல்,
7. ஆசிரியர் மாணவர் உறவை உயிர்ப்பாக வைத்திருத்தல்.

வகுப்பறைக்குப் பொருந்தாத நடத்தைகளை இயன்ற அளவு குறைப்பதற்கு மானுட உளவியல் வழிகாட்டல் முறைமைகளைப் பெருமளவு கையாள்வதுடன் சில வகையான தண்டனைகளாலும் பொருத்தமற்ற நடத்தைகளை நீக்கலாம். மேலும் தண்டனைகள் வழங்கும் போது ஆசிரியர் மிக மிக அவதானமாக செயற்பட வேண்டும். தண்டனையால் மாணவர்களின் எதிர்கால ஆளுமை பாதிக்காத வகையில் ஆவன செய்ய வேண்டும்.

## மாணவர்களது நடத்தைகளுடன் கருமமாற்றம்

இன்றைய பாடசாலை வகுப்பறைகள் மிகப்பல பிரச்சினைகளையும் சிக்கல்களையும் கொண்டதாகவுள்ளது. ஆசிரியர்கள் மிகப் பல சவால்களை எதிர்நோக்குகின்றார்கள். அதுவும் இடைநிலை வகுப்புக் கட்டிளமைப்பருவ மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தாக்கங்களை விளைவிக்கின்றனர். இவர்களை இவர்கள் வழியில் சென்று மிக நுட்பமாக ஆசிரியர்கள் தமது நடத்தைகளை ஒழுங்கமைக்க வேண்டியுள்ளது. அத்துடன் பற்றுணர்வு, விசுவாசம், விழுமியம், நன்மனப்பாங்கு, கல்வியில் நாட்டம் போன்றவற்றை சாதகமாக்கி வகுப்பறைக் கவின் நிலையை கற்றலுக்கு சாதகமாக்கலாம். காற்றோட்டமான வகுப்பறை, இடவசதி, தளபாடங்கள் என்பவற்றுடன் மானிடக்கவி நிலை, கல்விசார் கவின்நிலை, சக பாடிகள் கவின் நிலை முகாமைத்துவக் கவின் நிலை என்பவற்றிலும் ஆசிரியர் கவனம் செலுத்த வேண்டும். இன்று உலகளாவிய ரீதியில் மானுடக்கவின் நிலையே வகுப்பறை முகாமைத்துவத்தின் முக்கியம் பெறுகின்றது.

மானுடக்கவின் நிலையானது மனிதத் தொடர்புகளை வகுப்பறை அங்கத்தவர்களுக்கிடையில் முன்னேற்றவும் அவர்களுடைய மனப்பாங்குகள் பாடசாலை சமூகத்தை நோக்கி வளர்க்கவும் உதவும். இதற்குப் பொருத்தமான நவீன கற்றல் தொழில்நுட்ப சாதனைகளும் உதவுகின்றன. மாணவரிடையே கற்றல் இடமாற்றம் அல்லது பயிற்சி இடமாற்றம் (Transfer of Training of Learing) ஏற்படவும் இது வழிகாட்டுகிறது.

## கற்றல் இடமாற்றம்



மாணவன் ஒருவன் வகுப்பறைக் கற்றல் சந்தர்ப்பம் ஒன்றில் பெற்றுக் கொண்ட அறிவை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதே கற்றல் இடமாற்றமாகும். ஏவிஸ் என்ற உளவியலாளர் கற்றல் இடமாற்றம் என்பது ஏதாவது ஒருசெயலைச் செய்வதற்குப் பெறும் பயிற்சி அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

பெறும் அனுபவம், அதன் பின் எதிர்ப்படும் ஒரு செயலில் செலுத்தும் செல்வாக்கு எனக் குறிப்பிடுகின்றார்.

இது ஒரு செயலின் மூலம் பெற்ற அனுபவம் அல்லது பயிற்சி மற்றொரு செயலை இலகுவாக்கின்றது. இதனை நேர் கற்றல் இடமாற்றம் என்பர். ஒரு செயலின் மூலம் பெற்ற அனுபவம் மற்றச் செயலைக் கடினமாக்கினால் அது எதிர் கற்றல் இடமாற்றம் எனப்படும். எவ்வித தாக்கத்தையும் ஏற்படாதவிடத்து சூனிய கற்றல் இடமாற்றம் எனப்படுகின்றது. இக் கற்றல் இடமாற்றம் பற்றிய கொள்கைகள் பின்வருமாறும்.

## i. உளப்பயிற்சிக் கட்டுப்பாட்டுக் கொள்கை (Theory of mentaldiscipling)

இக் கொள்கை இரு அணுகுமுறைகளைக் கொண்டது. ஒன்று பிளேட்டோவினுடையது மற்றையது மண்டல அறிவுக் கொள்கை. பிளேட்டோ உயர் செம்மொழிகளையும் படங்களையும் கற்பதன் மூலம் கற்றல் இடமாற்றம் உள்ளதையும், ஒழுக்க விழுமியங்களையும் பெறமுடியும் என்கின்றார். இக் கருத்தியலின் விருத்தியாக மண்டல அறிவுக் கொள்கையினர் மூளை பல்வேறு கூறுகளை உடையது. பல்வேறு பாடங்களைக் கற்பதன் மூலம் அப்பாடங்களுடன் தொடர்புடைய உளக் கூறுகள் விருத்தியடைந்து கற்றல் இடமாற்றம் நடைபெறும் எனத் தெரிவிக்கின்றனர். மனனம் செய்தல், விஞ்ஞான பாடத்துறைகளில் கூர்ந்து அவதானித்தல் என்பவை மூலம் இது வலியுறுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இக் கொள்கையை எதிர்த்து மூளையைப் பல கூறுகளாகப் பிரிக்க முடியாது என தொகுகைக் கொள்கையினர் எடுத்துக்கூறி; இது நரம்புத் தொகுதியின் கூட்டாகவே தொழிற்படுகிறது எனவும் தமது வாதத்தை முன்வைத்தனர். தூண்டல் - துலங்கல் தொடர்புறுத்தல் மூலமே கற்றல் இடமாற்றம் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இவர்கள் வலியுறுத்தினர்.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ii. ஒத்த மூலக் கொள்கை

## (Theory of Identical elements)

தோண்டைக் பல்வேறு பரிசோதனைகள் அடிப்படையில் இக்கொள்கையை வெளியிட்டார். ஏதேனும் செயல் மூலம் பெற்ற அனுபவம் or பயிற்சி மற்றொரு செயலுக்கு உதவியாக இருப்பதும்; செயல்களின் விடயப்பரப்பு, அமைப்பு முறைகளின் மூலகங்கள் கற்கும் சூழலுடன் இடமாற்றம் பெறுகின்றமையை இக் கொள்கை எடுத்தியம்புகிறது. உதாரணமாக கூட்டல் திறனுடைய ஒருவருக்கு பெருக்கலில் திறன் விருத்தியாகும். பியானோ வாசித்தல்; தட்டச்சு, கணனி உபயோகத் திறன் விருத்தியாகும்.

## iii. பொதுமையாக்கல் கொள்கை

## (Theory of generalisation)

ஒருவருடைய கற்றல் அனுபவம் பொதுமையாக்கப்படுவதால் கற்றல் இடமாற்றம் நடைபெறுவதை இக் கொள்கை எடுத்தியம்புகின்றது. பொதுமையாக்கலை மேற்கொள்ள தொடர்புகளை வலுவுடையதாக்க வேண்டும். உதாரணமாக நீருக்குள் குறிப்பிட்ட இலக்கு நோக்கி ஈட்டி எறிய; ஒரு குழுவுக்கு ஒளி முறிவு கற்பித்த விட்டும் மறுகுழுவை கற்பிக்காமலும் செயற்படுத்தலில் ஈடுபட்டால் ஒளி முறிவு கற்பித்த குழு வெற்றியடைந்ததை உளவியல் ஆய்வுகள் இயம்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iv. கற்பதற்குக் கற்றல் பற்றிய கொள்கைப்பிரயோகம் (Leaning to learn)

ஹாலோ (Halo) என்ற உளவியலறிஞர் இக்கொள்கையை முன்வைத்தார். பல்வேறு கற்றல் நிலைமைகளுக்கும், கற்றல் இடமாற்றங்களுக்கும் இக்கொள்கை பொருந்து-கின்றது. ஒரு பிரச்சினையைத் தீர்க்க எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்று அதன் மூலம் பிரச்சினை தீர்த்தலை இக் கொள்கை இயம்பி நிற்கின்றது. மேலும் குறிப்பிட்ட சில பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கற்றுக் கொண்ட ஒருவன் அதனுடன் தொடர்புடைய வேறு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அத்தோடு பிரச்சினைகளை கற்பதற்குக் கற்றல் ஒரு முக்கியமான தேர்ச்சியாகக் கொள்ளப்படுகின்றது. மாணவர்கள் தம் வாழ்நாள் முழுதும் எதிர்கொள்ளும் சவால்களுக்கு உறுதுணையாகக் கொள்ளக்-கூடிய தேர்ச்சிகளை இது வழங்குகின்றது. இவ் அடிப்படையில் கற்பதற்குக் கற்பதற்கான தேர்ச்சிகளை பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வழங்குதல் தொடர்பான உளவியல் ஆற்றல்களைப் பெற வேண்டும். இதற்கு ஆசிரியர்களும் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்பதுடன். எவ்வாறு கற்க வேண்டும் என்ற வினாவுக்கு சரியான வழிகளைக்காட்ட வேண்டும். விரைவாகத் தீர்க்கக் கூடிய திறனையும் அவன் பெறுவான். இது கற்றல் இடமாற்றமாகப் பரிணமிக்கின்றது.

நவீன உளவியலாளர் கருத்தின்படி கற்கும் போது உள்ளம் எவ்வாறு தொழிற்படுகின்றது. என்பதை அறி-வதிலேயே கற்புதற்குக் கற்றல் தங்கியுள்ளது. என்று அது ஏழாவது அறிவு அல்லது புலன் என்றும் கூறுகின்றனர். கற்பதற்குக் கற்றலை ஒரு தேர்ச்சியாக யுனெஸ்கோ நிறுவனம் உலகம் முழுவதும் பரப்பி வருகின்றது. புதிய நூற்றாண்டுக்கான கற்றல் என்ற அறிக்கையில் கற்றலின் நான்கு தூண்களுக்குமான அடிப்படைகளைக் கற்பதற்குக் கற்றல் மூலமே யுனெஸ்கே எடுத்தியம்புகின்றது. அதன் எண்ணக்கரு படம் பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பதற்குக் கற்றலுக்கான பிரவேசம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வாழ்க்கை முழுவதும் கற்பதற்குக் கற்றுக் கொள்ளல் செயன்முறை வழிகாட்டி நிற்கின்றது. ஆனாலும் எமது நாடுகளில் பலருடைய கல்வி இடை நடுவில் நின்றுவிடுகின்றது. இது "எவ்வாறு கற்க வேண்டும்" என்பதைக் கற்பிக்காது விட்டமையின் விளைவே ஆகும். இதில் கற்பவர்கள் சுய ஆசிரியர்களாக (Self Teachers) நிலைமாற்றம் பெறல் இத் தேர்ச்சியின் மையமாகும். இதனூடாக பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுகின்றன.

- வாழ வேண்டுமானால் கற்க வேண்டும். வாழ்நாள் முழுவதற்குமான செயலாகக் கற்றல் விளங்க வேண்டும்.

- கற்றுக் கொண்ட விடயங்கள் கற்றல் இடமாற்றத்திற்கு வழி செய்ய; செயன்முறை ரீதியான, சமூக ரீதியான கல்வி அவசியமாகின்றது.

- மனித விருத்தியுடனும் மேம்பாடுகளுடன் ஒன்றிணைந்ததாகக் கற்றல் இருப்பதுடன் அனுபவமும் அனுபவித்தலாகவும் இருக்க வேண்டும்.

- வாழ்க்கைச் செயற்பாடுகளுடன் கற்றலை ஒருங்கிணைத்தல் கற்றலை இணைத்தல். இத் தொகுப்பு உடன் துலங்கல் (Impulsivity), உள்வாங்கித் தெரித்தல் (Reflectivity) என்ற கற்றலின் வெளியீடுகளுக்குக் காரணமாகும்.

மாணவர்கள் எதனைக் கற்கின்றார்கள் என்பது மட்டுள்ள அவர்கள் எவ்வாறு கற்கின்றார்கள் என்பதிலும் கற்பதற்குக் கற்றல் தேர்ச்சி செல்வாக்குச் செலுத்துகின்றது. மேலும் இது தகவல்களைக் கண்டறியும் திறனாகவும், குறித்த விடயம் பற்றிய தகவல்களை எங்கு எவ்வாறு பெறலாம் என்பதையும், ஆய்வு முடிவுகள் உருவாவதற்கு உதவிய வழிமுறைகளையும், ஒருவன் தனது கற்றல் செயற்பாடுகளைச் சுயமாகத்தானே நிருவகித்துக் கொள்ளவும் கற்பதற்குக் கற்கும் வழிமுறை உதவி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் ஒருவர் நவீன நெருக்கடியான சிக்கலான உலகில் எதனைக் கற்றாலும், அக்கல்வி காலத்திற்கு ஏற்ப புதுப்பிக்கப்படலும் மீளாய்வு செய்யப்படலும் அவசியம். இதற்கு ஒருவர் தான் அவதானிப்பதைப் பேணுவதில் விழிப்புணர்வும், நுண்ணறிவும் திறமையும் உடையவராய் இருப்பதோடு; முக்கியமாக ஒரு குறித்த கல்வி நிலையில் அவசியமாகின்ற விபரங்களை விடாமுயற்ச்சியுடன் கவனிப்பதற்கு விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும். வாழ்க்கை முழுவதற்குமான கற்கக் கற்றல் தேர்ச்சியின் அடிப்படைத்தத்துவம் இதுவேயாகும். இதன் வெளிப்பாடுகள் நவீன கல்விச் செல்நெறிகளுக்கும் புரட்சிகரமான தகவல் வெளிப்பாடுகளுக்கும் கற்றல் இடமாற்றங்களுக்கும் இட்டுச் செல்லும்.

1. கற்றல் இடமாற்றம் தொடர்பான பேக்லியன் குறிக்கோள் or இலட்சியக் கோட்பாட்டை (Bagley's Theory of Ideals) எடுத்துரைக்க?
2. கற்றல் இடமாற்றத்தைப் பாதிக்கும் காரணிகளைத் தருக?
3. கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆசிரியரின் பங்களிப்பத்தருக?

**விடைகள் !**

1. கற்கக் கையாளும் முறைகளைக் குறிக்கோள் அல்லது இலட்சிய நிலைக்கு உயர்த்தினால், நாம் எதைக் கற்கத் தொடங்கினாலும் அவை நமக்குப்பயன்படும் என பேக்லியன் தெரிவிக்கின்றார். குறிக்கோள் அல்லது இலட்சியங்கள் கற்றலில் கற்போனின் முழு ஈடுபாட்டிற்கு வழிவகுக்கின்றன.

2. I. கற்பவர் தொடர்பான காரணிகள் - வயது, ஆளுமை, நுண்ணறி, முந்தைய கற்றல் அனுபவங்களும் ஆற்றல்களும், கற்றலின் போது வெளிப்படுத்தும் மனப்பாங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II. கற்கும் சூழ்நிலை தொடர்பான காரணிகள்: கற்கும் பொருட்கள் - வளங்களின் தன்மை, கற்பவற்றைக் கற்பிக்கும் முறைகள், வகுப்பறைக்கவின் நிலைகள், முந்தைய அனுபவங்களைத் தொடர்புபடுத்தும் திறன், மாற்றியமைத்துச் சோதித்துப் பார்க்கக் கிடைக்கும் வாய்ப்புக்கள்.

3. 1. கற்றல் இடமாற்றத்திற்கு உதவக்கூடிய முறையில் ஆசிரியர் பாடத்தைத் திட்டமிட்டு, இலக்குகளை வரையறை செய்தல்.

2. பாடத்தை செயற்பாட்டு வடிவில் அனுபவங்களை வழங்கிக் கற்பித்தல் எளிமையாக்கிக் கற்பித்தல்.

3. மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்தை அவர்களுக்குத் தெரிவித்து ஊக்குவிப்புக்களை வழங்குதல்.

4. செயற்திட்டமுறை பரிசோதனைமுறை, கள ஆய்வுமுறை, செய்துகாட்டல் முறை எனப் பல வகைப்பட்ட முறையில் கவர்ச்சியகக் கற்பித்தல்.

5. நவீன கற்றல் - கற்பித்தல் உபகரணங்களைப் பயன்படுத்தி பாடங்களைக் கற்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலக்காட்சியும் சாயலும்
## (Image Perception)

பிரயோக உளவியல் புலக்காட்சிக்கும் சாயலுக்கும் முக்கிய இடம் உண்டு. மனிதனின் புலன் உறுப்புக்கள் "அறிவின் வாயில்கள்" எனப்படுகின்றன. தனது புலன் அங்கங்களால் (கண், காது, மூக்கு, நாக்கு, தோல்) வெளி உலகுடன் தொடர்பு கொண்டு வேண்டிய இடைவினைகளை மனிதன் புரிகின்றான். புலன் உணர்வு (Sensation) என்பது புலன் ஒன்று தூண்டப்படுவதன் உடனடி விளைவாகும். வெளி உலகப் பொருட்களில் இருந்து எழும் பொருத்தமான சில சக்திகளால் (Energy waves) ஒரு புலன் தாக்கப்படுவதால் எழும் விளைவே புலன் உணர்வாகும்.

புலக்காட்சி என்பது புலன் உறுப்புக்கள் வாயிலாகப் பெற்ற புலன் உணர்விற்கு நாம் ஏற்கனவே பெற்றிருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பொருள் ஊட்டி தூண்டல் பொருட்களின் தன்மையை அறிதலையே புலக்காட்சி என்கின்றோம்.

புலக்காட்சி = புலன் உணர்தல் + பொருள் அறிதல்

ஏதோ பொருள் வெப்பத்தில் பொசுங்குவதால் ஏற்படும் மனத்தைப் பெறுதல் புலன் உணர்வாகின்றது. அம்மனம் வெப்பத்தால் பொலித்தீன் பொசுங்குவதால் ஏற்பட்டது என்று உணர்வது புலக்காட்சி. ஏற்கனவே பொலித்தீன் பொசுங்கியதால் எழும் மணத்தை நாம் உணர்ந்து நம் மனதில் தேக்கி வைத்திருந்தால் தான் இப்போது நுகரும் மணத்திற்குச் சரியான பொருள் உரைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலக் காட்சியின் அடிப்படை புலனுணர்வுகளே ஆகும். எனினும் இவ்விரண்டையும் பிரித்துத் தனித்தனியே அனுபவிக்க முடியாது. புலனுணர்வுகள் மனதுள் தோன்றும் போதே அப்புலனுணர்வுகள் பொருள் கொண்டு புலக்காட்சிகளாகி-விடுகின்றன. இப்புலக்காட்சியை பாதிக்கும் காரணிகளாக மனநிலை, கவர்ச்சி, மனப்பான்மை, அப்போதைய தேவை, கருத்தேற்றம் என்பனவுள்ளன. இப்புலக் காட்சியின் நான்கு கூறுகளை முற்பி என்ற உளவியலறிஞர் குறிப்பிடுகின்றார். அவை

i. புலன் உணர்வுகளால் பெறப்பட்ட புலன் உணர்வு (Sensation)

ii. முந்தைய அனுபவங்கள் (Past experience)

iii. புலன் உணர்வுகளது மாறுபட்ட தன்மைகளை உணரும் திறனுள்ள நரம்பு மண்டலம்.

iv. புலன் உணர்வைப் பெறும் மனநிலை (Mentalset) அதாவது ஒரு பொருளை எவ்வாறு நாம் காண விரும்புகின்றோமோ. அப்பொருளை அவ்வாறே நமக்குக் காட்சியளிக்கின்றது.

கொஸ்டோல் உளவியலில் புலக்காட்சி தொடர்பான விதிகள் இயம்பப்படுகின்றன அவை பின்வருமாறு;

## I. *முழுமைக்காட்சி விதி*

கெஸ்டால்ட் கொள்கையின்படி, புலன்காட்சி முழுமை-யையும் ஒருமைப்பாடும் பெற்று விளங்குகிறது. பல-வகைப்பட்ட புலனுணர்ச்சிகளைப் பெற்று, பிறகு இவற்றை ஒட்டிச் சேர்த்து ஒரு பொருளை நம் உள்ளம் காண்பதில்லை. புலன்காட்சியில் 'முறைப்படுத்துதல்' (Organisation) நிகழ்கிறது. அதேபோன்று கீழ்க்கண்ட படத்தைப் பார்த்து.



II. வட்டம், முக்கோணங்கள், சதுரங்கள், செவ்வகம், வட்டப்பகுதி ஆகியவைகளின் தொகுப்பு என்று கூறுவதில்லை, மாறாக, மனித முகம் என்றுதான் கூறுகிறோம். எனவே புலன்காட்சியில், முழுமைக்காட்சியாக உணரப்பட்டு பொருள் அறியப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. *அண்மை விதி*

புலன் காட்சியானது, பொருட்களிடையே உள்ள நெருக்கம் அல்லது அண்மையினை ஒட்டி அமைகிறது. உதாரணமாக, பலர் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாக ஓரிடத்தில் அமர்ந்திருப்பார்களேயானால், அவர்கள் அனைவரையும் ஒரு குழுவாகக் காண்கிறோம். இதே போன்று கீழ்க்கண்ட 12 செங்குத்துக் கோடுகளை நமது கண் மூன்று மூன்று கோடுகளைக்கொண்ட நான்கு



தொகுதிகளாகக் காண்கிறது. இதற்குக் காரணம், அருகருகேயுள்ள கோடுகள் ஒரே தொகுதியாகவும், இடைவெளி அதிகமிருப்பின் வேறு தொகுதியைச் சார்ந்ததாகவும் அறியப்படுவதற்குக் காரணம், நமது புலன்காட்சி அண்மை விதியில் முறைப்படுத்தப்படுவதே ஆகும்.

## III. *ஒப்புடமை விதி*

காணப்படும் பொருட்களின் உருவ ஒற்றுமைக்கு ஏற்ப அவைகளை வகைப்படுத்தி (குழுவாக எண்ணி) அறிகிறோம். உதாரணமாக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் படத்தில் உருவங்களின் ஒற்றுமைக்கேற்ற முக்கோணங்கள், வட்டங்கள், சதுரங்கள் என்று வகைப்படுத்தி அறியும் போது நமது புலன்காட்சி கிடைமட்டமாக (horizontal) அமைகிறது. இதே ஒப்புடைமை விதி செயல்பட்டு நமது புலன்காட்சியை, இரண்டாவது படத்தில் செங்குத்தாக அமைக்கிறது.

## IV. *நிறைவு விதி*

குறுகிய இடைவெளிகளைப் பூர்த்தி செய்து, காணும் பொருட்களை முழுமைப்படுத்திக் காணும் தன்மையை நிறைவு விதி என்கிறோம் உதாரணமாக கீழ்கண்ட படத்தில், 3 கோடுகளுக்கிடையே இடைவெளிகள் இருந்த போதிலும், நமது மனம் அதைப் பூர்த்தி செய்து முக்கோணமாகவே உணர்கிறது. இதே காரணத்தால் தான், அச்சுப்பிழைத்-திருந்தும் போது விடுபட்ட எழுத்-துக்கள் நம் கவனத்தில் இருந்து தப்பி விடுகின்றன. அதே போன்று நாம் எழுதியவற்றைத் திருப்பிப் பார்க்கும் போது தவறுகள் பளிச்சென்று தெரிவதில்லை. நமது மனம் தவறுகளையும் திருத்திப் படித்துவிடுகிறது. ஆனால் பிறரிடம் கொடுத்து படிக்கச் சொன்னால், அவர்கள் தவறை உடனே கண்டு பிடித்துவிடுவார்கள்.



## V. *தொடர்ச்சி விதி*

தொடர்ச்சி என்பது ஒரு கோடானது ஒரு குறிப்பிட்ட திசையில் ஆரம்பித்து அதே திசையில் தொடரும் வகையில் நாம் காண்பதனைக் குறிக்கும்.

......................

மேலே காணப்படும் படத்தில் உள்ள புள்ளிகள் நேர்கோடாகவே தென்படும். இதன் காரணமாகவே சினிமா படத்தில் உள்ள காட்சிகள் தனித்தனியாகப் படம் பிடிக்கப்பட்டு, வினாடிக்கு 15 சட்டங்கள் (Frames) என்ற வீதத்தில் ஓட்டப்படும் போது, நமக்கு அவை தனித்தனியாக தெரிவதற்குப் பதில் தொடர்ச்சியான காட்சியாகத் தோன்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *புலன்காட்சியில் ஏற்படும் தவறுகளான திரிபுக்காட்சி*

நமது புலன் காட்சியானது எப்போதுமே சரியாக அமைந்து விடுவதில்லை. புலன்காட்சியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒரு குறிப்பிட்ட தூண்டல் நமது புலன் உறுப்பினைத் தூண்டி, சரியான விளக்கத்தைப் பெறும் போது அதாவது தூண்டலைச் சரியாகப் புரிந்து கொள்ளும் போது, புலன்காட்சி ஏற்படுகிறது என்கிறோம். மாறாக ஒரு தூண்டல் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமேயானால் அதனைத் திரிபுக்காட்சி (Illusion) என்கிறோம். உதாரணமாக இரவு நேரத்தில் கிணற்றடியில் கிடக்கும் கயிற்றை மிதித்துவிட்டு அச்சம் காரணமாக, பாம்பு என்று எண்ணினால், அது திரிபுக் காட்சியாகும். ஒரு பொருளை, வேறு ஒரு பொருளாக உணர்வதை திரிபுக்காட்சி என்கிறோம். இவ்வாறு திரிபுக்காட்சி அல்லது தவறான புலன்காட்சி ஏற்படுவதற்குக் காரணம், பொருள்களின் உருவ அமைப்பு. சூழ்நிலை, மனிதனின் உடல் மனநிலைகள் ஆகும். இவைகளின் காரணமாகவே தொலைந்த உலோக நாணயத்தைத் தேடுபவனுக்கு கீழே கிடக்கும் பளபளப்பான தகடுகூட காசு போன்று தோன்றும். இரயிலில் செல்லும்போது, மரங்கள் ஓடுவது போன்றும், நமது இரயில் நின்றிருக்கும்போது அதன் அருகேயுள்ள ஒரு இரயில் நகரத் தொடங்கியதும், நமது இரயில் நகர்வது போன்றும், உண்மைக்கு மாறாக தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.

திரிபுக்காட்சிகள் பலவகைப்படும். எடுத்துக்காட்டாக

(அ) இயக்கத் திரிபுக்காட்சிகள் (உண்மையில் நிலைத்திருக்கும் ஓர் ஒளித்தூண்டல் தானே நகர்வது போன்று தோன்றுவது)

(ஆ) பார்வைக் கோணத் திரிபுக்காட்சிகள் (இரு இணைகோடுகள் தொலைவில் ஒன்று சேர்வது போன்று தோன்றுவது)

(இ) மாற்றுத் தோற்றங்கள் (Reversible perspective figures)

(ஈ) முல்லர் - லைர், ஜோல்கனர் போன்றோரின் பெயர்களிலான பார்வைத் திரிபுக் காட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வைத் திரிபுக்காட்சிகளில் சில கிழே கொடுக்கப்பட்டுள்ளன.



(1)



(2)




(3)




(4)




(5)




(6)

1, 2, 3, 4 - AB, CD – ஆகிய நேர்கோடுகளில் எது நீளமதிகம்? 5 – A,B – எது பெரியது? 6AB, CD ஒரே நேர்கோட்டுப் பகுதிகளா? (கண்களால் மட்டும் பார்த்து முடிவெடுக்கவும்)

***சாயலும், புலன்காட்சியும்* (Image and Percept)**

புலன் உணர்ச்சிகளுக்குப் பொருள் அமைத்தலால் ஏற்படும் அறிவு புலன்காட்சியறிவாகும். ஆனால், அப்பொருள் நம்மெதிரே இல்லாமலே அதைப்பற்றி எண்ணுதல் அதன் சாயல் நம் மனதில் தங்கியிருப்பதனால் இயலுகிறது. புலன்காட்சியை முதலில் தோற்றுவித்த ஒரு பொருள் இன்றியே அப்பொருள் பற்றி உணர்தலைச் 'சாயல்' அல்லது 'மனபிம்பம்' *Image) என்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதாரணம் தாஜ்மஹால் முன் நின்றிருக்கும் போது, அதன் உருவமும் பின்னணியும், நம் மனதில் புலக்காட்சியாகத் தோன்றுகிறது. நாம் வீடு திரும்பிய பின் அதை மீண்டும் நினைத்துப் பார்க்கும் போது மனதில் பதிவு செய்யப்பட்டிருக்கும் அதன் சாயமலை மீட்டறிகிறோம் (recall)

சாயலுக்கும் புலன் காட்சிக்கும் இடையேயான வேறுபாடுகள்.

| புலன்காட்சி | சாயல் |
|---|---|
| 1. புலன் உணர்ச்சியால் எழும் புலன்காட்சி புறவயப்பட்டவை வெளிப்பொருட்கள் புலன்களைத் தூண்டுவதால் ஏற்படுபவை. | 1. சாயல்கள் அகவயப்பட்டவை (Subjective) அவை முழுமையாக மனத்தினின்றும் எழுபவை. |
| 2. புலன்காட்சி பின்னணியுடன் தோன்றுபவை, மேசையிலுள்ள புத்தகத்தைப் பார்க்கும் போது புத்தகம், மேசை, மேசைமீதுள்ள மற்ற பொருட்களும் நமக்குப் புலப்படும். புத்தகம் முன்னணியிலும் மற்றவை பின்னணியாகவும் தோன்றும் | 2. சாயலானது பின்னணியுடன் தோன்றாமல், தனிப்பட்ட துண்டாகவே தோன்றும் உதாரணமாக, புத்தகத்தின் சாயல் காட்சி நம்முள் எழும்போது, புத்தகம் மட்டுமே தோன்றும். |
| 3. புலன்காட்சி செறிவு மிக்கவை எனவே புலன்காடசியை ஆராய்ந்தால் புதுப்புது விவரங்களை அறியலாம். | 3. சாயல்கள் செறிவு குறைந்தவை மங்கலானவை. அவற்றிலிருந்து நுட்பமான விவரங்களை அறிதல் இயலாது. |
| 4. புலன் காட்சி, தூண்டல் இருக்கும் வரை ஏற்படும்; பின்பு சாயலாக மனதில் பதிவு செய்யப் படுகிறது. | 4. புலன்காட்சித் தோன்றி மறைந்த பின் மனத்தில் இருத்தி வைக்கப் படுவது புலன்காட்சியின் சாயலே. இவை நிலைத்தவை அல்ல; சிறுக சிறுக மாறி மறையக் கூடியவை. |

***சாயல்களின் வகைகள்:***

I. காட்சிச்சாயல்கள் (Visual Images) - வகுப்பாசிரியரின் முகத்தை நினைவு கூர்தல்

II. கேள்விச்சாயல்கள் (Auditory Images) - பின்னணிப் பாடகர்களின் குரலை நினைவில் வைத்திருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. சுவைச் சாயல்கள் (Gustatory Image) - முன்பு விருந்தில் உண்ட உணவின் சுவையை தற்போது நினைத்து அனுபவித்தல்.

IV. மணச்சாயல்கள் (Olifactory Images) - மல்லிகைப் பூவின் மலரை நினைவில் வைத்திருத்தல்

V. தொடுகைச் சாயல்கள் (Tactile Image) - கால் பந்தை உதைக்கும் உணர்ச்சி

ஒவ்வொரு மாணவர்களிடமும் எல்லாவகைச்சாயல் இருப்பினும் ஒருவகைச்சாயல் மிகுந்திருக்கும். சிலர் கண் உள்ளம் (Eye – minded) சிலர் செவியுள்ளம் (Ear – minded) கொண்டவர்களாகவும் இருப்பர். ஆசிரியர்கள் இதனை உணர்ந்து மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது பல புலன்களைப் பயன்படுத்திக் கற்பிக்கும் போது வினைத்திறன் அதிகரிக்கின்றது.

இன்றைய எமது நாட்டுப் பாடத்திட்டம் "பாடங்களுக்-காகவே" என்ற குறுகிய அணுகுமுறையில் ஆசிரியர்களினால் மாணவர்களுக்கு முன்வைக்கப்படுகின்றன. அதாவது பாடங்களில் சித்தியடைவதே கல்வியின் இலக்கு என்ற சுருக்கப்பட்டுள்ளது. விருத்தியடைந்த முறையில் புலக்-காட்சியையும் - சாயலையும் கொள்வதற்குப் பதிலாக வரையறுக்கப்பட்ட, வார்ப்பு நிலைப்பட்ட புலக்காட்சி – சாயல்களுக்கு மட்டுமே மாணவர்கள் பழக்கப்படுகின்றனர். சுயவிமர்சனம், தன்னம்பிக்கை, என்பவற்றிற்குப்பதிலாக பிறர் மீது குறைகாண்பது, பிறரைத் தூற்றுவது, பிறர்மீது சார்ந்து வாழ்வது, சுலபமாக வாழ முற்படுதல் என்பன முனைப்-படைகின்றன.

ஏற்கனவே இருக்கும் அறிவைப் பயன்படுத்திப் புதிய அறிவைத் திரட்டும் முயற்சிகள் வறிதாகிக் காணப்-படுகின்றன. பழைய அறிவையும் புதிய அறிவையும் சீர்தூக்கிப் பார்த்தலும் போதுமான அளவில் இடம் பெறவில்லை. பாடசாலைகளிலும் உயர் கல்வி அமைப்-புக்களிலும் புதிய அறிவைப் பிரயோகித்தல் முழு வீச்சில் இடம் பெறவில்லை. புதுமையாக்குதல், சுவையூட்டுதல், செயன்முறைப்படுத்தல் அறைகூவற்படுத்தல், அறநெறிப்படுத்-தல், சமூகப்பயனுடையாக்கல் முதலிய கற்பித்தலே இன்றைய தேவையாகவுள்ளது. இதைப் பெற அனைவரும் முனைய வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா ஆசிரியர்களுக்கும் அவசியமான விசேட கல்வி

தனது வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் பொருத்தமான கல்வியை வழங்கும் பொறுப்பு ஆசிரியர்களைச் சார்ந்துள்ளது. எனவே வகுப்பறையிலுள்ள விசேட தேவைகளையுடைய, ஆபத்து விழிம்பிலுள்ள மாணவர்களை இனம் கண்டு அவர்களுக்குப் பொருத்தமான கல்வியை வழங்குவதற்கான வழிகாட்டல்களையும், உதவிகளையும் செய்தல் ஆசிரியர்களின் பொறுப்பாகவுள்ளது. இதற்கு ஆசிரியர்கள் இத்துறை சார்ந்த அறிவை வளர்த்துக் கொள்ளல் அவசியமாகும். இதில் கற்றல் இடர்பாடுடையோர். மனவெழுச்சிப் பிரச்சினை. பார்வைகேட்டல் குறைபாடு, உடல் குறைபாடு போன்றவற்றில் பாதிப்படைந்துள்ள மாணவர் சார்பாக ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலையில் பயிலும் எல்லா மாணவர்களுக்கும் உரிமையான தனித்துவங்கள் உண்டு. அவ்வாறே எல்லா மாணவர்களுக்கும் தன் எதிர்கால வாழ்க்கைக்குத் தயாராவதற்கும், வளர்ச்சியுறுவதற்கும் உதவிகள் தேவைப்படுகின்றன. சில மாணவர்களுக்கு இவ் உதவிகள் கூடுதலாகத் தேவைப்படுகின்றன. இவ்வாறு கூடுதல் உதவிகள் தேவைப்படுவோர் விசேட தேவையுடையவர்களாக, ஆபத்து விழிம்பிலுள்ளோர்ராக உள்ளனர்.

மேலும் மற்றுமொரு வகையில் வகுப்பறையிலுள்ள எல்லா மாணவர்களையும் மிகச் சரியாக ஆசிரியர் இனம் காண முற்படும் போது அனைவருமே ஏதோ ஒரு வகையில் விசேட தேவையுடை நிலைமைகளைக் காட்டுகின்றமையால் இத்துறை சார்ந்த நவீன புலங்கள் விரைவாக விருத்தியாகி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I. கற்றல் இடர்பாடுகள்

உடல் - உளக் குறைபாடுகளோ வேறு கோளாறுகளோ இல்லாத போதிலும் சில பிள்ளைகள் எழுதுதல், வாசித்தல், கணிதச் செயற்பாடுகள் போன்றவற்றில் தெளிவான குறைபாடுகள் காணப்படும் நிலை கற்றல் இடர்பாடுகளாக மாணவர்களுக்கு உள்ளன. கற்றல் இடர்பாடுள்ள பிள்ளையிடம், திறமைக்கும் அடைவுக்குமிடையில் தெளிவாகத் தென்படக்கூடிய வேறுபாடுகளை காணமுடியும். மாணவர்களிடத்தே காணப்படும் கற்றல் இடர்பாடுகளைப் பின்வரும் இயல்புகளினூடாகக் கண்டு கொள்ளலாம்.

❋ உத்தேசத் திறன்களுக்கும் பிள்ளைகள் காட்டும் திறன்களுக்கும் இடையிலான வேறுபாடுகள், நினைவாற்றல் குறைபாடு.

❋ பார்வைப்பிரித்தறிகை, கேட்டல் பிரித்தறிகை, ஏதேனும் ஒன்றை வாசித்து விளங்கமுடியாமை, கணிதம் சார் பிரச்சினைகள்,

❋ கவனத்தை ஈர்த்து வைக்க முடியாமை, கவனக்கலைவு, மிகைத் தொழிற்பாட்டைக் காட்டல்,

❋ வயதுக்குப் பொருத்தமான சொற்களஞ்சியம் இன்மை, எளிமையான கருத்தைக்கூட, தெளிவாக வெளியிட முடியாமை பலவீனமான தொடர்பாடல்.

❋ புலக்காட்சிக் கோளாறுகள், இடது – வலது சம்பந்தமான பிரச்சினைகள், உருவமும் பின்னணியும் பற்றிய பிரச்சினைகள், கோல வேறுபாடு, மாற்றுருவ ஞாபகப் பிரச்சினைகள், அறிவுக்கூர்மை குறைவு,

இவ்வாறாக புலக்காட்சிக் கோளாறுகள், கல்வி – உடல் - அறிவு – நடத்தைக் கோளாறுகள் காரணமாக கற்றல் இடர்பாடுகளை மாணவர்கள் எதிர்நோக்குகிறார்கள் உதாரணமாக:

குமார் தரம் 6இல் கல்வி பயில்கிறான். அவனது பெற்றோர்கள் அவனது வகுப்பாசிரியரைச் சந்தித்து "எமது மகனுக்கு இன்னும் வாசிக்கவோ, எழுதவோ, மட்டுமன்றி எழுத்துக்களை – எண்களை சரியாக

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டிடவும் கஷ்டப்படுகின்றான். இதனால் எமக்குப் பெரும் வேதனை. முதலாம் தரத்திலிருந்தே இவனுக்கு வாசித்தல் எழுதுதல் தொடர்பாகப் பல பிரச்சினைகள் இருந்தன. தற்போது அவனுக்கு 3ம் தரத்தின் பாடப்புத்தகங்களை வாசிக்க முடியும். மேலும் அவனுக்கு தான் வாசிக்கும் விடயம் தொடர்பாக விளக்கம் ஏதும் இல்லை. ஆயினும் எழுதுவதில் அவனுக்கு வாசிப்பதை விட திறமை உண்டு. ஆனால் எழுத்துக்களை உறுப்-பமைய எழுதுவதில் இடர்படுகின்றான் உண்மையிலேயே அவனுக்கு விசேட உதவி தேவைப்படுகின்றது. தயவு செய்து எனது மகனுக்கு விரைவாக உதவுங்கள்" என்றனர்.

1. குமார் எவ்வகை விசேட தேவை உடையவன்?
2. இவனது பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம்?

குமாரது விசேட தேவை கற்றல் இடர்பாடாகும். இதைத் தீர்க்க கற்றலுடன் தொடர்புடைய பின்வரும் பணிகளை ஆற்றுவதற்கு வேண்டிய அடிப்படைத்திறன்களை குமாரிடையே விருத்தி செய்ய வேண்டிய வேண்டும்.

- செவிமடுத்தல், சிந்தித்தல்
- வாசித்தல், எழுதுதல்
- எழுத்தமைப்பு, கணிதம்

மேற்படி அடிப்படைத்திறன்களை பின்வரும் நுட்பமுறை உத்திகளினால் பொருத்தமானதாக்கலாம். குமாரின் செயற்-பாட்டு வீதத்திற்கு (rate) அமைய செற்பாடுகளில் பல தடவைகள் பயிற்சி பெற வாய்ப்புக்கள் அளித்தல், தேவைப்படும் இடங்களில் பொருத்தமான உபகரணங்கள் சொல்லட்டைகள், வானொலி, தொலைக்காட்சி போன்ற-வற்றைப் பயன்படுத்தல், சுய கற்றல், சுயமதிப்பீட்டுத் திறன்களை வளர்த்தல். ஊக்கல். சிறு வெற்றிடங்களைக்கூட உயர்வாக மதித்தல், பாராட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *தொடர்பாடற் குறைபாடுகள்*

பேச்சுத் தொடர்பாக மாணவர்கள் காட்டும் குறைபாடுகளே இங்கு தொடர்பாடற் குறைபாடுகளாகக் கொள்ளப்படுகின்றன. குரலைக்கட்டுப்படுத்த இயலாமை, அடித்தொண்டையால் கதைத்தல், மெதுவாகக் கதைத்தல், பேச்சின் போது சொற்களை விழுங்குதல், திக்கித்திக்கிப் பேசுதல், பேச்சின்போது சந்தமற்ற பேச்சு, முறையான ஒலிக்குப் பதிலாக வேறு மாதிரியாகக் கொண்டு பேசுதல் போன்ற தொடர்பாடற்திறன் இத்திறன் கற்றலுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுகின்றது. இவ்வாறான மாணவர்களுக்கு உதவும் வழிமுறைகள் பின்வருமாறு.

1. குறித்த மாணவர்களின் பேச்சுக் குறைபாடுகள் தொடர்பாகக் கவனம் செலுத்தவதை உணராத வகையில் அவர்களுக்கான பயிற்சிமுறைகளை வகுப்பிலுள்ள ஏனைய மாணவருடன் இணைத்து செயற்படுத்தல்.
2. ஆசிரியர் தெளிவாகவும், செம்மையாகவும் சொற்களைப் பயன்படுத்திப் பேசிக்காட்டுதல்.
3. மாணவர்களுக்கு இயன்றளவு பேசுதலுக்கு வாய்ப்பளித்தல், தனது பிழையைத் தானே உணர்ந்து திருத்த வழிகாட்டல்.
4. பேசுவதற்கும் அதற்கான பயிற்சிகளிற்கும் போதிய கால அவகாசத்தை வழங்குதல், பேச்சுசிகிச்சையாளரின் நிபுணத்துவ அறிவை, அது தொடர்பான நவீன வானொலி உபகரணங்களைப் பயன்படுத்தல்.

### II. மனவெழுச்சிப் பிரச்சனைகள்

கற்றல் செயன்முறையில் பங்குகொள்ளாது தாமே உருவாக்கிக் கொண்ட ஓர் உலகில் தனிமைப்பட்டு சஞ்சரிக்கும் மாணவர்களும் வகுப்பறையில் காணப்படலாம். மனவெழுச்சிப் பிரச்சினைகள், குறைபாடுகள், காரணமாகவே இவ்வாறான தன்மைகளை மாணவர்கள் வெளிக்காட்டுகின்றனர். இவர்களின் இயல்புகளாக:

1. தம்மைப்பற்றிக் கரிசனை காட்டாமை, அன்றாடப் பணிகள் பற்றி கவனம் செலுத்தாமை, பிழையான சீராக்க நடவடிக்கைகள்.
2. ஏனையோர் தொடர்பாக உரிய வகையில் துலங்கல் காட்டாமை, தனிமைப்பட்டிருக்க விரும்புதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பகற்கனவு காணல், நீண்டநேரம் ஒன்றைப்பார்த்தபடி இருத்தல், மனக்குழப்பமடைதல், அடிக்கடி துக்க இயல்புகளை வெளிக்காட்டல்.
4. களவெடுத்தல், வாழாவிருத்தல், சிறுவிடயங்களுக்கும் கலவரப்படல், தாழ்வுச்சிக்கல், அதிக அகங்காரம், முரட்டுச்சுபாவம்.
5. தனிமையில் பேசுதல், சிரித்தல், விரல் சூப்புதல், நகம் கடித்தல், படுக்கையில் சிறுநீர்கழித்தல், அடிக்கடி அழுதல், எதிர்முறைப்பாடு செய்தல், புத்தகங்கள் உடை, ஏனைய கற்றல் உபகரணங்களை ஒழுங்கின்றி வைத்திருத்தல்.

தரம் 5ல் கற்கும் வசந்தி ஏனைய மாணவர்களுடன் சேராமல் ஏகாந்த நிலையில் இருப்பதை மிகவும் விரும்பினாள். மேலும் வகுப்பறையில் நிகழும் சிறிய சம்பவங்களில் கூட அதைரியப்படுவாள். மொழிப்பிரயோகத்தின் போது கூடிய பலவீனம் காட்டினாள். வாரத்தில் ஒரு நாளாவது பாடசாலைக்கு வராது விட்டில் இருப்பாள். பாடசாலை வேலைகளில் விருப்பமின்றி காணப்பட்டாள். இவளுக்கு மனவெழுச்சிப் பிரச்சினைகளே ஏற்பட்டுள்ளன. இதை ஆசிரியர் எவ்வாறு நிவர்த்தி செய்யலாம்?

வசந்தி போன்ற மாணவர்களை ஆசிரியர் விசேடமாகக் கவனிப்பதுடன் தமக்கருகே வைத்திருத்தல் நலம், இவர்களுடன் இதமாகப் பேசி பரிவு காட்டுதல். அடிக்கடி பங்குபற்றத்தக்க வகையில் குழுச்செயற்பாடுகளில் ஈடுபடுதல், பங்கேற்று நடித்தல், பொம்மலாட்ட நிகழ்வு, விளையாட்டுக்களில் ஆர்வத்தை ஏற்படுத்தல், வெற்றியனுபவம் கிடைக்குமாறு செய்தல், அவர்களுக்கு வகுப்பறைக் கவின் நிலையை உருவாக்கல், இவ்வாறான மாணவர்களிடத்தே உகப்பான நடத்தைகளைத் தூண்டுவதற்கான உத்திகளைக் கையாள்வதுடன் ஆலோசனை வழிகாட்டல் சேவை மூலம் புதிய பிரவேசங்களை இவ்வாறான மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்படுத்தல்.

இவ்வாறான மாணவர்கள் தொடர்ச்சியாக மனவெழுச்சிப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களில் நெறிபிறழ்ந்த நடத்தைகளையும் மேற்கொள்ளலாம். நெறிபிறழ்வு என்பது நடத்தைப்பற்றிய பிரச்சினையாகும். சட்டதிட்டங்கள் ஒழுங்குகளுக்கு எதிராக செயற்படுதலே நெறிபிறழ்வின் முக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாகவுள்ளது. ஒழுங்கினை நிலைநாட்ட பெற்றோர்கள் - ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படும் உறுதியற்ற, பிழையான கொள்கைகள், நடைமுறைகள், துர்நடத்தையான குடும்பப்பின்னணி. தனிமைப்பட்ட நிலையில் சில விருப்பு வெறுப்புக்கள், பாலியல் நாட்டம், குற்றங்கள் புரியும் சமூகச் சூழலால் மேலும் இவ்வாறன மாணவர்கள் பாதிப்படைகின்றனர்.

ஒரு மாணவனிடம் நெறிபிறழ்வுக்கு ஒரு காரணம் - வெளிப்படையாகத் தெரிந்தாலும் பல காரணிகள் ஒன்றிணைந்த தொழிற்படுவதினாலேயே பெரும்பாலும் நெறிபிறழ்வுக்கு ஆளாகின்றான். மேலும் சமுதாய, குடும்பக்காரணிகள், பொருளாதாரம், சுற்றாடல், உளவியற் காரணிகள், நெறிபிறழ்வுக்கான சந்தர்ப்பங்களாகவுள்ளன. இன்றைய பாடசாலைச் சமூகச் சூழலில் இப்பிரச்சினை மிகவும் பெரும் பிரச்சினையாக எழுந்துள்ளது.

ராணி சிறுவயதிலே தாயை இழ்ந்தவர். தந்தை இரண்டாவது முறை திருமணம் செய்து கொண்டார். அவள் சிறியதாயினால் கொடுமைப்படுத்தப்பட்டாள். தந்தையின் பரிவு கிடைக்கவில்லை அவளது தந்தை துர்நடத்தையால் தண்டனை பெற்றவர். பின்னர் சவுதி அரேபியாவுக்கு வேலைதேடிச் சென்றுவிட்டார். தாய் இன்னொருவருடன் பாலியல் தொடர்பு வைத்திருப்பதை ராணி அறிந்திருந்தாள். வகுப்பறையில் பொருட்களை திருடி ராஜாவிற்கு விற்று வந்தாள். அவளுக்கும் ராஜாவுக்கும் தகாத தொடர்பு ஏற்பட்டது. இக்கதை ஊர்முழுவதும் பரவியது. ஆசிரியர்கள் எச்சரிக்கை செய்தும் தனது குணப்பண்புகளை அவள் மாற்றவில்லை. அதனால் பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டாள். பதினைந்து வயதில் துர்அதிஷ்டவசமாக குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்தாள். தற்போது அவளும் அவள் பிள்ளையும் அரசினால் பராமரிக்கப்படும் இல்லத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

1. ராணிக்கு ஏற்பட்ட மனவெழுச்சித்தாக்கங்கள் எவை?
2. அவளது நெறிபிறழ்வுக்கான காரணங்கள் எவையாகவுள்ளது?
3. ஆசிரியர்களும் - பெற்றோர்களும் ராணியின் நெறிபிறழ்வுக்கு எவ்வளவுதூரம் பொறுப்புடையவர்கள்?
4. இவ்வாறான பிள்ளைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க பாடசாலை வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குக?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. பார்வைக் குறைபாடுகள்

முற்றாகப் பார்வையற்ற மாணவர்கள் அல்லது பார்வைக் குறைபாடுடைய மாணவர்கள் வகுப்பறையில் காணப்படலாம். முற்றாகப் பார்வையற்ற மாணவர்களை இலகுவாக இனங்காணலாம். ஆனால் பார்வைகுறைபாடுடைய மாணவர்களை இனங்காண்பது சற்றுக் கடினமானதாகும். இவர்கள் வாசிக்கும் போது சொற்களையோ, எழுத்தையே விட்டுவிட்டு வாசிப்பர். எழுதுதல் - வாசித்தலில் ஆர்வங்-காட்டாமை, புத்தகங்களை கண்களுக்கு அருகே கொண்டு சென்றுபார்த்தல், தலையைத் தூரவும் கிட்டவும் அசைத்துப் பொருளையோ, புத்தகத்தையோ பார்த்தல். அடிக்கடி கரும்பலகைக்கு அருகில் சென்று பார்த்தல் போன்ற நடவடிக்கைகளில் மாணவர் ஈடுபடுவர். மேலும் கண்காது தலை என்பவற்றில் அடிக்கடி வலிநோஎன முறையிடல், கண்களிலிருந்து அடிக்கடி நீர், பீழைவடிதல், கண்கள் அடிக்கடி சிவந்திருத்தல், கண்கள் அடிக்கடி துடித்தல், மற்றும் அருகிலுள்ள மாணவர்களின் புத்தகங்களை அடிக்கடி எட்டிப்பார்த்தல் போன்ற நடத்தைகளில் இருந்து ஆசிரியர் பார்வைக்குறைபாடுடைய மாணவர்களை இனம் காணலாம்.

மேற்குறிப்பிட்டவாறு பலதரப்பட்ட பார்வைக்குறைபாடு-டைய மாணவர்கள் வகுப்பறையில் இருக்கும் போது அவர்களுக்கான தீர்வுகளையும், சரியான ஆலோசனை-களையும் ஆசிரியர் வழங்க வேண்டியுள்ளது. மற்றும் வகுப்பறை பாடவேளைகளை ஆசிரியர் திட்டமிடும் போது கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக மெலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

1. பார்வைத் தீட்சன்யம் **(Visual Acuity)** – மாணவரின் பார்வைத்திறன் பொருளொன்று தெளிவாகத் தெரியும் தூரம்.

2. பார்வைப்புலம் **(Visual Field)** – பார்வைக்கு உட்படும் பரப்பு

3. பார்வைச் செயற்பாடு **(Visial Functioning)** - இருக்கும் பார்வையைப் பயன்படுத்தும் முறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இதனூடாகப் பார்வைக் குறைபாடுடைய பிள்ளைகளுக்கு நன்கு தெரியத்தக்க வகையில் ஒளிபொருந்திய ஓர் இடத்தில் வைத்தல். குறைபாடுடைய மாணவர்களை முன்வரிசையில் அமர்த்தல். கரும்பலகையில் தெளிவாக பெரிய எழுத்தில் எழுதுதல். தெளிவாக வாசித்தபடி எழுதுதல், எழுதுவதற்கும் வாசிப்பதற்கும் பிள்ளைக்கு போதிய அவகாசம் வழங்குதல் என்பற்றுடன்:

1. நீண்ட வாய் மொழிமூல ஒப்படைகளை ஒலிப்பதிவு செய்துகொள்ள வாய்ப்பளித்தல். வகுப்பறைக்குள் அதிகளவான இரைச்சல் ஏற்படுதலைக் கட்டுப்படுத்தல்.
2. மாணவர்கள் பயன்படுத்தும் மூக்குக் கண்ணாடி (வில்லை)கள் பொருத்தமானவையா எனக் கண்டறிதல். தேவையானவர்களுக்கு வைத்தியரை அணுகும் வழி-காட்டலை மேற்கொள்ளல்.
3. கற்றல் துணைச்சாதனங்களை தெளிவாக, கடுமையான, பிரகாசமான நிறங்களில் தயாரித்தல்.
4. வகுப்பறைச் சாதனங்களைப் பிள்ளை எளிதாகச் சென்று எடுக்கத்தக்கவாறு ஒழுங்குபடுத்தி வைத்தல்.
5. மாணவருக்கும் ஆசிரியருக்கும் இடையேயான இடைவெளி இயன்றளவுக்கு குறைவானதாக அமையும் வகையில் ஆசிரியருக்கு அருகே மாணவரை அமர்த்தல், உதவியளித்தல், மாணவரை எப்போதும் பெயரிட்டு அழைத்தல்.

பலவகையான பார்வைக்குறைபாடுகளினால் அல்லலுறும் மாணவருக்குக் கல்வி பெறும் உரிமைகளும், வசதிகளும் இன்று ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாணவனின் வீடுட்டிற்கு அண்மித்த பாடசாலையில் சேர்ந்து கற்பதற்குச் சந்தர்ப்பம் உண்டு. முற்றாகப் பார்வையற்ற மாணவர்களுக்கான "பிரேயில்" (BRAILLE) முறையிலும், குறிப்பிட்ட அளவில் பார்வைத்திறனுடைய மாணவருக்கு விசேட உத்திகளைப்-பயன்படுத்தி அச்சிட்ட எழுத்துக்களைப் படங்களைப் பயன்-படுத்தி கல்வி கற்பிக்கும் வசதிகளும் உண்டு. இதற்கென விசேடமான பயிற்சி பெற்ற ஆசிரியரின் உதவிகளையும் பெற்றுக் கொடுக்கலாம். இவ்வாறாக விசேட ஆலோசனை அளிக்கும் ஆசிரியர்களின் சில சேவைகள் பின்வருமாறு:

- ஸ்பரிச (தொடும்) திறனை வளர்த்தல், (பிரயோக முறையில் கற்பதற்காக)
- ஒலி – குரல்களைப் பிரித்தறியவும் திறன் வளர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ இயக்கத்திறன்களை வளர்த்தல், எழுதுவதற்கும், முன்னேற்றுவதற்கும் பிரேயில் முறையை முன்னேற்றுதல்.
❋ பாட இணைப்பு வேளைகளில் ஈடுபாட்டை அதிகரித்தல்.
❋ பார்வைக் குறைபாடுடைய மாணவர் தொடர்பாக விசேட உதவிகளையும் நவீன இலத்திரனியல் உபகரணங்களையும் அறிமுகப்படுத்தல். மூக்குக் கண்ணாடி பெற்றுக் கொடுத்தல்.

## IV. *செவிப்புலக் குறைபாடுகள் :*

ஒருவர் கற்கும் ஊடகங்கள் பல உள்ளபோதும் அவற்றிடையே மிக முக்கியமானது "செவியுறுதல்" எனப்படும் கேட்டல் ஆகும். பிறந்ததிலிருந்து இறக்கும் வரை கேட்பதன் மூலம் மனிதன் கற்றுக் கொள்கிறான். வகுப்பறையில் செவிப்புலக்குறைபாடுடைய அல்லது முற்றாகக் காது கேட்காத மாணவர்கள் பயிலக் கூடும்.

> ராதா தரம் 3 படிக்கும் அழகான மாணவி. ஆசிரியையான நான் சொல்லும் எந்த விடயத்தையும் அவள் அவதானத்திற்கு எடுத்துக்கொள்வதில்லை என்பதை காலப்போக்கில் தெரிந்து கொண்டேன். கற்பதில் அவள் அக்கறை காட்டாதது எனக்கு கவலையாக இருந்தது. நான் கூறுபவை கேட்கவில்லையா அல்லது அது அவளுக்கு விளங்கவில்லையா என்பது எனது பிரச்சினையானது. இதற்குரிய காரணத்தை அறிய ஆவல் கொண்டேன். ஒரு கடிகாரத்தைக் காட்டி இதன் டிக் டிக் சத்தம் கேட்கிறதா எனக் கேட்டேன். அவள் இல்லை என்றாள். வகுப்பு வேலைகளில் துலங்கல் காட்டாத பின்னடைந்துள்ள காரணத்தை இனங்கண்டேன்.

ராதாவுக்கு கேட்டல் குறைபாடு உள்ளது இவ்வாறான மாணவர்களை எவ்வாறு இனங்காணலாம்? எவ்வாறு உதவலாம்?

1. வாய்மொழிமூல அறிவுறுத்தல்களை விளங்கிக் கொள்ள முடியாமை, பேசுபவரின் வாயையும் உதடுகளையும் பார்த்தபடி இருத்தல்.
2. சத்தம், ஒலி வரும் திசையில் காதைத்திருப்பி வைத்துச் செவிமடுக்கச் செய்தல் சொற்களஞ்சியம் வரையறுக்கப்பட்டிருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. காதின் அருகே கையை வைத்து செவிக்க முனைதல், காதுவலி, நோவு குறித்து முறைப்பாடு செய்தல், உரத்துப் பேசுதல், தாழ்ந்த குரலில் பேசுதல் ஒரே பாணியில் கதைத்தல்.
4. பின்புறத்தே இருந்து எழுப்பப்படும் ஒலிகளுக்கு குறைவான துலங்கல்களைக் காட்டல்.
5. வாய்மொழிமூலம் அறிவுறுத்தல்கள் தொடர்பாக குறை-வாகக் கவனஞ் செலுத்துதல்.

இவ்வாறாக கேட்டல் குறைபாடுடைய மாணவர்களை இனங்காணலாம். மேலும் பேச்சாற்றல், காதும் முழுமையாகக் கேட்காதவர்களை "ஊமைகள்" எனப் புறந்தள்ளும் மனப்பங்கு இன்னும் எமது சமூகங்களிலிருந்து நீங்கவில்லை. இவர்களுக்குத் தேவையான ஆற்றல்களை வழங்க இன்று மிக நவீன வசதிகள், சைகை மொழிப்பாவனை என்பன உண்டு. இங்கு சைகைக் கிளைகள், அபிநயங்கள் போன்றவற்றை ஒழுங்குமுறையாகப் பயன்படுத்துவதாகும். இம்மொழியினை மதிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் எமது பிரதேசங்களில் மேலதிகமாக பல செய்முறைகள் செயற்படுத்த வேண்டியுள்ளது. மற்றும் பாடசாலைகளில் செவிப்புலக் குறைபாடுடைய மாணவர்களுக்கு பின்வருமாறு ஆசிரியர்கள் உதவலாம்.

வகுப்பறையில் தேவையற்ற இரைச்சல்கள் ஏற்படுவதைத் தவிர்த்தல், கட்டுப்படுத்தல், ஆசிரியருக்கும் மாணவருக்கு-மிடையேயான தூரத்தை குறைத்தல், ஆசிரியரின் முகத்தை மாணவர் தெளிவாகப் பார்க்கக்கூடிய ஓர் இடத்தில் மாணவரை அமர்த்தல், வாய்மொழி அறிவுறுத்தல்கள் வழங்குகையில் முழுமையான வாக்கியங்களை ஆசிரியர் பயன்படுத்தல்.

மேலும் கற்றற் செயற்பாடுகளின் போது பல உறுப்பு – பலபரிமாண கற்றல் அணுகுமுறைகளைப் பிரயோகித்தல் கட்புல ஊடகங்களை மிகையாகப் பயன்படுத்தல் குறிப்புக்கள் - தகவல்களை ஒழுங்காக எழுதிக் கொள்வதற்தாக வகுப்பறை நேரத்திற்கு அப்பால் மேலதிக கால அவகாசங்களை வழங்குதல், மாணவர்கள் கேட்டல் துணைச்சாதனமொன்றினை பயன்படுத்துவதாக இருப்பின் அதன் பொருத்தப்பாடு பற்றிக் கவனஞ் செலுத்தல் கேட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைச்சாதனங்கள் - நவீன உபகரணங்களை மேலதிகமாக மாணவர் பயன்படுத்த உதவுதல் - வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

V. ***உடற் குறைபாடுகள் :***

உடல் அங்கங்களில் இயற்கையான குறைபாடுகள் கை, கால், விரல்கள் முழுமையாகவோ, சிலவோ செயற்படாமை, யுத்த சூழ்நிலைகளினால் அங்கவீனமான மாணவர்கள் இன்று எமது வகுப்பறைகளில் காணப்படு-கின்றனர். இவர்களால் எழுதுதல், வெட்டுதல், பற்றிப்பிடித்தல், நுணுக்கமான செயற்பாடுகள் நடத்தல், ஓடுதல், பாய்தல் போன்ற செயற்பாடுகளை ஆற்ற முடியாமலிருக்கும். இவர்களுக்கு கற்றலில் விசேடமாக உதவுதலும், உடல் ரீதியான – சுற்றாடல் அடிப்படையிலான அசௌகரியங்களை இழிவளவாக்க ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு அவசியமாகத் தேவைப்படுகின்றது.

இவர்களை மனதால் உற்சாகமூட்டி, ஏனையவர்களின் கேலிகளுக்கு ஆளாகாமல் தடுத்து, ஏனைய வகுப்பறை மாணவர்களின் கணிப்புக்கும் - மதிப்புக்கும் உட்படுத்தி, அவர்களின் உதவியைச் சினேகிதபூர்வமாக ஏற்படுத்தல். மாடிக்கட்டடங்கள், படிகள், சமதரையற்ற நிலம், சேற்றுடன் கூடிய பாதைகள் இவ்வாறான தடைகளிலிருந்து பாதுகாத்தல், உடற்குறைபாடுகளைத் தீர்க்கும் சிகிச்சையாளரின் (Physio – therapist) உதவியைத் தொடர்ச்சியாகப் பெற்று அபிவிருத்தியடைய உதவுதல். உபகரணங்களைப் பெற தொண்டர் நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுத்தல்.

மேலும் காக்காய் வலிப்பு, வலிப்பு போன்ற நீண்டகால நோய்களாலும் வகுப்பறையிலுள்ள மாணவர்கள் அவதியுற நேரிடுகின்றது. இவர்களையும் ஆசிரியர் விசேடமாகக் கவனிக்க வேண்டியுள்ளது. இவர்களது நோய்கள் தொடர்பான தகவல்களை பெற்றோருடன் தொடர்பு கொண்டு, பெற்று பாடசாலை வேளைகளில் மருந்து உண்ண வேண்டியிருப்பின் அதற்கான உதவிகளைச் செய்தல். மாணவர்கள் எப்போதும் கவலையின்றி மகிழ்ச்சியாக இருக்க உதவுதல். குறித்த மாணவரை ஒரு நோயாளி என அறிமுகப்படுத்துவதைத் தவிர்த்தலுடன் அவர்பாடசாலைக்கு வராத நாட்களில் வீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றல் வேலைகளைச் செய்து முடிக்க வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்ற வகுப்பறை சேவைகளை ஆசிரியர் செய்ய வேண்டும்.

பொதுசன நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

## VI. கூட்டுக் குறைபாடுகள்:

விசேட கல்வித் தேவையடைய மாணவர்களிடம் சில சமயம் பல்வேறு குறைபாடுகள் வெளிப்படலாம். ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுகளைக் கொண்ட மாணவர்கள் கூட்டுக் குறைபாடுகளைக் கொண்டவர்கள் என்பர். சிலவேளைகளில் கண்பார்வைக் குறைபாடுடைய மாணவர்களிடம் கேட்டற் குறைபாடும் செவிப்புலக் குறைபாடும் இருக்கலாம். இதனால் ஆசியரின் கற்பித்தல் பணி மிகக் கடினமாக மாறிவிடும் இவ்வாறான மாணவர்களைச் சரியாக இனங்கண்டு அவர்களுக்கான விசேட உதவிகளை வழங்குவதுடன் அவர்களை மேலதிகமாகவும் ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியுள்ளது. இங்கு ஆசிரியர் தனது வாண்மையை மேலும் உயர்த்த வேண்டும். விசேட கல்வித்துறை தொடர்பான நிபுணத்துவ அறிவையும் அனுபவத்தையும் பயிற்சியையும் பெற்றிருப்பதுடன் கல்வி வழிகாட்டல் - ஆலோசனைச் சேவை தொடர்பான பிரயோக ஆற்றலையும் வளர்க்க வேண்டும். எல்லா ஆசிரியர்களும் விசேட கல்வித் துறை தொடர்பான ஆற்றல்களை மேலும் விருத்தியாக்க வேண்டும். ஏனெனில் இன்றைய நவீன கல்வி உளவியல் விஞ்ஞானிகள் வகுப்பறையிலுள்ள அனைத்து மாணவர்களுமே விசேட தேவையுள்ளவர்களாக, தனித்துவமான இயல்புகள், விருப்பங்கள் உள்ளவர்களாக இருப்பதை இயம்பியுள்ளனர்.

### மீத்திறன்களும் சிறப்புத் திறன்களும்

வகுப்பறை ஆசிரியர் சந்திக்கும் விசேட திறமைகளையுடைய மாணவர்கள் மீத்திறனுடையவர்கள் எனப்படுகின்றனர். இம் மாணவர்களின் மீத்திறன்கள் ஒரே மாதிரியாக இருக்காது. சிறப்பான நினைவாற்றல், சிறப்பான ஆக்கத்திறன்கள், பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கும் ஆற்றல், மிகையான புத்தாக்கத்திறன், வளமான சொற்களஞ்சியம், பாடங்களில் உயர் அடைவுமட்டம், உயர் பகுத்தறிவுத் திறன். உயரிய கற்றற் செயற்பாடுகளைத் துரிதமாக நிறைவேற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசாதாரண உறுத்துணர்வு. வயதை மிஞ்சிய முதிர்ச்சி போன்ற பல் திறன்களை இவர்களாய் இயம்புவர்.

இவ்வாறான இயல்புகளைக் கொண்ட மாணவர்கள் வகுப்பறை வேலைகளை விரைவில் நிறைவு செய்து ஏனைய மாணவர்களைக் குழப்பலாம். தமது திறமைகளை மழுங்கடிக்கலாம். இதைத்தவிர்த்து அவர்களது ஆற்றல்களை மேலும் வளர்க்க ஆசிரியர் விசேட உதவிகளை ஆற்ற வேண்டியுள்ளது. இவற்றில் ஆக்கபூர்வமாக எழுத்து வேலை-களில் ஈடுபடுதல், குறித்த மாணவர்களின் தனித்திறமை-களை விருத்தி செய்ய சந்தர்ப்பங்களை வழங்குதல், ஏனைய மாணவர்களுக்கு, தன் திறமைகளை வெளியிட வாய்ப்பளித்தல், ஆராய்வு பூர்வமான செயற்பாடுகளிலும் இவர்களை ஈடுபடுத்தலாம். உதாரணமாக சஞ்சிகை ஒன்றியுள்ள புதிய சொற்களைத் தேடியறிதல், புத்தாக்கங்-களை புதிய கணிதச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

# ஆற்றுப்படுத்தல் சீர்மியத்துக்கான நவீன உளவியல் பிரயோகங்கள்

சம காலத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் விரைவான சமூக – கலாச்சார – பொருளாதார அரசியல் விஞ்ஞான மாற்றங்களின் பாதகமான தாக்கங்களாலும், யுத்தம், சுனாமி அனர்த்தம் போன்ற இயற்கை அழிவுகளாலும் பாதிப்படைந்-தவர்களுக்கு உள – உடல் ரீதியாக உதவும் பரிகாரச் செயன்முறைகளாக ஆற்றுப்படுத்தலும் (Guidance), சீர்மியமும் (Counceling) உள்ளது. வாழ்க்கையில் சிறந்த பொருத்தப்பாட்டையும், மன நலத்தையும் பெற்று மன நிறைவுடன் வாழ மனிதர்களுக்கு உதவும் துறைகளாக இவை உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆற்றுப்படுத்தல்- (Guidance)

இதனை வழிகாட்டுதல், என்றும் அழைப்பர். மனித வாழ்க்கையின் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், எல்லா வளர்ச்சிப் பருவங்களிலும் சூழலுடன் பொருத்தப்பாடடைந்து இயைபாக்கம் காணவும், சுய திறன்களை விருத்தி செய்யவும், பொருத்தமான தெரிவுகளை, தீர்மானங்களை மேற்கொள்ளவும் உளவியல் அணுகுமுறை அடிப்படையில் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படும் உதவியே ஆற்றுப்படுத்தலாகப் பரிணமிக்கின்றது.

### ஆர்தர் ஜெ. ஜோன்ஸ் (A.J. Jhons)

**ஆற்றுப்படுத்தலின் நோக்கம்:** ஒருவன் தனக்குத் தேவையானவற்றை புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்யவும், பொருத்தப்பாட்டு நடத்தையினைப் பெறவும், வாழ்வின் இக்கட்டான தருணங்களில் தான் செய்ய வேண்டியவை யாவை என்பதைப் புரிந்து கொண்டு செயலாற்றவும் உதவி செய்து, சுய நெறிப்படுத்தல் (Self direction) என்னும் ஆற்றலைத் தொடர்ந்து பெற்றிடச் செய்தலாகும்.

### ஆற்றுப் படுத்தலில் முக்கியத்துவம் (Importance of Guidance)

1) கல்வியின் - வாழ்க்கையின் - தொழிலின் நோக்கம் விரிவடைந்து மனிதர்களினதும், மாணவர்களினதும் ஆளுமை விருத்திக்கு
2) மாறிவரும் சூழலுக்கேற்ற உயர் நிலைப்பட்ட பொருத்தப்பாட்டைப் பெற.
3) தனி மனித தேவைகள், கவர்ச்சிகள், நாட்டங்கள் ஆகியவற்றுடன் இணைந்து கல்வியும் - தொழிலும் செயலாற்ற.
4) உளப்பாதிப்பு, தாக்கங்கள், தடைகளை நீக்கி உள ஆற்றலை விருத்தியாக்க.
5) உயர்கல்வி, தொழிற்கல்வி, வாழ்க்கை முழுவதற்குமான வாழ்நாள் கல்வி, மனிதத்துவ பண்புகளை விருத்தியாக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6) தனிப்பட்ட பிரச்சினைகள் (Personal Problems) மன முறிவு, தாழ்வு மனப்பான்மை, விரக்தி, கவலைகளைப் போக்க.

7) முழு நிறைவான திருப்தியான நல்வாழ்வு வாழ அறிவுத் தேடல்களுக்கு அப்பால் அன்பு, அரவணைப்பு, ஆதரவு, நட்புறவு, போன்ற உணர்ச்சித் தேவைகளை நிறைவேற்ற.

8) உடல்சார்ந்த உளம்சார்ந்த, சமூகம்சார்ந்த, ஆன்மிகம் சார்ந்த நலன்களைப் பெறுதலுக்கு.

9) உளப்பாதிப்புக்கள், தாக்கங்கள், புறழ்வுகளில் இருந்து விடுதலை பெற.

10) ஆழ்ந்த மன விருப்பங்கள், வேதனைகள், உணர்ச்சிப் பிரவாகங்களைப் பகிர்ந்து சமநிலை பெற.

இவ்வகையாக ஆற்றுப்படுத்தல் தன்னைத் தானே உணர்ந்து சுய விளக்கம் பெறவும், யதார்த்த நிலைக்கேற்ப இயைபாக்கமடையவும், சுய திறன்களை வெளிக்கொண்டு வந்து அவற்றை முழுமையாக விருத்தி செய்யவும் ஆற்றுப்படுத்தல் உதவுவதாக R.H மத்தியூசன் (R.H. Mathewson) தெரிவிக்கின்றார். மனித வாழ்வை சீரமைத்துக் கொள்ள உதவி தேவைப்படும் ஒருவருக்கு அதற்கான தகமையுள்ள ஒருவரால் வழங்கப்படும் உதவியே ஆற்றுப்படுத்தல் என குரோ – குரோ (Crow and Crow) ஆகிய பிரயோக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இவ் ஆற்றுப்படுத்தலானது உடல், உளம், கல்வி, தொழில், ஆளுமை, சமூகம், திருமணம், பால் உணர்வு, ஓய்வு நேரம், குடும்பம், முதிர்பருவம், தலைமைத்துவம், பிரச்சினைகள் சார்ந்த துறைகளாகப் பரிணமித்துள்ளது. இவ் ஆற்றுப்படுத்தல் (வழிகாட்டல்) என்ற பரந்த செயலாற்றுகையின் மிக முக்கிய ஒரு கூறாக சீர்மியம் உள்ளது.

## சீர்மியம் (Councelling)

இருளில் வழி தெரியாமல் தடுமாறும் ஒருவருக்கு கையில் டோர்ச் கொடுத்து பாதையைத் தானே அறிந்து சீரான பயணம் செய்ய உதவும் செயன்முறைக்கு ஒப்பான செயலாற்றுகையாக சீர்மியம் எனப்படும் ஆலோசனை வழங்கல் செயன்முறை உள்ளது. இதனை உளவளத்துணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவும் அழைப்பர். சீர்மியம் என்பது தனியாள் ஒருவர் தனது பிரச்சினைகளை நேரிற் கலந்துரையாடி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நுட்பமாகும் என போடின் (Bordin) என்ற பிரயோக உளவியலறிஞர் தெரிவிக்கின்றார்.

Carl R. Rogers (கால் ரோஜஸ்) ஒரு மனிதருக்கு அவரைப்பற்றிய சுய விளக்கத்தை ஏற்படுத்தி அதனடிப்படையில் அவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவரே தீர்த்துக் கொள்ளுமாறு வழங்கும் உதவியே சீர்மியமாகும்.

சீர்மியம் உளவளத்துணை என்ற அடிப்படையில் சீர்மியருக்கும் (ஆலோசனை வழங்குபவர்), சீர்மியநாடி (ஆலோசனை பெறுபவர்)க்கு இடையில் ஏற்படும் புரிந்துணர்வு வளர்ச்சியினூடான மனிதத்துவ செயன்முறையாகும். அடக்கி ஒடுக்கப்படும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி ஆறுதல் பெறுவதற்கு ஒரு பாதுகாப்பான சூழலை இச்செயன்முறை உருவாக்குகின்றது. இச் செயன்முறை உளவியல் விழிப்புணர்வையும், உள்ளார்ந்த ஆற்றலையும், ஆளுமை வளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது "வாழ்க்கையில் எதிர்நோக்க வேண்டிய ஒவ்வொரு அனுபவங்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடிய ஆற்றலை ஒருவரிடத்தில் விருத்தி செய்ய உதவி வழங்கும் செயன்முறை சீர்மியமாகும் என ஆன் ஜோன்ஸ் (Ann Jones) தெரிவிக்கின்றார்.

இது தனியார் விருத்தியையும், பிரச்சினைகள் வருமுன் தவிர்க்கவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், மனவேதனை துன்பத்தாக்கங்களில் உள்ளவர்களுக்கு ஆறுதல் - பரிகாரமளிக்கும் செயன் முறையாகவுள்ளது.

"தரம் 11 இல் படிக்கும் ராகுலன் நல்ல கல்வியடைவுள்ளவனாக இதுவரை காலமும் இருந்து வந்தவன் தற்போது கல்வியடைவில் பிற்பட்டவனாகவும், சிகரெட் பிடிப்பவனாகவும் காணப்படுகின்றான். அவனது நண்பர்களிடம் இது பற்றி விசாரித்த போது அவனைக் காதலித்த 10ம் தர மாணவி கை விட்டு விட்டதாகக் கூறினர். "அவனது நண்பர்கள்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) கட்டிளமைப்பருவத்தினருக்கு சீர்மியம் (ஆலோசனை வழங்கும்) சீர்மியர் அல்லது ஆசிரியரிடம் இருக்க வேண்டிய பண்புகளைத் தருக?

2) மேற்படி ராகுலனுக்கும் சீர்மியம் வழங்கும் ஆசிரியருக்கும் இடையில் இடம்பெறும் செயல்களை வரிசைப்படுத்துக.? (நியூசம் - Newsom என்ற பிரயோக உளவியல் அறிஞரின் கருத்திற்கமைய)

3) சீர்மியம் தொடர்பான அணுகுமுறைக் கொள்கைகளைத் தந்து அவை பற்றி சிறு விளக்கம் தருக?

4) தொழில் வழிகாட்டல் என்றால் என்ன என சர்வதேச தொழில் நிறுவனம் (ILO) என்ன வரைவிலக்கணத்தைத் தருகிறது? எமது நாட்டின் இதன் தாட்பரியம் என்ன?

## விடைகள்

1. அ) ஒத்துணர்வோடு இணைந்த புரிந்து கொள்ளல் (Empathy) என்ற வகையில் சீர்மியம் நாடி வருபவரின் அக புற உலகத்துள் நுழைந்து, அவரின் வாழ்க்கை அனுபவங்களை – உணர்வுகளை ஊடுருவி தன் சுய தன் மதிப்பை இழக்காமல், சரியாக அவரது கருத்துக்களைப் புரிதல்

ஆ) உண்மையாக நடந்து கொள்ளல் (Genuineness or Authenticity) பாசங்களைத் தவிர்த்து எதார்த்தமாக நடந்து கொள்ளுதல்.

இ) நிபந்தனை இல்லாது ஏற்று மதித்தல் (Unconditional positice Regard and Acceptance) – ஆழமாகவும், உண்மையாகவும் துணை நாடி வருபவர் மீதான நம்பிக்கையின் பிரதிபலிப்பு

ஈ) துணை நாடியுடன் உடன் இருத்தல் (Attending) வாழ்வில் துன்பமான இக்கட்டான நிகழ்வுகளில் ஒருவருடன் உடன் இருத்தல் அவருக்குப் பெரும் ஆறுதலைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ) துணை நாடியின் கருத்துக்களை உன்னிப்பாகச் செவிமடுத்தல் (Active Listening).

ஊ) பிரச்சினையைச் சரியாகக் குவியப்படுத்தல் (Focusing ) பொருத்தமான வினாக்களை, ஊக்கிகளை சிலவற்றைச் சுட்டிக்காட்டல் - எதிர்கொள்ளல் (Challenging).

எ) சரியான பதில் மொழிகளை (Responding) வழங்கல்.

ஏ) சரியாக உள்ளடக்கத்தை பொழிப்புரை செய்த (Paraphrasing) லும் உணர்வுகளைப் பிரதிபலித்தலும் (Reflection of feelings)ஆகிய செயன்முறைகளை மனிதத்துவத்துடன் ஆற்றும் பண்பாளராக சீர்மியர் இருக்க வேண்டும்.

## 02. சீர்மியத்தில் இடம் பெறும் செயல்கள் (Steps involved in the counselling Process)

1) பிரச்சினைக்குரியவர்(ராகுலன்) சீர்மியரை (ஆலோசனை வழங்கும் ஆசிரியரிடம்) நாடிச் செல்லுதல். தன்னை நாடி வந்தவரிடம் சீர்மியர் மனநெருக்கம் ஏற்படுத்திக் கொள்ள (Establishing rapport) முனைதல் அப்போது உதவியளிக்கும் சூழ்நிலை தோற்று விக்கப்படுகின்றது.

2) சீர்மிய நாடி தன் உளக்கிடக்கைகளை தங்கு தடையின்றி வெளிப்படுத்த (Catharsis) ஊக்கப்படுத்தல்

3) சீர்மிய நாடியின் (Client) எதிர்மனப்பாங்குகளை உணர்ந்து பரிவுடன் ஏற்று அவற்றின் குறைபாடுகளை உணரச் செய்தல் (Diagnosis)

4) சீர்மிய நாடி பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய வழியை வெளிப்படுத்துகையில் அவற்றின் சாதக – பாதகங்களைத் தெளிவுபடுத்தல் (Prognosis)

5) சீர்மிய நாடிக்கு பிரச்சினைகளுக்கான பொருத்தமான தீர்வுகளை வெளியிடல் அதில் தனக்குப் பொருத்தமானதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய சீர்மியம் - ஆலோசனை வழங்கல், தன்னம்பிக்கை வளர்த்து முடிவுகளைத் தானே சீர்மியநாடி எடுத்தல். சீர்மிய நாடிக்கு உதவும் தொடர் சீர்மியம் வழங்கி தேவையற்ற போது நிறுத்துதல்.

## 03. சீர்மியம் தொடர்பான அணுகுமுறைக் கொள்கைகள்

### I) *புலக்காட்சி நிகழ்வு அணுகுமுறைக் கொள்கை* (Perceptual phenomenological Approaches)

இவ் அணுகு முறையை கெலி (1955) பிரட்ரிக்பேர்ள் (1969), காருப் (1970), கால்ரோஜஸ் (1980) ஆகிய உளவியலாளர்கள் முன் வைத்தனர். ஒருவருக்கு ஏற்படும் பிரச்சினையைத் தீர்க்கும் ஆற்றல் அவரிடமே உண்டு அதை சீர்மியர் ஏற்படுத்தினால் பிரச்சினைகள் தீரும். இதற்கு உளவியலின் மூன்றாவது சக்தி எனப்படும் மனிதத்துவ அணுகு முறையே சிறந்தது என கால்ரோஜஸ் இக் கொள்கையினூடாகத் தெரிவிக்கின்றார்.

### ii) *இருத்தலியல் கொள்கை அணுகுமுறை* (Existential Approaches)

சாதே(1956) பிராங்கன்(1962), காமி (1967) ஆகிய உளவியலறிஞர்கள் இக் கொள்கையை இயம்பினர். இதன்படி மூன்று உலகங்களான உயிரியல் உலகம், உளவியல் உலகம், தனியாள் விளக்க உலகங்களில் வாழும் மனிதனுக்கு நிலையான தன்மை குறித்து அவனுள் எழும் எண்ணங்களே அவனுள் பிரச்சினையை ஏற்படுத்துகின்றது. இம் மூன்று உலகங்களையும் ஒன்றாக்கி அவனது வாழ்க்கையின் அர்த்தத்தை அவனுக்கு சீர்மியம் மூலம் உணர்த்தி ஒளி பெற்றுக் கொடுக்கலாம். என இக் கொள்கை இயம்புகின்றது. இதற்கு தன்னம்பிக்கையின் முக்கியத்துவத்தையும் இக்கொள்கை வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii) *உளப்பகுப்பாய்வுக் கொள்கை*

**(Psycho Analytic Approaches)**

இக்கொள்கை சிக்மன் பிராய்ட் (1910) அட்லர் (1927), கால்யுங் (1954), சுலிவான் (1953) ஆகியோரால் உருவானது. தனியாளின் பிரச்சினைகளுக்கு அவனது நனவிலி நிறைவேறாத ஆசைகளும், தேவைகளும் காரணமாகின்றன. இவற்றை அறியச் செய்ய சீர்மியம் மூலமாக உதவுவதன் மூலம் உண்மை நிலையை உணர்த்தி அவரது பிரச்-சினைகளுக்குத் தீர்வுகளைக் கிடைக்கச் செய்ய வழிகளைக் காட்டுகின்றது.

iv) *நியாயித்தல் தழுவிய அனுகுமுறைக் கொள்கை*

**(Rational Approaches)**

ஒருவர் நியாயவாதி போல அல்லது பகுத்தறிவு வாதியாகச் சிந்தித்துச் செயற்பட்டால் தன் பிரச்சினைகளைத் தானே தீர்த்து மகிழ்ச்சியாகவும் ஆக்கத்திறனுடனும் செயலாற்றலாம். எனவே பிரச்சினைக்குரியவருக்கு மேற்-குறிப்பிட்ட சிந்தனையை சீர்மியமாக வழங்கலாம் என இக்கொள்கை வாதிகளான கோக் (1964) அல்பேட்எலிஸ் (1962) ஹோலி (1970) ஆகிய பிரயோக உளவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

v) *நடத்தைத் திருத்த அனுகுமுறை*

**(Behaviour modification Approach)**

வாட்சன், ஸ்கினர், பல்லொவ் ஆகிய நடத்தைவாத உளவியலாளர்களால் இக் கொள்கை இயம்பப்படுகிறது. பிழையான நடத்தையைக் கைவிட்டு, தற்போதைய நடத்தையைத் திருத்தி விருப்பமான நல்ல வழிக்குப் பொருத்தப்பாடுடையதாக மாற்ற பரிகாரமாக சீர்மியம் வழங்குதலை இக் கொள்கை சுட்டுகிறது.

vi) *சமூக உளவியல் கொள்கை அனுகுமுறை*

**(Social Psychologyical Approaches)**

தனி மனிதனிடம் சமூகச் சூழல் செல்வாக்குச் செலுத்துகின்றது. மற்றும் சூழலை விரும்பியவாறு தன்வயமாக்கிக் கொள்ளும் தன்மை மனிதனுக்குண்டு என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் சமூகச் சூழற் காரணிகளைச் சாதகமாகப் பயன்படுத்தி சீர்மியத்தை வழங்கும் போது பல பிரச்சினைகள் தீர்மானிக்கப்படுகின்றமை இக் கொள்கை வாதிகளான கேர்ட்லுயின், ஜெரோம் பிராவ், ஸ்ரோங், A. பண்டுரா ஆகிய உளவியலாளர்கள் எடுத்தியம்புகின்றனர்.

04. ஒருவர் தனக்குப் பொருத்தமான தொழிலைத் தன் ஆர்வம், ஆற்றல், உளச் சார்ப்பு ஆகிய பண்புகளினதும், தொழிலைப் பெறக் கூடிய வாய்ப்பின் அடிப்படையிலும் தெரிவு செய்து; அதனைப் பெற்று தொழில் வாழ்க்கையில் முன்னேற வழங்கப்படும் உதவியே தொழிலுக்கு ஆற்றுப்படுத்தலாகும். என சர்வதேச தொழில் நிறுவனம் வரைவிலக்கணம் தருகின்றது.

எமது நாட்டுப் பாடசாலைகளின் இடைநிலை, உயர்வகுப்பு மாணவர்களை அவர்களின் எதிர்கால தொழில் வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது கல்வியின் நோக்காகவுள்ளது. அவர்கள் தமக்குப் பொருத்தமான தொழிற் துறைகளை இனம் கண்டு அதற்கேற்ப பாடநெறிகளைத் தெரிவு செய்து, தொழிலைப் பெற்று முன்னேற்றமடைவதற்கு உதவி வழங்குதல் தொழில் வாழ்க்கைக்கு வழிகாட்டுதலாக அமைகின்றது. உலகளாவிய ரீதியில் கின்ஸ்பேக், றொபேட் பொக்கின், ஆன்றோ, ஹெலன்ட் டொனால்ட் ஆகியோர் தொழில் வாழ்க்கை தொடர்பான கொள்கைகளை முன் வைத்துள்ளனர்.

**வினாக்கள்:-**

1) ஆற்றுப்படுத்தல் சீர்மியத்துக்கான ஆசிரிய வகிபாகங்களை வரிசைப்படுத்துக?

2) கற்பிப்பவர் என்ற நிலையிலிருந்து ஆற்றுப்படுத்துபவர் என்ற ஆசிரிய செயலாற்றுகை மாற்றத்துக்கான காரணங்கள் எவையாகவுள்ளன.?

3) ஆசிரியர் மிக உயர்ந்த மனிதத்துவம் பொருந்தியவராக இருக்க வேண்டியதன் காரணங்களை ஆராய்க?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயத்தில் நூலாசிரியரின் வழிகாட்டலில் கல்வி உளவியல் அடிப்படைகளினூடாக மாணவர் திறன்களை வெளிக்காட்டும் செயற்திட்ட ஆவணம் வெளியிடப்-படல்.

கைதடி முதியோர் இல்லத்தில் முதியோர்களை உளவியல் ரீதியாக அணுகி மகிழ்வித்தல் என்ற செயற்திட்டத்தை நூலாசிரியர், யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி கல்வியியலாளர், முகிழ்-நிலை ஆசிரியர்கள் நிறைவேற்றிய போது

நூலாசிரியர் வடமராட்சி ஆசிரிய நிலையத்தில் ஆசிரியர்களுக்கான ஆற்றுப்படுத்தல் சீராமியத்-திற்கான உளவியல் செயலமர்வை நடாத்துகின்றமை.

கைதடி நவீல்ட் பாடசாலை மாணவர்களின் உள ஆற்றலை மேம்படுத்தும் செயற்திட்டத்தை நூலாசிரியர் நிறைவேற்றுகின்றமை.



அமரர் பேராசிரியர் நந்தி சிவஞானசுந்தரம் அவர்களுடன் இணைந்து நூலாசிரியர் ஆசிரியர்களுக்கான உளவியல் ஆற்றுப்படுத்தல் நிகழ்வை நூலாசிரியர் மேற்கொள்கின்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப் பிரிவு
நூலக சேவை
யாழ்ப்பாணம்

## உசாவிய துணை நூல்கள்
## சர்வதேச வலைப்பின்னல் முகவரிகள்

1. David Moshman - Adolescent Psychology Development – London – 1999

2. Skiner. B.F - About Behaviourism – New york – 1960

3. Erikson . E.H - Identity – New York – 1968

4. Harris . K - Alexander. P.A – Integrated constructivist Education; challenge and reality – (1998)

5. Siegel. H - Educating reason; Rationality, critical thinking and Education – London – 1988

6. Intement - www. unicef-org-website

7. Bee, Helen - The Developing Child– New York – 1985

744900

KOHA JPL

166092

கங்கை பிறின்டேர்ஸ்
781 கே.கே.எஸ் றோட் சிவலிங்கப்புளியடி, யாழ் T.P: 0777162554



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. David Moshman - Adolescent Psychology Development – London – 1999

2. Skiner B.F - About Behaviourism – New york – 1950

3. Erikson . E.H - Identity – New York – 1968

4. Harris . K - Alexander. P.A – Integrated constructivist Education; challenge and reality – (1998)

5. Siegel. H - Educating reason; Rationality, critical thinking and Education – London – 1988

6. Internent - www. unicef-org-website

7. Bee, Helen - The Developing Child – New York – 1985


165092



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரைப் பற்றி

## *திரு. பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்கள்*

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, தேசிய கல்வி நிறுவகப்பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களுக்கு உளவியல் தொடர்பான கல்வியியல் கற்கை நெறிகளை நீண்ட காலமாகப் போதித்து வருகின்றார். இத்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பலவற்றை எழுதியுள்ளார். இக்கட்டுரைகள் கல்வி உலகில் வரவேற்பைப் பெற்றதுடன், பல சீர்திருத்தங்களுக்கும் வழிகாட்டியுள்ளன. இத்தகைய கல்விப் பின்புலம் கொண்ட திரு. பா. தனபாலன் "பிரயோக உளவியல்" என்ற நூலை வெளியிடுகின்றமை இன்றைய தேவை ஒன்றினைப் பூர்த்தி செய்வதாகவுள்ளது.

இந் நூலாசிரியர் பேராதனைப்பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தையும், இலங்கைத் தேசிய கல்வி நிறுவகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவையும், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுதத்துவமாணிப் பட்டத்தையும், அகில இந்திய முகாமைத்துவ நிறுவகத்தில் உளவியல் கல்வி தொடர்பான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தொடர்ந்தும் கற்றலில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றார். இது அவரைத் துலங்கும் கல்வியியலாளராக ஒளிர்வித்துக் கொண்டிருக்கின்றது. மேலும் இவர் வழிகாட்டல் ஆலோசனைச் சேவையையும் ஆற்றி வருகின்றார்.

இவர் ஒரு தசாப்தத்திற்கு மேலாக ஆசிரியராகப் பணியாற்றி 2000 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அங்கு விரிவுரையாளராகவும், கல்வியும் தர மேம்பாட்டிற்கும் பொறுப்பான உபபீடாதிபதியாகவும் சிறப்பாக சேவையாற்றி வருகின்றார். இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, அது எதிர் கொண்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு பீடாதிபதி, கலாநிதி தி. கமலநாதன் அவர்களுடன் இணைந்து முகம் கொடுத்து கல்லூரியை வளர்த்து இன்றைய நிலைக்குக் கொண்டு வந்தது வரை இவரது பங்கும், அர்ப்பண சேவையும் முக்கியமானது. கல்வியே அபிவிருத்தியின் இயந்திரமாகக் கருதப்படும் இன்றைய காலத்தில் முழு மூச்சாகக் கல்வியியலில் ஈடுபட்டு, கற்றல் - கற்பித்தல் துறைசார் உயர் கல்வி ஆய்வு மாணவர்களுக்கு சிறப்பாக வழிகாட்டிப் பணியாற்றிவரும் திரு. பா. தனபாலன் அவர்கள் கல்வித்துறையில் மேலும் மிளிர வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை**

*புவியியல் முதுநிலைப் பேராசிரியர்*

*முன்னாள் துணை வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

COVER PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO-13. TEL:2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org